மலர் : 52 இதழ் : 2

தமிழரசு

ஆகஸ்ட் 2021
விலை ரூ. 20/–

செய்தித்துறையின் வெளியீடு

75ஆவது சுதந்திர தின வைரவிழா

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் **திரு. ராம் நாத் கோவிந்த்** அவர்கள் 02.08.2021 அன்று, தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில், முன்னாள் முதலமைச்சர் **முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்** அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

வியத்தகு முன்னேற்றத்தை அனைத்துத் துறைகளிலும் அடையும் இலக்குடன் அயராது உழைத்திடுவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி

இந்தியத் திருநாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“வேற்றுமையில் ஒற்றுமை மற்றும் கூட்டாட்சித் தத்துவம்” ஆகிய முக்கிய அம்சங்கள் கொண்ட உன்னதமான அரசியலமைப்புச் சட்டத்தை இந்தியத் திருநாட்டிற்குத் தந்திருக்கும் சுதந்திரத்தை நாம் பெற்று 75 ஆண்டுகள்! தங்கள் வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி இரவு பகலாகப் போராடிய சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் இந்த நாளில் நாம் அனைவரும் இருகரம் கூப்பி வணக்கம் செலுத்தி, நன்றிக் காணிக்கை செலுத்த வேண்டிய மிக முக்கியமான கடமையில் இருக்கிறோம்.

சுதந்திரப் போராட்ட தியாகிகளின் தியாகம் இன்றைக்கு ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் நெஞ்சத்திலும் குடிகொண்டிருக்கிறது. ஆயுதமின்றி, அறவழி ஒன்றையே தங்களின் தொய்வில்லா போராட்டமாக நடத்திக்காட்டி இந்தியாவிற்கு ஜனநாயகக் காற்றைச் சுவாசிக்கக் கிடைத்த இந்தச் சுதந்திரம் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய அரியதொரு கருவூலம்.

அண்ணல் காந்தியடிகள் தமிழர்களின் பண்பாடுகளை நேசித்தவர். இந்தத் தமிழ் மண்ணை மதித்தவர். அத்தகைய தமிழ்நாடு, பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவிற்கு விடுதலை கிடைக்கும் போராட்டத்திற்கான வியூகங்களை வகுப்பதில் ஒரு முக்கியமான களமாக விளங்கியிருப்பதைச் சுதந்திரப் போராட்டத்தின் வரலாறு முத்தாய்ப்பாகப் பதிவு செய்திருக்கிறது. சுதந்திர தினத்தின் வெள்ளி விழா, பொன் விழாவை மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து கொண்டாடினார். சுதந்திர தினத்தின் பவள விழாவினை மீண்டும் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டாடுவது எனக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கும் பெருமிதம் அளிக்கிறது.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை என்றைக்கும் மதித்துப் போற்றும் பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த நேரங்களில் எல்லாம் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், அவர்களின் வாரிசுகளுக்கும் ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியிருக்கிறது. இந்த ஆண்டு 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அந்தத் தியாகிகளின் தியாக உணர்வினை வணங்கும் பொருட்டு கம்பீரமிக்க நினைவுத்தூண் எழுப்பி சிறப்பித்திருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் கொரோனாவின் பிடியிலிருந்து தமிழ்நாட்டை மீட்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி, அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம், எல்லாருக்கும் எல்லாம் என்ற சீர்மிகு பயணத்தை நோக்கி தமிழ்நாட்டை அழைத்துச் செல்லும் மிகப்பெரிய பொறுப்பை ஏற்று, இந்த 100 நாட்களில் அனைவரும் பாராட்டும் வகையில் விரைந்து முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம் என்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியை இந்தச் சுதந்திர தினத்தன்று தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த பூரிப்படைகிறேன்.

அனைத்துத் துறைகளிலும், வியத்தகு முன்னேற்றத்தை அடையும் இலக்குடன், ஜனநாயகம், மதச்சார்பின்மை, பன்முகத்தன்மை, சமூகநீதி, கூட்டாட்சித் தத்துவம் உள்ளிட்ட அடிப்படை அம்சங்களைச் சிரமேற்கொண்டு செயல்படுத்தி, தமிழ்நாடும், இந்தியத் திருநாடும், எல்லாத் திக்குகளிலும் புகழ்பெற்றிடப் பாடுபடுவோம், அயராது உழைத்திடுவோம் என்று 75ஆவது சுதந்திர தினத்தில் அனைவரும் சபதமேற்போம். வெற்றி பெறுவோம்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2021
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 2

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : tamilarasujournal1@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

“ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.” *– குறள் : 225*

பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைவிடப் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சுதந்திர தின வாழ்த்துச் செய்தி........ 3

✶ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சுதந்திர தினத்திருநாளில் ஆற்றிய உரை–15.08.2021........ 5

✶ தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. **ராம் நாத் கோவிந்த்** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்–02.08.2021........ 13

✶ தலைநிமிரும் தமிழகம்; சாதனை நாட்கள் நூறு........ 26

✶ தமிழ்நாட்டில் முதன்முறையாக காகிதமில்லா நிதிநிலை அறிக்கை சிறப்பம்சங்கள்–13.08.2021........ 35

✶ தமிழ்நாட்டில் முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனியாக நிதிநிலை அறிக்கை–14.08.2021........ 52

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
75ஆவது சுதந்திர திருநாளையொட்டி 15.08.2021 அன்று,
தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில்
தேசியக் கொடியினை ஏற்றி வைத்து
மரியாதை செலுத்தினார்.

சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் ஒருசேர வளர வேண்டும் என்பது நம்முடைய கனவாக இருக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சுதந்திர தினத் திருநாளில் ஆற்றிய உரை – 15.08.2021

தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின்மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் – செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!
கம்பத்தின்கீழ் நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்!
நம்பற்குரியர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்!

நானூறு ஆண்டுகள் பழமை கொண்ட இந்தக் கோட்டையில் இந்திய நாட்டின் மூவண்ணக் கொடியை ஏற்றி வைக்கத் தங்களது உயிரையும், இரத்தத்தையும், வாழ்க்கையையும், செயல்பாட்டையும் வழங்கிய இந்த நாட்டின் தியாகிகள் அனைவருக்கும் நான் எனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன்!

இந்த மாட்சிமை பொருந்திய கோட்டையில் விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே, நீதியரசர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே, காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட காவல் அதிகாரிகளே, சிறப்பு விருந்தினர்களே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளே, அவர்களது குடும்பத்தினரே, மாணவச் செல்வங்களே! வணக்கம்!

இந்தியா தனது 75ஆவது சுதந்திர நாளைக் கொண்டாடும் மகத்தான இப்பொழுதில், கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றும் மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்கிறேன். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடியேற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆகஸ்ட்–15 சுதந்திர நாளன்று முதலமைச்சரும், ஜனவரி–26 குடியரசு நாளன்று ஆளுநரும் கொடியேற்றலாம் என்ற ஆலோசனையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அதனை ஏற்றுக்கொள்ள வைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

15.08.1974 அன்று முதன்முதலாக இந்தக் கோட்டையில் ஒரு முதலமைச்சராகக் கொடியேற்றினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தாலும், அவர்களுக்கும் கொடியேற்றும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுக்கொடுத்த மாபெரும் சுதந்திரச் சிந்தனையாளர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவரை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

இன்று, இந்தியச் சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக்கொண்டு இருக்கிறோம். இது மட்டுமல்ல, இன்னும் ஏராளமான பெருமைகள் இந்த ஆண்டுக்கு உண்டு. தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவினை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்துச் சில நாட்களுக்கு முன்னால் நடத்தினோம். திராவிட இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்ததன் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டுதான். தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தி அவர்கள், மதுரைக்கு வருகை தந்தபோது ஏழைத் தமிழ் மக்களைப் பார்த்து தனது உயர்ரக ஆடையைக் களைந்து அரையாடையை

உடுத்தத் தொடங்கியதன் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான். செக்கிழுத்தச் செம்மல், கப்பலோட்டிய தமிழன் என்றெல்லாம் போற்றப்படும் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு 150ஆவது பிறந்தநாள் கொண்டாட இருப்பதும் இந்த ஆண்டுதான். சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே, ஆனந்தச் சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதி மறைந்து 100 ஆண்டுகள் ஆகிறது இந்த ஆண்டோடு. இப்படி, எவ்வளவோ வரலாற்றுப் புகழ் பெற்ற ஆண்டாக இந்த 2021 அமைந்துள்ளது.

தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்படும் பெருமிதம் என்னவென்றால் நமது அரசு ஆறாவது முறையாக ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து இருக்கிறது. எனது பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டுக் காலம் உழைத்த நான், தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளேன் என்ற மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

75ஆவது சுதந்திர நாளை நினைவுகூறும் வகையில் மிகப்பெரிய தூணை இன்று உருவாக்கி இருக்கிறோம். அது வெறும் கல்லாலும், சிமெண்டாலும், செங்கல்லாலும் கட்டப்பட்டது அல்ல. நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களின் இரத்தத்தால், எலும்பால், சதையால் உருவாக்கப்பட்டதுதான் அந்தத் தூண். சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே விடுதலைக்காகப் போராடிய மண்தான் நம்முடைய தமிழ் மண்.

பூலித்தேவன், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், ஊமைத்துரை, தீரன் சின்னமலை, சின்ன மருது, பெரிய மருது, வ.உ.சி., மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா, டி.எஸ்.எஸ். ராஜன், தில்லையாடி வள்ளியம்மை, தந்தை பெரியார், திரு.வி.க., நாமக்கல் ராமலிங்கம், ம.வெ.சிங்காரவேலர், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், திருப்பூர் குமரன், இராஜாஜி, காமராசர், ஏ.எம். ஈஸ்வரன், ஓமந்தூர் ராமசாமி, ஜீவா, கேப்டன் லட்சுமி, ம.பொ.சிவஞானம், கே.பி. சுந்தராம்பாள் இத்தகைய தமிழ்நாட்டுத் தியாகிகளின் மூச்சுக்காற்றைக் கொண்டு கட்டப்பட்டதுதான் இந்த நினைவுத் தூண்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்புக் குறித்த முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரித்துத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு உறுதியாகச் செய்யும். நான் சொன்ன தியாகிகள், தமிழ்நாட்டுத் தியாகிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் தியாகிகள். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அந்த வகையில், **மாநில அரசால் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயிலிருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயிலிருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆகவும் உயர்த்தப்படும்** என்பதை

சுதந்திரத் திருநாள் விழாவில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் சிறப்புமிகு பேராசிரியர் முனைவர் மு. இலட்சுமணன் அவர்களுக்கு டாக்டர் அ.ப.ஜெ. அப்துல்கலாம் விருது

இந்த வேளையில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு விடுதலைத் தியாகிகளை நினைவு கூர்வதில் நமது அரசு எப்போதும் தவறியது இல்லை. சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது 1962ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்து நிதியைத் திரட்டிக் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

1971ஆம் ஆண்டு இந்தியாவை பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்! அதோடு நில்லாது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்.

அப்போது அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி ரூபாய். அதில், 6 கோடி ரூபாயை வழங்கியது தி.மு.க. அரசு. அந்தப் போரில் வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு.

1999ஆம் ஆண்டு கார்கில் போரின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு.

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்குக் கோட்டை, பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது, காமராசர் மணிமண்டபம், இராஜாஜி நினைவாலயம், தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம், வ.உ.சி. இழுத்தச் செக்கு நினைவுச் சின்னம் ஆனது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்து பயணம், தியாகிகள் மணிமண்டபம், சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம், பூலித்தேவன் நினைவு மண்டபம், தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு, மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு, நேதாஜிக்குச் சிலை, கக்கனுக்குச் சிலை, சிப்பாய்க் கலகத்துக்கு நினைவுத்தூண். இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளை நமது அரசு எப்பொழுதும் போற்றி வருகிறது.

அந்த வரிசையில், **தியாகத்தின் திருவுருவான வ.உ.சி. அவர்களின் 150ஆவது பிறந்தநாளை அரசு சார்பில் எழுச்சியோடும் உணர்ச்சியோடும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம்.** வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சுதேசி என்பது ஏட்டளவில் மட்டுமல்ல, நம்முடைய சிந்தனையாக, செயலாக மாற வேண்டும் என்று நினைத்தவர் வ.உ.சி. அவர்கள். அரசியல் விடுதலை மட்டும் போதாது, பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று நினைத்தவர். அனைத்து விதத்திலும் தன்னிறைவு பெற்ற

சுதந்திர திருநாள் விழாவில்
மறைந்த மருத்துவர் ப. சண்முகப்பிரியா அவர்களுக்கு
துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருது

நாடாக நாம் மாற வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய கனவைக் கொண்ட அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. ‘எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கிச் செல்லட்டும் இந்த வையம்’ என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க உறுதி கொண்டுள்ளது இந்த அரசு.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலமானது நமக்கு ஏராளமான படிப்பினைகளைக் கொடுத்திருக்கிறது. மருத்துவ நெருக்கடி, மனநல நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, சூழல் நெருக்கடி எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் மக்களைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டது கொரோனா. இதில் இருந்து மீட்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளுக்கு அடித்தளமான மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள், அரசின் நிருவாகத்தின் அனைத்து அலுவலர்கள் அனைவரையும் இந்த நாளில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்தளவுக்கு மக்கள் மீண்டு வர உங்களது அர்ப்பணிப்புதான் காரணம்.

தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்று 101ஆவது நாள். தமிழ்நாடு அரசின் நிதிநிலை தொடர்பான வெள்ளை அறிக்கையையும், 2021–2022ஆம் ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்த நிலையில், தமிழ்நாட்டின் நிதிநிலையைத் தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இத்தகைய நிதிச் சுமையோடு முதலமைச்சராக முதன் முறையாக பொறுப்பேற்ற இந்த அரசு கொரோனா என்கிற கொடிய நோய்த்தொற்றை மேலாண்மை செய்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில், பல்வேறு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

கொரோனாவாலும், ஊரடங்காலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் 4 ஆயிரம் ரூபாய் இரு தவணைகளில் வழங்கப்பட்டது, 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பு வழங்கப்பட்டது. கொள்முதல் விலையைக் குறைக்காமல், ஆவின் பாலின் விற்பனை விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைப்பு. பெட்ரோல் விலை மூன்று ரூபாய் குறைப்பு. மகளிர், திருநங்கையர், மாற்றுத்திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம். தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்களுக்கு உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை மூலமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமனம்.

தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தத் ‘தகைசால் தமிழர்’ என்ற பெயரில் புதிய விருது உருவாக்கப்பட்டு, இளம் வயது முதல் தற்போது வரை பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பல்வேறு தியாகங்களைச் செய்த மாபெரும் பொதுவுடைமைப் போராளியும் முதுபெரும் தலைவருமான திரு. சங்கரய்யா அவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டு இருக்கிறது.

போதிய திரவ ஆக்சிஜன், ஆக்சிஜன் படுக்கைகளைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து காட்டியிருக்கிறோம். 3 கோடி மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்கிறோம். தடுப்பூசி வீணடிக்கப்பட்ட

நிலையை மாற்றி கூடுதல் தடுப்பூசிகள் செலுத்தி இந்தியாவுக்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியுள்ளோம்.

உலகத்தரத்தில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கிண்டி கிங் நோய்த்தடுப்பு வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.

தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், சிகிச்சைகள், மருந்துகள், இயன்முறை சிகிச்சை உள்ளிட்ட மருத்துவச் சேவைகளை நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கும் முன்னோடித் திட்டமான “மக்களைத் தேடி மருத்துவம்” தொடங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டமாக இருந்தாலும், அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக் கூட்டமாக இருந்தாலும் ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் தமிழ்நாடு என்பது ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் நம்முடைய கனவாக இருக்க வேண்டும். அனைவரின் கனவையும் நிறைவேற்ற நமது அரசு பாடுபட்டு வருகிறது.

அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால் பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது, ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள். அதற்காகத்தான் போராடினார்கள். அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள்.

சிறை சென்றோர், செக்கிழுத்தோர், கல்லுடைத்தோர், அடி உதை பட்டோர், அவலங்களைச் சுமந்தோர், உயிரைக் கொடுத்தோர் ஆகிய அனைவரும் மேன்மைமிகு தமிழ்நாட்டை உருவாக்க நினைத்தார்கள். அத்தகைய தமிழ்நாட்டை உருவாக்க நினைக்கும் தமிழ்நாடு அரசுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். உறுதுணையாக இருக்க வேண்டும்.

மகாத்மா காந்திக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு ஆழமானது. தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய அத்தனைப் போராட்டங்களிலும் தமிழர்கள் முன்னின்றனர். அங்கு நடைபெற்ற இனவெறியின் உக்கிரத்தைத் தாங்கிய தமிழர்கள் தன்

உடன்பிறந்த சகோதரர்கள் என்று மகாத்மா காந்தி அறிவித்தார். தமிழர்கள் மகாத்மா காந்தியை நெஞ்சார நேசித்தார்கள்.

மகாத்மா காந்தியும் தமிழர்கள் மட்டுமின்றித் தமிழ் மொழி மீதும் அளவில்லா அன்பு கொண்டிருந்தார். ஐரோப்பாவிற்கு எப்படி இத்தாலிய மொழியோ, அப்படி இந்தியாவிற்குத் தமிழ் மொழி என அறிவித்து லண்டன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விருப்பப் பாடமாகச் சேர்க்க வேண்டும் என்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் வசிப்பவர்கள் நம் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தி தன் வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரைக்கு வந்த மகாத்மா காந்தியை, மேலாடை துறந்த மகாத்மாவாகத் தமிழ்நாடு வழியனுப்பி வைத்தது.

அதை நினைவுகூறும் வகையில் மகாத்மா குறித்த அரிய கலைப்பொருட்களைக் கொண்ட மதுரை மகாத்மா காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும், இளைய தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில் ஆறு கோடி ரூபாய் செலவில் நவீன முறையில் புதுப்பிக்கப்படும். சாதி, மதம், இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப் பதிய வைக்க இன்று சூளுரைப்போம்! அனைவருக்கும் சுதந்திர நாள் நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்நாடு! வாழ்க இந்தியா!

வணக்கம்!

❖ ❖ ❖

75ஆவது சுதந்திரத் திருநாள் விழா

ஆளுநர் மாளிகை, சென்னை

15.08.2021

சுதந்திர தின வரவேற்பு நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருக்குறள் பன்னாட்டுப் பதிப்புப் புத்தகங்களை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.

சுதந்திர தின வரவேற்பு நிகழ்ச்சியில், கொடிநாள் வசூலில் சாதனை படைத்தமைக்காக விருது பெற்றவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

முதுபெரும் தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்களுக்குத் "தகைசால் தமிழர்" விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வழங்கினார் – 14.08.2021

தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில், "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருதினை உருவாக்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இவ்வாண்டிற்கான "தகைசால் தமிழர்" விருதிற்கு, இளம் வயதிலேயே பொதுவாழ்க்கையில் ஈடுபட்டு, மாணவத் தலைவராகவும், சுதந்திரப் போராளியாகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் அரும்பணியாற்றியதுடன், தமிழ்நாட்டிற்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி, சமீபத்தில் 100 வயதை அடைந்த தமிழர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.08.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் உள்ள மூத்த தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, தமிழ்நாட்டிற்கும், தமிழினத்தின் வளர்ச்சிக்கும் மாபெரும் பங்காற்றியதற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு.என். சங்கரய்யா அவர்களுக்கு இவ்வாண்டிற்கான "தகைசால் தமிழர்" விருதினை வழங்கி, கௌரவித்தார். மேலும், "தகைசால் தமிழர்" விருதுடன், ரூ.10 இலட்சத்திற்கான காசோலையையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்.

மூத்த தலைவர் திரு.என்.சங்கரய்யா அவர்கள் "தகைசால் தமிழர்" விருதுடன் வழங்கப்பட்ட ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை, கொரோனா நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழைச் செம்மொழியாக அங்கீகாரம் பெறச் செய்தவர் "கலைஞர்"

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் **திரு. ராம் நாத் கோவிந்த்** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் – 02.08.2021

தமிழக ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்களே, தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களே, சபாநாயகர் திரு. அப்பாவு அவர்களே, துணை சபாநாயகர் திரு. கு.பிச்சாண்டி அவர்களே, தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் பெரியோர்களே, தாய்மார்களே வணக்கம்!

தமிழில் சில வார்த்தைகளுடன் எனது உரையைத் தொடங்க விரும்புகிறேன்.

இன்றைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் கலைஞர் திரு. மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததில் மகிழ்ச்சியடைகிறேன். உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் மிக்க நாள்! முன்னர், மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சில் என்று பெயரிடப்பட்டிருந்த அவையின் நூற்றாண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஆகஸ்ட் மாதம் என்பது நமது தேசிய நாட்காட்டியில் சிறந்ததொரு மாதமாகும். ஏனெனில், இது நமது சுதந்திர தினத்தின் ஆண்டு நிறைவையும் குறிக்கிறது. விடுதலைக்குப் பிறகான ஆண்டுகளில், தேசம் பல துறைகளில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. மக்களும் தலைவர்களும் இணைந்து மேற்கொண்ட பணிகளினால் இது சாத்தியமானது.

மெட்ராஸ் சட்டமன்ற கவுன்சிலின் வரலாறு, 1861ஆம் ஆண்டு காலத்தையது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆலோசனை அமைப்பாக அக்காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்புதான், 1921ஆம் ஆண்டில், சட்டத்தை இயற்றும் சட்டப்பேரவையாக உருவாக்கப்பட்டது. காலனித்துவ ஆட்சியின்கீழ், அத்தகைய அமைப்பு செயல்படுவதற்கு, பல வரையறைகளும், சவால்களும் நிச்சயம் இருந்தன. சாதி, சமூகம் மற்றும் பிற அம்சங்களின் அடிப்படையில் ஏராளமான தனித்தனித் தொகுதிகள் இருந்தன. ஓரளவேயாக இருந்த போதிலும், அது ஒரு பொறுப்பான அரசாங்கத்தை நோக்கிய நகர்வாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடைமுறையிலிருந்த ஜனநாயகம், அதன் நவீன வடிவத்தில், மீண்டும் திரும்பியது.

தமிழ்நாடு, கேரளா, கருநாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, லட்சத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய மெட்ராஸ் பிரசிடென்சியின் மக்களால் இந்தப் புதிய தொடக்கம் வரவேற்கப்பட்டது.

விடுதலைப் போராட்ட இயக்கத்தால் வடிவமைக்கப்பட்ட இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்களின் கனவுகளும், விருப்பங்களும் புதிய சட்டமன்றம் மூலம் வெளிப்பட முடிந்தது. மக்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் ஒரு தளமாக, ஆரம்பக் கட்டத்தில் மக்கள் வாக்குகளை வென்ற நீதிக்கட்சி இருந்தது.

சட்டமன்ற கவுன்சில், பின்வரவிருக்கும் காலத்திற்கான பல சட்டங்களை இயற்றியது. அதன் ஆரம்பக் காலகட்டங்களில் அவை பல மாற்றங்களைச் சந்தித்தன. ஜனநாயக உணர்வு மாநிலச் சட்டமன்றத்தின் வழிகாட்டும் ஒளிவிளக்காக உள்ளது. சமூகத்தின் நலிவுற்றப் பிரிவினருக்கு அதிகாரம் அளிப்பதற்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் பிரதிபலித்த பல முற்போக்குச் சட்டங்களின் நீரூற்றாக இந்தச் சட்டங்கள் இருந்தன என்று சொல்வது தவறல்ல. மெட்ராஸ் சட்டமன்றம், ஒரு முழுமையான பிரதிநிதித்துவ ஜனநாயக வடிவ ஆட்சியாளுமைக்கான விதைகளை விதைத்தது. நாட்டு விடுதலைக்குப் பிறகு இதற்கான பலன்கள் கிடைத்தன.

ஆளுகையில் கவனம் செலுத்தி ஏழைகளை மேம்படுத்துவதற்கும், சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்த பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. வறுமைக் கோட்டில் வாழ்ந்த மக்களின் நலனை இலக்காகக் கொண்டு, இப்பகுதியில், அரசியலும் நிருவாகமும் நேர்மறையான, பகுத்தறிவு வாய்ந்த உள்ளடக்கம் கொண்டதாக உருவாயின. தேவதாசி முறையை ஒழித்தல், விதவை மறுமணம், பள்ளிகளில் மதிய உணவு, நிலமற்றவர்களுக்கு விவசாய நிலம் விநியோகம் ஆகியவை சமூகத்தை மாற்றியமைத்த சில புரட்சிகர எண்ணங்களாகும். இங்கு யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்தச் சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டு மக்களின் முற்போக்குச் சிந்தனையை எடுத்துக்காட்டுகின்ற வகையில், மிகச்சிறந்த தமிழ்க்கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் ஒரு சில வரிகளை இங்கே நான் மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

மந்திரம் கற்போம் வினைத்தந்திரம் கற்போம்
வானை யளப்போம், கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தித்தெரு பெருக்கும் சாத்திரம் கற்போம்

இதை இவ்வாறு விளக்கலாம்.

வேதம், அறிவியல் இரண்டையும் கற்றுக்கொள்வோம், நாம் வானத்தையும், பெருங்கடல்களையும் ஆராய்வோம், நிலவின் இயல்புகள் என்னவென்று நாம் தெரிந்துகொள்வோம், நமது தெருக்களைத் தூய்மையாக்குவது குறித்தும் அறிந்து கொள்வோம்.

மண்ணின் மிகச்சிறந்த தலைமைகளைச் சட்டமன்றத்தில் கௌரவிக்கும் பாரம்பரியம் உள்ளது என்பதை அறிவது உண்மையில் மகிழ்ச்சியளிக்கிறது. திருவள்ளுவர், மகாத்மா காந்தி, சி.ராஜகோபாலாச்சாரி, சி.என்.அண்ணாதுரை, கே.காமராஜ், ஈ.வி.ராமசாமி, பி.ஆர்.அம்பேத்கர், உ.முத்துராமலிங்கத் தேவர், முஹம்மது இஸ்மாயில் சாஹிப், எம்.ஜி.ராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா, எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, ப.சுப்பராயன் மற்றும் ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் போன்ற பல தலைவர்களின் படங்கள் இப்பேரவையில் ஏற்கெனவே உள்ளன. இப்போது இந்தப் புகழ்பெற்ற மண்டபத்தில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் மக்கள் நலனுக்காக அர்ப்பணித்த திரு. மு.கருணாநிதியின் உருவப்படமும் இருக்கும்.

நான் இங்கு வந்தபோது, காந்தியடிகளின் மனசாட்சிக் காவலராகத் திகழ்ந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரர்களில் சிறந்த தலைவருமான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன். குடியரசுத் தலைவர் மாளிகையில் முதலில் இடம்பெற்ற இந்தியர் அவர். அவருடைய வருகை இந்த மதிப்பிற்குரிய அரங்கினையும் அலங்கரித்தது. அவர் சென்னை மாநிலத்தின் முதல் பிரதமர் அல்லது முதல்வர் ஆவார். அவருக்குப் பின் வந்தவர்களும், முன்மாதிரியாகத் திகழ்ந்த அரசியல் தலைவர்கள். இருப்பினும், இராஜாஜிக்குப் பின்வந்தவர்களில், திரு. கருணாநிதி அவர்கள்தான் நீண்ட

காலம் ஆட்சி செய்தார். இதனால் தமிழ்நாட்டில் ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.

இந்தியா, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, 'கலைஞர்' தனது இளமைப் பருவத்திலேயே, தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். அவர் சமீபத்தில்தான் நம்மை விட்டுப் பிரிந்தார். உயர்ந்த இலட்சியங்களுடன் கூடிய சிறுவனாக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஏழை, எளிய மக்களுக்காக அவர் பணியாற்றத் தொடங்கியபோது, நீண்டகாலமாக வெளிநாட்டு ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்தியா, அந்நிய ஆட்சியாளர்களால் சுரண்டப்பட்டு வறுமையிலும் கல்வியறிவின்மையாலும், சிக்கலிலிருந்தது. அவர் தமது இறுதி மூச்சின்போது, இந்த மண்ணும் இதன் மக்களும் அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்துள்ளதாகத் திருப்தி அடைந்திருக்க வேண்டும். தமது நீண்ட கால, ஆக்கப்பூர்வமான வாழ்க்கையில் தாம் விழித்திருக்கும் ஒவ்வொரு கணத்தையும் மாநில மக்களின் சேவைக்காகவும், தேசத்தின் சேவைக்காகவும் செலவிட்டோம் என்பதும் அவருக்கு திருப்தியளித்திருக்கும்.

தமிழ் இலக்கியம் மற்றும் சினிமாவுக்கு அவர் அளித்த பங்களிப்புகள் பற்றி நான் என்ன சொல்ல முடியும்? எனக்குத் தெரிந்த விஷயம் என்னவென்றால், மொழி மீது ஆர்வம் கொண்ட அரசியல் தலைவர்கள் வெகு குறைவு. அவரைப் பொறுத்தவரை, அவரது தாய்மொழி வழிபாட்டுக்குரியது. தமிழ், நிச்சயமாக, மனிதக்குலத்தின் மிகச்சிறந்த, மிகப் பழமையான மொழிகளுள் ஒன்றாகும். உலகம் முழுமையும் அதன் வளமான பாரம்பரியத்தில் பெருமை கொள்கிறது. ஆனால், அது செம்மொழியாக அதிகாரப்பூர்வ அங்கீகாரம் பெறுவதை உறுதி செய்தவர் கருணாநிதி. கலைஞர் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்ந்தார். நமது தேசிய இயக்கத்தின் தலைவர்களுடன் நமக்கு இருந்த கடைசி இணைப்புகளில் அவரும் ஒருவர்.

விடுதலை பெற்று 75ஆவது ஆண்டு நிறைவை நாடு கொண்டாடும்போது, இத்தகைய தலைவர்கள் குறித்தே எனது எண்ணங்கள் செல்கின்றன. நமது தேசிய இயக்கம் 1857 அல்லது அதற்கு முன்பே தொடங்கி 1947 வரை நடைபெற்றது. இந்தக் காலகட்டத்தில், தீவிரவாதிகளும், புரட்சியாளர்களும் இருந்தனர். சமாதானவாதிகளும், அரசியலமைப்புவாதிகளும் இருந்தனர். அவர்கள் வெவ்வேறு முறைகளைக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு வெவ்வேறு தொலைநோக்குப் பார்வைகள் இருந்தன. ஆனால், அவர்கள் தாய்நாட்டின் மீது கொண்ட மதிப்பிலும், மரியாதையிலும் ஒன்றுபட்டிருந்தனர். ஒவ்வொருவரும் அவரவர் வழியில், இந்தியத் தாய்த்திரு நாட்டிற்குச் சேவை செய்யப் பாடுபட்டனர். ஒரு ஆற்றில் வெவ்வேறு கிளை நதிகள் ஒன்றிணைவது போல, அவர்கள் அனைவரும் நாட்டு விடுதலைக்காக ஒன்றிணைந்தனர்.

அவர்கள் அனைவரும் காந்திஜியில் ஒரு சங்கமத்தைக் கண்டனர். மகாத்மா காந்தி நமது கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தில் சிறந்தவைகள் அனைத்தின் ஆளுமையாகவும் திகழ்ந்தார். அது மட்டுமல்லாமல், பல மேற்கத்தியச் சிந்தனையாளர்களின் கருத்துக்களையும் மேம்படுத்தினார். அவருடன் தேசபக்தர்கள், வழக்கறிஞர்கள், அறிஞர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள், மத, ஆன்மீகத் தலைவர்கள் மற்றும் பலர் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஈடு இணையற்றவர்கள். டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரைப் பற்றிச் சிந்தியுங்கள். எத்துணை உயர்ந்த மேதை!! எத்தகைய தொலைநோக்கு! ஆனால் வரலாற்றுப் புத்தகங்களில் எழுதப்பட்ட ஒவ்வொரு பெயருடனும், எண்ணற்ற மற்றவர்கள் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. அவர்கள் ஒரு சுதந்திர நாட்டில் வாழ்வதற்காகத் தங்கள் வசதிகளை, தொழில்களை, சில சமயங்களில் தங்கள் உயிரையே தியாகம் செய்தனர்.

அந்தச் சில பத்தாண்டுகள், பூமி இதுவரை கண்டிராத மிகச்சிறந்த தலைமுறைகளை உருவாக்கியது என்று நான் நம்புகிறேன். அவர்களுக்கு, இந்த நாடு எப்போதும் கடன்பட்டிருக்கும். அவர்களுக்கு, நாம் செலுத்தக்கூடிய ஒரே அஞ்சலி, அவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் இலட்சியங்களால் தொடர்ந்து ஊக்கம் பெறுவதாகும். அவர்கள் நமக்கு விடுதலையைப் பரிசளித்தனர். ஆனால், அவர்கள் நமக்கு, பொறுப்பையும் கொடுத்தார்கள். அவர்களின் தொலைநோக்குப் பார்வை வடிவம் பெறுகிறது, ஆனால், அது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பங்கை ஆற்றியது போல், நாட்டைப் புதிய உயரத்திற்குக் கொண்டு செல்வதில் நாம் ஒவ்வொருவரும் நம் பங்கை ஆற்ற வேண்டும்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் புகழாரம்



- நீண்ட காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்து தனி முத்திரை பதித்தவர் கலைஞர் மு.கருணாநிதி.
- ஆளுகையில் கவனம் செலுத்தி ஏழைகளை மேம்படுத்துவதற்கும், சமூகத் தீமைகளை ஒழிப்பதற்கும், ஜனநாயகத்தின் வேர்களை ஊன்றி வளரச் செய்த பெருமை தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு உண்டு.
- தமிழ்நாட்டை யார் ஆட்சி செய்தாலும் மாநிலத்தின் நலன் என்ற கருத்தாக்கமே இந்தச் சட்டமன்றத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.
- பல்வேறு தலைவர்களின் படங்கள் இடம்பெற்றுள்ள இப்பேரவையில் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மாநிலத்தின் நலனுக்காக அர்ப்பணித்த திரு.கருணாநிதியின் உருவப்படமும் இடம்பெறுவது சிறப்பாகும்.
- இராஜாஜிக்குப் பின் வந்தவர்களில் முத்தமிழறிஞர் கலைஞர் நீண்ட காலம் தமிழ்நாட்டை ஆட்சி செய்து ஒரு தனி முத்திரை பதித்துச் சென்றார்.
- தமிழ், இலக்கியம், சினிமா தவிர்த்துத் தமிழைச் செம்மொழியாக அங்கீகாரம் பெறச் செய்தவர் கலைஞர்.

நிகழ்காலத்தையும், எதிர்கால முன்னேற்றத்தையும் புரிந்துகொள்ள, கடந்த காலத்துடன் தொடர்ந்து ஈடுபடுமாறு நான் இளைஞர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மகாத்மா காந்தி, சுப்பிரமணிய பாரதி மற்றும் பிறரின் வாழ்க்கையில், உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கான பதில்களைக் காண்பீர்கள். நமது சமீபத்திய வரலாற்றில் இளம் தலைமுறையினர் அதிக ஆர்வம் காட்டுவதை நான் காண்கிறேன். தெரிந்த மற்றும் தெரியாத விடுதலைப் போராட்ட வீரர்களுடன் தொடங்கிய பணிகள் தொடரும் என்ற நம்பிக்கையை அவர்கள் எனக்கு அளிக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் இந்தியா தனது ஞானத்தால் உலகிற்கு வழிகாட்டும்.

இந்த நன்னாளில் தமிழக மக்களை வாழ்த்துகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

நன்றி. ஜெய் ஹிந்த்!

❖ ❖ ❖

மக்களின் இதயங்களை வென்ற “மக்களின் முதல்வர் கலைஞர்”

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம் – 02.08.2021

“**த**மிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்று மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத் திறப்புவிழாவில் கலந்துகொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்”.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிப்பதற்காகவும், தமிழ்நாட்டின் தவப்புதல்வரான டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைப்பதற்காகவும், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று வருகை புரிந்திருப்பதைக் கண்டு நாம் அனைவரும் பெருமிதம் கொள்கிறோம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூற்றாண்டு விழாவுடன் தொடர்புடைய மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இம்மாபெரும் அவையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நாளில், இப்பேரவையில் நிலையான தடம்பதித்துச் சென்ற அனைத்து ஆன்றோர்களையும், சான்றோர்களையும் உளப்பூர்வமாக வணங்குகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதன்மையான மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை இயற்றுவதற்கு அவர்களின் பேரார்வமும் தொலைநோக்குச் சிந்தனையுமே அடிப்படைக் காரணங்களாய் அமைந்தன. இச்சட்டங்கள்

அனைத்தும் தமிழ்நாட்டை வளமான மாநிலமாக உருவாக்குவதற்கு வழிகோலின.

எழுதப்பட்ட அரசமைப்பைக் கொண்ட மக்களாட்சி மலரும் நாடுகளில் இந்தியா உலகிலேயே மிகப்பெரிய நாடாகும். சட்டமியற்றுதல் என்பது பல்வேறு சட்டங்களால் செம்மைப்படுத்தப்படும் நிதானமான மற்றும் திடமாகப் பரிணமிக்கும் செயலாகும். முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுதல் குழுவானது, தொடக்கத்தில் மதராசு சட்டமன்ற மேலவை என்ற பெயரில் 1921ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில், 2021ஆம் ஆண்டு நூற்றாண்டாகும். முதல் சட்டமியற்றுதல் குழுவானது தமிழ்நாட்டில், நலிவடைந்த பிரிவினர் மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையானது, திரு. பனகல் ராஜா, திரு. சி. ராஜகோபாலாச்சாரி, திரு. டி பிரகாசம், திரு. கே. காமராஜ், திரு. எம். பக்தவத்சலம், டாக்டர் சி.என் அண்ணாதுரை, டாக்டர் மு. கருணாநிதி, டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன், செல்வி டாக்டர் ஜெ ஜெயலலிதா மற்றும் பல பெருந்தலைவர்களைக் கண்டுள்ளது.

நவீன இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் 1927ஆம் ஆண்டு சென்னை சட்டமன்ற மேலவையில் இணைந்ததை நான் இங்கு நினைவுகூர விழைகிறேன். 1921ஆம் ஆண்டில் பெண்களுக்கான வாக்குரிமை தீர்மானம் கொண்டு வந்ததற்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்ட சட்டமன்ற மேலவைத் தொடங்கப்பட்டு 100ஆவது ஆண்டு நிறைவு அடைந்ததை இன்றைய நாளில் நாம் பெருமிதத்துடன் நினைவுகூருகிறோம்.

‘அறிஞர் அண்ணா’ என்று அனைவராலும் அறியப்பட்ட டாக்டர் சி.என். அண்ணாதுரை அவர்கள் ஊக்கமளிக்கும் எழுச்சிமிகு தலைவராகத் திகழ்ந்தார். அவருடைய சொற்பொழிவு ஆற்றல் மற்றும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று முக்கியக் கொள்கைகள் குறித்த மதிப்பு, பாரெங்கும் பாராட்டைப் பெற்றது. தமிழக மக்களின் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் வகையில், மெட்ராஸ் என்பதைத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்ததில் அறிஞர் அண்ணாதுரை அவர்கள் முக்கியப் பங்கு வகித்தார்.

இந்தச் சட்டமன்றத்தில் தங்கள் பணியின் மூலம் இந்தியாவில் வலுவான நாடாளுமன்றப் பாரம்பரியத்தையும், மக்களாட்சியின் மாண்பினையும் நிலைநிறுத்துவதற்குப் பங்காற்றியத் தலைவர்கள் மற்றும் பல சட்டமன்ற உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டதற்குத் தமிழ்நாடு உண்மையிலேயே பெருமை கொள்ளலாம்.

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு ஒரு பெரிய வரலாறு உண்டு. நாட்டின் பழமையான மற்றும் தொடக்கத்தில் அமைந்த சட்டமன்றங்களில் ஒன்றாக இருப்பதால், பல முக்கியச் சட்டங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அச்சட்டங்களில் சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், கல்வி, வறுமை ஒழிப்பு, மூன்றாம் பாலினத்தவர் உள்ளிட்ட விளிம்புநிலையிலுள்ள மக்களின் நலன் போன்ற முன்னோடித் திட்டங்களும் இதில் அடங்கும். இவற்றில் பல திட்டங்கள் நம் நாட்டின் கொள்கைகள் மற்றும் திட்டப்பணிகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன.

டாக்டர் மு.கருணாநிதியின் பெருமையை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். ‘கலைஞர்’ என்றும் ‘முத்தமிழறிஞர்’ என்றும் அழைக்கப்படும் கலைஞர் அவர்கள் தன்னுடைய பேச்சுத் திறமையால் மக்களை ஈர்த்தார். ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்ததும், தனது அரசியல் வாழ்க்கையில் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றதும் உண்மையில் ஒரு குறிப்பிடத்தக்கச் சாதனையாகும்.

அவர் தனது இளம் பருவமான 14ஆவது வயதிலேயே அரசியலில் நுழைந்து, பதின்மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1957ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரையில் அவர் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் அவர் வெற்றிவாகை சூடினார். அவருடைய அரசியல் மதிநுட்பத்திற்காகவும், சீரிய சிந்தனைத் திறனுக்காகவும் இந்தியாவிலுள்ள அனைத்து அரசியல் தலைவர்களால் அவர் போற்றப்படுகிறார். அவர் இறக்கும் வரை இந்தச் சபையின் உறுப்பினராக இருந்தார்.

ஒரு பிரதிநிதித்துவ மக்களாட்சியில், சட்டமன்றம் மக்களின் கண்கள், காதுகள் மற்றும் குரலாகச் செயல்படுகிறது என்று சிறந்த பாராளுமன்ற உறுப்பினரான ஜான் ஸ்டூவர்ட் மில் கூறினார். சட்டமன்றம் பொது விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது. சட்டமன்றம், கூட்டு முடிவெடுக்கும் முறையின்கீழ், செயல்படுகிறது. அலுவல் சார்ந்த சட்டத்தை உருவாக்கும் திறனுடன் கூடுதலாக, பெரும்பாலான சட்டமன்றங்கள் சிக்கலான பிரச்சினைகளை எளிதாக்குவதன் வாயிலாகவும், கொள்கை விருப்புரிமைகளை வரையறுப்பதன் வாயிலாகவும், கல்விப் பங்காற்றுகின்றன. இந்தப் பின்னணியில், பரந்த அறிவாற்றல் கொண்டு பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மதிப்பிற்குரிய டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய பணிகளை நாம் பாராட்ட வேண்டும். நிருவாகப் பொருண்மைகளில் அவர் காட்டிய சுறுசுறுப்பும் அவரது அற்புதமான விவாதங்களும் இந்தச் சட்டமன்றத்தின் அவைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

டாக்டர் மு.கருணாநிதியின் புகழுக்கு ஆதாரமாகவும், அவரது பெருமைக்குக் காரணமாகவும் திகழ்ந்தது தமிழ் மொழியின் மீது அவருக்கு இருந்த அளப்பரியத் திறமையேயாகும். இது அவரது அரசியல் எதிரிகளையும் கூட வசப்படுத்தியது. மேலும், திருவள்ளுவரின்,

“சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது”

என்னும் குறளை நினைவுகூர்கிறேன்.

டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் அரசியல் நாகரீகத்தை ஒரு சம்பவத்தால் நன்கு உணர்த்த முடியும். 1972ஆம் ஆண்டில், திரு. இராஜாஜி உட்பட பல சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவர்களின் சேவைகளுக்காகவும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காகவும் விருது பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. இராஜாஜி அவர்களால் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை அதனால் அப்போதைய முதல்வரான டாக்டர் மு.கருணாநிதி அவர்களிடம், அவர் சார்பாக அப்போதைய ஆளுநரிடமிருந்து விருதைப் பெற்றுத் தன்னிடம் அனுப்புமாறு வேண்டினார். 02.10.1972 அன்று டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் திரு. இராஜாஜி சார்பில் விருதினைப் பெற்றுக்கொண்டு, 03.10.1972 அன்று அவர் திரு. இராஜாஜியின் இல்லத்திற்குச் சென்று, அவருக்கு மாலை அணிவித்து விருதினை வழங்கினார். இதை திரு. இராஜாஜி பெரிதும் பாராட்டினார். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் நேரில் சென்று விருதை வழங்கும் முறைக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது.

டாக்டர் மு.கருணாநிதி அவர்கள் தமிழகத்தின் இலட்சக்கணக்கான மக்களின், குறிப்பாக ஏழை, எளிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் இதயங்களை வென்றார். அவர் ‘மக்களின் முதல்வர்’ என அன்புடன் அழைக்கப்பட்டார். பார்வை சரிசெய்யும் திட்டம், பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வுத் திட்டம், கையால் இழுக்கப்பட்ட ரிக்ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா அறிமுகம்

செய்தல், குடிசை மாற்று வாரியம் உருவாக்கம், மகளிருக்குச் சமச் சொத்துரிமைக்கான சட்டம், திருமண உதவித் தொகை திட்டம், நிலமற்ற உழவர்களுக்குத் தரிசு நிலம் வழங்கும் திட்டம், உழவர்களுக்கு இலவச மின்சாரம், பல தொழிலாளர் நல வாரியங்கள் அமைத்தல், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், சாதி பாகுபாட்டினை ஒழிப்பதற்காகச் சமத்துவபுரங்கள், ஏழை மக்களுக்கு எரிவாயு இணைப்பு, மானிய விலையில் அரிசி வழங்கும் திட்டம் போன்ற புதுமையான திட்டங்கள் ஏழை மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான அவரது எண்ணற்ற அர்ப்பணிப்புச் சேவையினைப் பறைசாற்றுகிறது.

டாக்டர் மு.கருணாநிதி அவர்கள், சற்றொப்ப எழுபது ஆண்டு கால அரசியல் வாழ்வில், நம் நாட்டின் அனைத்துக் குடியரசுத் தலைவர்களுடனும், அனைத்துப் பிரதமர்களுடனும், பல்வேறு மாநிலங்களின் முதல்வர்களுடனும், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனும் நெருக்கமாகப் பழகியுள்ளார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர் எப்பொழுதும் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

இரண்டு மாபெரும் தலைவர்களான மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கும், டாக்டர் மு.கருணாநிதி அவர்களுக்கும் இடையே 06.11.2017ஆம் நாளன்று நடைபெற்ற சந்திப்பை நான் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் மாண்புமிகு பிரதமருடன் சென்று திரு. கருணாநிதியைச் சந்தித்தேன். அருமையான சந்திப்பாக அமைந்தது.

சட்டமன்ற உறுப்பினராக இருப்பது ஒரு காலத்தில் சிறப்புரிமையுடையதாகவும், மரியாதைக்குரியதாகவும் இருந்தது. இது சில உரிமைகளையும் பொறுப்புகளையும் வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமே மக்களின் இறையாண்மை நமது சட்டமன்ற அமைப்புகளில் வெளிப்படுகிறது. மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், பற்றுறுதியையும், நேர்மையுடனும், பொறுப்புடனும் நியாயப்படுத்தப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளாக, மக்களாட்சியின் ஜோதியைப் பிரகாசமாக ஜொலிக்கவைக்கும் சவாலான பணி உங்கள் அனைவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட 16ஆவது சட்டமன்றத்தின் உறுப்பினர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருக்கலாம். மேலும், மாறுபட்ட அரசியல் சித்தாந்தங்களைக் கொண்ட பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். இந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில், மக்களுக்குச் சேவை செய்வதற்கும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு பொதுவான குறிக்கோளுடன் இணைந்து பாடுபடுமாறு நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழா சிறப்பாக அமைவதற்குக் காரணமாக அமைந்த மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சபாநாயகர் திரு. எம். அப்பாவு அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அவையின் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நான் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக மற்றும் பொருளாதார நீதிக்கு அளப்பரிய அர்ப்பணிப்புடன் பணியாற்றிய உங்களது முன்னோர்களைப் போன்று நீங்கள் அனைவரும் இந்த அவையின் மாண்பினை வளப்படுத்த அயராது செயல்படுவீர்கள் என்பதில் நான் உறுதியாக நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்தச் சட்டமன்றம் இனி வரும்காலத்திலும் நம் தேசத்திற்கு முன்னோடியாகத் திகழட்டும்.''

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன்! கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும்
முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு
விழாவில் ஆற்றிய உரை – 02.08.2021

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா, கோடிக்கணக்கான தமிழ் மக்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா, ஆகிய விழாக்களுக்குத் தலைமை விருந்தினராக வருகை புரிந்து விழாப் பேருரை ஆற்றவிருக்கின்ற,

மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் அவர்களே, விழாவுக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றவிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் மாண்புமிகு திரு. சஞ்சிப் பானர்ஜி அவர்களே, தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று உரையாற்றிய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நன்றியுரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு. கு.பிச்சாண்டி அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, சிறப்பு அழைப்பாளர்களே, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களே, முக்கியப் பிரமுகர்களே, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, அரசு ஊழியர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க நாளாக இந்த ஆகஸ்ட் 2ஆம் நாள் இனி வரும் காலங்களில் சிறப்புப் பெறவிருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கும் புனித ஜார்ஜ் கோட்டைக்கு நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்றைக்கு வருகை புரிந்திருக்கிறார்கள்.

நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களின் நலனை முன்னிறுத்தி, வாதாடுவதில், போராடுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இந்திய ஆட்சிப் பணி கிடைத்தும், அதனை ஏற்காமல், வழக்கறிஞராகப் பணியாற்றியவர். சமூகநீதியைத் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டவர். இத்தனை பெருமைகளுக்குரிய அவர், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு வருகை தந்திருப்பது, நாமெல்லாம் பெருமைப்படத்தக்க ஒன்றாகும்.

பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட இந்த சட்டமன்றம், கடந்த ஒரு நூற்றாண்டில் பல புதுமையான சட்டங்களை, முன்னோடித் திட்டங்களை உருவாக்கி, சமதர்ம சமூகத்தைப் படைத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது.

1919ஆம் ஆண்டில் ‘மாண்டேகு – செம்ஸ்போர்டு’ சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்டமன்றங்களில் முதன்முதலில் இடம்பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது. அந்தச் சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு 1920ஆம் ஆண்டு முதன்முதலாகத் தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் தலைமகனான நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தது.

1921ஆம் ஆண்டு கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சி சட்டமன்றம் தொடங்கி வைக்கப்பட்டதன் பவளவிழா நிகழ்ச்சியும், அதேபோல 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ், முதன்முதலாக 1937ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் வைரவிழா நிகழ்ச்சியும், 1997ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் சிறப்புடன் கொண்டாடப்பட்டதை, நூற்றாண்டு விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில் நான் நினைவுகூர விரும்புகிறேன்.

அதே வேளையில், இந்தப் பெருமைமிகு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு சில சட்டங்களை எடுத்துச் சொல்லவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே மகளிருக்கு வாக்குரிமை அளிக்கும் சட்டத்தை முதன்முதலாக நிறைவேற்றிய பெருமை சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு உண்டு. அதோடு, தேவதாசி ஒழிப்புச் சட்டம், மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில் உரிய இட ஒதுக்கீடு, பெண் குழந்தைகளைப் பாதுகாக்க சிறப்புத் திட்டம் என மகளிர் நலன் காப்பதில் நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை உருவாக்கித் தந்த பெருமை கொண்டது.

அதுமட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னை மாநிலத்திற்கு “தமிழ்நாடு” எனப் பெயர் சூட்டி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தனித் தீர்மானம் நிறைவேற்றியது, சுயமரியாதை மற்றும் சீர்திருத்தத் திருமணத்தைச் செல்லுபடியாக்கிடச் சட்டம் வகுத்தது, நிலச் சீர்திருத்தச் சட்டம் உருவாக்கியது, மே தினத்தை அரசு விடுமுறை ஆக்கிட வழிவகுத்தது, மாநில சுயாட்சிக்கான தீர்மானம் நிறைவேற்றியது, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்கிட சட்டம் கண்டது, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைத்திட சட்டம் நிறைவேற்றியது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியது, என பார் போற்றும் பல்வேறு சட்டங்களை, தீர்மானங்களை நிறைவேற்றிய பெருமை இந்தச் சட்டமன்றத்திற்கு உண்டு. சீர்மிகு இந்தச் சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவில் இன்றைக்கு நாமெல்லாம் பங்கேற்றுள்ளோம் என்பதே நாம் எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை நிலைநாட்டப்பட்ட மாபெரும் வளாகம் இது. அரசு முத்திரையில் “வாய்மையே வெல்லும்” எனத் தமிழ்மொழி அரியணையில் அமர்ந்து அலங்கரிப்பதையும் கண்டு மகிழ்கிறோம் நாம். மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், ஏழை எளியவர் என விளிம்பு நிலை மக்களின் நலன் காக்க இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது.

நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்தச் சட்டமன்றத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தனது ஜனநாயகக் கடமையைச் செம்மையாக நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நினைவுகூர்ந்து, அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைத்திருப்பது அனைத்திற்கும் முத்தாய்ப்பானதாகும்.

1957ஆம் ஆண்டு இந்த மன்றத்திற்கு முதன்முதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தனது கன்னிப்பேச்சில் நங்கவரம் உழவர்கள் பிரச்சினை குறித்துப் பேசி, அனைவரது கவனத்தையும் ஈர்த்து முத்திரைப் பதித்தவர் கலைஞர் அவர்கள். முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, அமைச்சராக, உறுப்பினராகப் பல்வேறு பொறுப்புகளில் மக்கள் பணியாற்றி, பலரது பாராட்டுகளையும், அன்பையும் பெற்றவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்த மண்டல் ஆணைய அறிக்கையைச் செயல்படுத்த தீர்மானம், தமிழ்நாட்டின் காவிரி நதிநீர் உரிமையை நிலைநாட்ட காவிரி நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரும் தீர்மானம், தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கிட, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம், மாணவர்கள் உயர்கல்வி பெறுவதிலிருந்த இடர்களை நீக்க நுழைவுத் தேர்வை ஒழிக்கும் சட்டம் போன்ற பல்வேறு புரட்சிகர, சீர்திருத்தத் தீர்மானங்களையும், சட்டங்களையும் இயற்றி, தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் அவர்களை, அவரது 50 ஆண்டுகால சட்டமன்றப் பணிகளைப் பாராட்டி நடைபெற்ற பொன்விழாவில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிய பொதுவுடைமைப் போராளியும், முன்னாள் மக்களவைத் தலைவருமான திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், ‘‘கொள்கைகளுக்காகவும், இலட்சியங்களுக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அதற்குத் தீங்கு வரும்போது எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தவர் கலைஞர்’’, என்று பாராட்டிப் பேசியதை நினைத்துப் பார்க்கும்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்திய துணைக் கண்டத்தில் எத்தகையதொரு மாபெரும் தலைவராக விளங்கினார் என்பது தெள்ளத் தெளிவாக விளங்கும்.

‘உடன்பிறப்பே! உன் இயல்பு என்மீது அன்பைப் பொழிவது!

என் இயல்பு உன் அன்புக்குக் கட்டுப்படுவது!
நம் இயல்பு கழகத்தைக் கட்டிக் காப்பது!’

– என்று தனது காந்தக் குரலால் தமிழ்நாட்டு மக்களைக் கட்டிப்போட்டு வைத்திருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் தொடங்கி இனமான பேராசிரியர் வரையிலான பல மாபெரும் தலைவர்களின் முகங்களை நான் காண்கிறேன்.

முன்னாள் முதலமைச்சரான அவரது திருவுருவப் படத்தைப் பார்க்கும்போது, இன்றும் நம் முன்னால் இருந்து வழிநடத்தும் ஒரு முதலமைச்சராக அவரைக் காண்கிறேன்.

இந்தியாவின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் அவர்கள், தமிழன்னையின் தலைமகனான கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்ததை எண்ணி, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மகிழ்கிறேன், கலைஞரின் மகனாக நெகிழ்கிறேன்.

I take this opportunity to thank our Honourable President for gracing this house with his presence and making this historic event more special.

I also like to express my sincere gratitude to our Honourable Governor of Tamil Nadu for presiding over.

ஜனநாயக மாண்பைக் காக்கும் தமிழ்நாடு சட்டமன்றம் இன்னும் பல நூற்றாண்டு விழாக்களைக் கண்டு, அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் வகையில் பல்வேறு சட்டங்களை இயற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

நாட்டிற்காக நாள் முழுக்க உழைக்கிறோம்! மக்களுக்காக ஒவ்வொரு நொடியும் சிந்திக்கிறோம்!!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.08.2021 அன்று, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், அரசுப் பொறுப்பேற்று 100 நாட்கள் நிறைவடைந்ததையொட்டி ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இன்றோடு 100 நாட்கள் ஆகிறது.

அந்தப் பெருமையின் அடையாளமாக, கழக ஆட்சியையும் என்னையும் பாராட்டி உரையாற்றி இருக்கக்கூடிய, முன்வரிசையில் அமர்ந்திருக்கக் கூடிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், உறுப்பினர்கள் அத்தனைப் பேருக்கும் முதலில் எனது இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

100 நாட்கள் கடந்ததைப் பற்றி இங்கே நீங்கள் எல்லாம் பெருமையோடு பேசினீர்கள், ஆனால் எனக்கு அடுத்து வரும் காலத்தைப் பற்றிய நினைப்பாகவே இருந்து கொண்டிருக்கிறது. தேர்தலுக்கு முன் கழகத்திற்கோ, எனக்கோ இருந்த எதிர்பார்ப்பை விட இந்த 100 நாட்களில் எதிர்பார்ப்பு மேலும் அதிகமாகி இருக்கிறது.

நீங்கள் எல்லாம் இப்போது பாராட்டினீர்கள் என்றால் பணியை முடித்துவிட்டதற்காக அல்ல, இன்னும் பணியைச் செய்ய வேண்டும் என்று ஊக்கப்படுத்தியிருக்கிறீர்கள், உற்சாகப்படுத்தியிருக்கிறீர்கள். அதைத்தான் நான் உணர்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்காதவர்கள் கூட, இப்போது தேர்தல் நடந்தால் வாக்களிக்கத் தயாராக இருக்கிறார்கள். அந்தளவுக்கு ஒரு சிறப்பை, பெயரைப் பெற்றிருக்கிறோம். அந்தப் பெயரைக் காலம் எல்லாம் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாக இருக்கிறது.

என்னுடைய பணிக்குத் தோளோடு தோள் நிற்கும் நம்முடைய அமைச்சர் பெருமக்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அத்தனை பேருக்கும் நான் மீண்டும், மீண்டும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆட்சிக்கு வரும்போது, கொரோனா என்ற ஒரு பெருந்தொற்று நம்மைச் சூழ்ந்திருந்தது. அதனை எதிர்கொள்ளப் போர்க்கால அடிப்படையில் நாம் எல்லாம் ஒருங்கிணைந்து செயல்பட்டோம். முதல் ஒரு மாத காலம் ஆம்புலன்ஸ் சத்தம்தான். அந்தச் சத்தம் நம்மை நிம்மதியாக இருக்க விடவில்லை. அதையும் தாண்டி, மருத்துவமனையில் இடம் இல்லை, ஆக்சிஜன் பற்றாக்குறை, இப்படி ஏதாவது ஒரு செய்தி வந்து நம் மனதை வாட்டி வதைத்துக் கொண்டே இருந்தது.

இதையெல்லாம் சமாளிக்கத்தான் உடனடியாக ஒரு War Room-ஐ நாம் ஏற்படுத்தினோம். மக்களின் கோரிக்கைகளைக் காது கொடுத்துக் கேட்டோம். அதை முடிந்த வரைக்கும் நாம் நிவர்த்தி செய்தோம். இன்னும் சொல்லப்போனால் கோரிக்கைகளே வராத, வர முடியாத ஒரு சூழ்நிலையை இப்போது உருவாக்கியிருக்கிறோம். இலட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றியதும், அவர்களுக்கு அரவணைப்பாக இருந்ததும்தான், என்னைப் பொறுத்தவரை, இந்த 100 நாளில் செய்த சாதனையில் பெரிய சாதனையாக நான் கருதுகிறேன்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரைப் போல இந்த அரசு நடவடிக்கை எடுத்தது என்று வருங்காலத் தலைமுறை சொல்லவேண்டும் நம்மைப் பற்றி.

தேர்தல் வாக்குறுதிகளை இப்போது, நான் முழுதாக எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டோம் என்று சொல்லி உங்களையும் ஏமாற்றி என்னையும் ஏமாற்றிக்கொள்ள நான் தயாராக இல்லை, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம், நிறைவேற்றுவோம், அதில் எந்த மாற்றமும் கிடையாது, அது உறுதி.

நேற்றைய தினம், முதல் நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். நமது அரசின் நூறாவது நாளில், தமிழகத்தின் வரலாற்றில் பதிவாகக் கூடிய வகையில், நீங்கள் எல்லாம் பெருமையோடு சொன்ன அடிப்படையில், வேளாண்துறையின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அனைத்துத் துறைகளுக்கும் தாயுள்ளத்தோடு திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரி இல்லாத நிதிநிலை அறிக்கையைக் கொடுத்துள்ளோம். இப்போதுதான் தொடங்கி இருக்கிறோம். படிப்படியாக அனைத்து வாக்குறுதியையும் நிச்சயமாக நிறைவேற்றிக் காட்டுவோம். யாருக்கும் எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

இங்கே படமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னது என்னுடைய மனதில் இன்னும் ஆழமாக இருக்கிறது, "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்". அவர் இருந்து செய்ய வேண்டியதை அவர் மகன் நிச்சயம் செய்வான் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டுக் கால ஆட்சியில் 100 நாட்கள் என்பது பதினெட்டில் ஒரு சதவிகிதம்தான். ஆனால், இந்த 100 நாட்களில் இந்த அரசு செய்த சாதனைகளை நான் இங்கே பட்டியல் போட்டால் மூன்று மணிநேரம் ஆகும். அதனால், அதைப் பட்டியல் போட விரும்பவில்லை. நேரம் கிடைக்கும்போதெல்லாம் அமைச்சர்களும் சொல்வார்கள், நானும் சொல்லக் காத்திருக்கிறேன்.

நாள் முழுக்க நாட்டிற்காக உழைக்கிறோம். ஒவ்வொரு நொடியும் மக்களுக்காகச் சிந்திக்கிறோம். தமிழ்நாட்டின் இழந்த பெருமையை மீட்டெடுக்க எங்களால் முடியும் என்ற நம்பிக்கை தரும் நாட்களாக இந்த 100 நாட்கள் அமைந்துள்ளது. நிதி நிலைமை மட்டும்தான் கொஞ்சம் கவலை தரக் கூடிய வகையில் இருக்கிறது. அதையும் விரைந்து சீர் செய்வோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. உங்களின் ஒத்துழைப்போடுதான், சீர்மிகு தமிழ்நாட்டை உருவாக்குவோம். இந்தப் பெரும் பொறுப்பை நான் என் தோளில் சுமக்கத் தயாராகி விட்டேன். நீங்கள் அனைவரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையோடு எனது பயணத்தைத் தொடர்வேன்.

எனது அரசாகத்தான் முதலில் இது உருவானது. இப்போது நான் சொல்கிறேன், **எனது அரசு அல்ல, நமது அரசு!** இதுதான் என்னுடைய கொள்கை. ஆக, **எமது அரசு, நமது அரசு** என்று சொல்லக்கூடிய அளவுக்குத்தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. எனவே, **வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றிகள்! வாழ்த்த மனமில்லாதவர்களையும் வென்றெடுக்க அடுத்த 100 நாட்களில் இரண்டு மடங்காக நாங்கள் உழைப்போம், உழைப்போம், உழைப்போம்!**

நன்றி! வணக்கம்!

தலை நிமிரும் தமிழகம்!

சாதனை நாட்கள் நூறு

சாதனைகளில் சில ...

- அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.4,000 கொரோனா நிவாரண நிதியுதவி.
- ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.
- மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.
- மக்களின் மனுக்கள் மீது தீர்வு காண “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறை.
- தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான செலவினத்தை முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் அரசே ஏற்பு.
- அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு.
- திருக்கோயில்களில் மாதச் சம்பளமின்றிப் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு கொரோனா நிவாரண நிதியுதவி ரூ.4,000 மற்றும் 10 கிலோ அரிசியுடன் 15 வகையான மளிகைப் பொருட்கள்.
- திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.
- முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4,000 கொரோனா நிவாரண நிதியுதவி.
- மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ரூ.4,000 கொரோனா நிவாரண உதவித்தொகை.

தலை நிமிரும் தமிழகம்!

- ❖ கொரோனா தொற்றுப் பாதிப்புள்ள மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நியமனம்.
- ❖ கொரோனா தடுப்புப் பணிகளுக்காக “அனைத்துச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களடங்கிய ஆலோசனைக் குழு”.
- ❖ கொரோனா கட்டளை மையத்திற்கு 6 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்.
- ❖ கொரோனா தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு.
- ❖ 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி.
- ❖ கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் வைப்பு நிதி, கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்கள் அரசே ஏற்பு.
- ❖ கொரோனாவால் தந்தை அல்லது தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 இலட்சம் நிவாரணத்தொகை.
- ❖ உறவினர் அல்லது பாதுகாவலரிடம் வளரும் குழந்தைகளுக்கு, 18 வயது நிறைவடையும் வரை ரூ.3,000 பராமரிப்பு உதவித்தொகை.
- ❖ ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் அவரவர் பகுதிகளிலேயே வாகனங்கள் மூலம் விநியோகம்.
- ❖ தூய்மைப்பணியாளர்கள், ஆய்வுக்கூடம் மற்றும் அவசர மருத்துவ ஊர்திப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை.
- ❖ இரண்டாம் நிலைக் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான 1,17,184 காவல் துறையினருக்கு ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை.
- ❖ கொரோனாவால் பணிவாய்ப்பை இழந்த புலம்பெயர்ந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு.

தலை நிமிரும் தமிழகம்!

- ❖ பத்திரிகையாளர் மற்றும் ஊடகத் துறையினர் ‘‘முன்களப் பணியாளர்’’களாக அறிவிப்பு.
- ❖ அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினருக்கான சிறப்பு ஊக்கத்தொகை ரூ.5,000 ஆக உயர்வு.
- ❖ கொரோனா தொற்றால் மரணமடைந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத்துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு.

- ❖ முன்களப் பணியாளர்களான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு ஊக்கத்தொகை.
- ❖ கொரோனா கால பிறப்பு, இறப்பு காலந்தாழ்வு பதிவு விண்ணப்பங்களுக்கான கட்டணத்தை அரசே ஏற்பு.
- ❖ கருப்புப் பூஞ்சை நோய் சிகிச்சைக்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.25 கோடி ஒதுக்கீடு.

- ❖ கொரோனா பெருந்தொற்றின் 3ஆம் அலையினைச் சமாளிக்க மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு.
- ❖ தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடத்திலேயே கொரோனா தடுப்பூசி.
- ❖ தொழில்துறை வாயிலாக ஒரே தவணையில் மூலதன மானியம்.

- ❖ தொழில் நிறுவன பணியாளர்கள் தொழில் வரியைச் செலுத்தக் கால அவகாசம்.
- ❖ ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சிகளுக்குச் சாலை வரி கட்டணங்கள் செலுத்தக் கால அவகாசம்.
- ❖ கொரோனா பாதிப்பால் 2020–2021ஆம் கல்வியாண்டின் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் ரத்து.

தலை நிமிரும் தமிழகம்!

- ❖ வளர்ச்சி இலக்கிற்கான பாதையை வகுத்து வழங்கிட, முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு.
- ❖ சுற்றுச்சூழல், நகரத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை வல்லுநர்களை உள்ளடக்கிய "சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு".
- ❖ தமிழ்நாட்டில் நீட் தேர்வின் தாக்கம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் தலைமையில் உயர்நிலைக் குழு அமைப்பு.

- ❖ திருக்கோயில்களை மேம்படுத்த மாநில அளவிலான உயர்மட்ட ஆலோசனைக்குழு.
- ❖ தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் திருத்தியமைப்பு.
- ❖ உயர்கல்வித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் திருத்தியமைப்பு.
- ❖ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம் திருத்தியமைப்பு.
- ❖ மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவிற்குத் துணைத்தலைவர் மற்றும் 9 உறுப்பினர்கள் நியமனம்.

- ❖ வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சிறப்பு ஒதுக்கீடு வழங்கி அரசாணை.
- ❖ நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி ரூ.3,000 ஆக உயர்வு.
- ❖ ஸ்டெர்லைட் ஆலை போராட்டத்திற்கு எதிரான வழக்குகள் அனைத்தும் ரத்து.
- ❖ காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து குறித்தக் காலத்தில் தண்ணீர் திறப்பு.
- ❖ "டவ்தே" புயலின்போது காணாமல் போன 21 மீனவர் குடும்பங்களுக்கு ரூ.20 இலட்சம் நிவாரணத்தொகை.

தலை நிமிரும் தமிழகம்!

- ❖ சென்னை, கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில், ரூ.250 கோடி செலவில் 500 படுக்கை வசதிகளுடன் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை.
- ❖ திருவாரூர் மாவட்டத்தில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் நெல் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் உலர்களங்கள்.
- ❖ மதுரையில் ரூ.70 கோடியில் நவீன வசதிகளுடன் கூடிய "கலைஞர் நினைவு நூலகம்".
- ❖ அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவுடன் புனரமைப்பு.
- ❖ பெரியார் நினைவுச் சமத்துவபுரங்கள் மேம்படுத்தப்படும்.
- ❖ தமிழ்நாட்டில் அனைத்துச் சுற்றுலாத்தலங்கள் மேம்படுத்தப் பெருந்திட்டம்.
- ❖ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகள் புத்துயிரூட்டப்படும். கூடுதல் "உழவர் சந்தைகள்" உருவாக்கப்படும்.
- ❖ சென்னை மாநகரை நவீனச் சர்வதேசத் தரத்திற்கு இணையாக அமைக்க "சிங்காரச் சென்னை 2.0 திட்டம்".
- ❖ அரசு சேவைகளை உடனுக்குடன் பெற இணையவழிச் சேவை.
- ❖ மின்துறை சார்ந்த குறைகளுக்குத் தீர்வுகாண "மின்னகம்" என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையம்.
- ❖ சென்னையில் உள்ள 7 மருத்துவமனைகளில் தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக இரு மின்தட வசதி.
- ❖ மகளிர் சுயஉதவிக்குழு இயக்கத்திற்குப் புத்துயிர்.
- ❖ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வாள் வீச்சு வீராங்கனை செல்வி பவானி தேவிக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி.
- ❖ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தமிழ்நாட்டுத் தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.5 இலட்சம் ஊக்கத்தொகை.

தலை நிமிரும் தமிழகம்!

- தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதன்முறையாகக் ‘‘காகிதமில்லா பட்ஜெட்’’.
- முதன்முறையாக வேளாண்மைக்கெனத் தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை.
- தமிழ்நாடு அரசின் நிதிநிலைக் குறித்த வெள்ளை அறிக்கை.
- டெல்டா மாவட்ட விவசாயிகளுக்காகக் ‘‘குறுவை நெல் சாகுபடி தொகுப்புத் திட்டம்’’.
- தமிழ்நாடு சட்டமன்றத்தின் பெருமையை நினைவுகூரும் வகையில் சட்டமன்ற நூற்றாண்டு விழா. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படம் திறப்பு.
- பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று, தொற்றா நோய்களுக்கான சிகிச்சை வழங்கும் ‘‘மக்களைத் தேடி மருத்துவம்’’ திட்டம்.

- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மஞ்சள் காமாலைக்கான விரைவுப் பரிசோதனைத் திட்டம்.
- மாவட்ட அரசு மருத்துவமனைகளில் ‘‘தாய்ப்பால் வங்கிகள்’’.
- மகளிர், குழந்தைகள், திருநங்கையர், மூத்தக் குடிமக்களின் பாதுகாப்பு, உரிமை மற்றும் நலன் பேணுவதில் உறுதி.
- பழம்பெரும் நடிகர் திரு.எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் மகள்வழிப் பேரன் திரு.சாய்ராம் அவர்கள் குடும்பத்தினருக்கு அரசு வாடகை வீடு ஒதுக்கீடு, ரூ.5 இலட்சம் நிதியுதவி.
- கையடக்கக் கணினி மையச் செயலாக்கக் கருவியை உருவாக்கிய திருவாரூர் இளம் விஞ்ஞானியின் உயர்படிப்பிற்கும், ஆராய்ச்சிக்கும் அரசு உதவி.
- தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் படைப்புகள் அரசுடைமையாக்கப்பட்டு, அவரது குடும்பத்தினருக்குக் காப்புநிதியாக ரூ.20 இலட்சம்.

- “முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு,” 49 திட்டங்களின் மூலம் ரூ.28,508 கோடி முதலீட்டில் 83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்பு.
- தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட ஒற்றைச்சாளர இணையதளம் 2.0.
- தொழிலாளர்கள் அதிகமுள்ள இடங்களில் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்.
- திரவ மருத்துவ ஆக்சிஜன், தொடர்புடைய கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தொடங்கிட, தனியார் முதலீட்டாளர்களுக்குச் சிறப்புத் தொகுப்புச் சலுகை.
- தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவிகிதமாக உறுதிசெய்து வனவளம் காக்கப்படும்.
- நாகூர் தர்கா கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு இலவசமாக 45 கிலோ சந்தனக்கட்டைகள்.
- கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள் மீது தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் ரத்து.
- ஒலிம்பிக் மற்றும் சர்வதேசப் போட்டிகளில் தமிழக வீரர்கள் பங்கேற்க உலகத் தரத்திலான பயிற்சி மற்றும் கட்டமைப்பு வசதிகள்.
- தொழிற்கல்வி படிப்புகளில் அரசு பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை.
- 2021ஆம் ஆண்டிற்கான 12ஆம் வகுப்புத் துணைத் தேர்வுகளுக்குத் தனித் தேர்வர்களாக விண்ணப்பித்துள்ள மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தேர்வு.
- கல்வித் தொலைக்காட்சியில் 1 முதல் 12ஆம் வகுப்புப் பாடங்களுக்கான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு.
- சுதந்திரம் பெற்று 75ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில் சென்னைக் கடற்கரைச் சாலையில் நினைவுத்தூண்.

தலை நிமிரும் தமிழகம்!

- ❖ தமிழினத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் ''தகைசால் தமிழர்'' விருது.
- ❖ தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருது.
- ❖ ஞானபீடம், சாகித்ய அகாடமி மற்றும் மாநில, உலகளாவிய அமைப்புகளின் இலக்கிய விருதுகள் பெற்றவர்களுக்கு அரசு வீடு.
- ❖ மாமன்னர் ராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடிதிருவாதிரை விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.
- ❖ நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தியாகச் சீலர்களின் திருவுருவச் சிலைகளுக்குச் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினங்களில் அரசு மரியாதை.
- ❖ ஜெர்மனி நாட்டிலுள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொய்வின்றி தொடர்ந்து இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி.
- ❖ அரசுப் பள்ளிகளிலும், தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும் அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.
- ❖ சென்னையிலுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் புத்துயிரூட்டப்படும்.
- ❖ இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.
- ❖ இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்.
- ❖ இந்து சமய அறநிலையத்துறை ''100 திருக்கோயில்களில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு''.
- ❖ இந்து சமய அறநிலையத்துறை 100 திருக்கோயில்களில் நந்தவனங்கள் மற்றும் தெப்பக்குளங்கள் சீரமைப்பு.
- ❖ பக்தர்கள் தங்களது கோரிக்கைகளையும், கருத்துக்களையும் பதிவுச் செய்திட ''கோரிக்கைகளைப் பதிவிடுக'' எனும் இணையவழித் திட்டம்.
- ❖ பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை தொலைபேசி மூலம் உடனுக்குடன் பெற்றிட ''அழைப்பு மையம்'' தொடக்கம்.
- ❖ இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களின் நில உரிமை ஆவணங்கள் இணையதளத்தில் வெளியீடு.

தலைநிமிரும் தமிழகம்

நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசுப் பொறுப்பேற்று 100 நாட்களில் ஆற்றிய மக்கள் நலப் பணிகளைத் தொகுத்து, செய்தித்துறையின் சார்பில் "தலைநிமிரும் தமிழகம் – நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்" தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.08.2021 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இச்சிறப்பு மலரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத்திட்டங்கள், மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மேற்கொண்ட களப் பணிகள், ஆய்வுப் பணிகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுடன் மேற்கொண்ட துறைவாரியான ஆய்வுகள், முக்கிய நிகழ்வுகளின் உரைகளின் தொகுப்புகள் ஆகியவற்றுடன் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை தொடர்பான செய்திகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழரசு இதழின்
"தலைநிமிரும் தமிழகம்"
சிறப்பு மலரை வெளியிட்டார் – 19.08.2021



தமிழ்நாட்டில் முதன்முறையாக காகிதமில்லா நிதிநிலை அறிக்கை

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அவர்கள் 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்தார் – 13.08.2021

சிறப்பம்சங்கள்

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு”

(குறள் 385)

1957ஆம் ஆண்டிலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அலங்கரித்த இந்த அவையில், இங்கு வைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞரின் திருவுருவப்படம் நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலும், ஆலோசனைகளும் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் முத்திரை பதித்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளைத் தந்துள்ளார்கள். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு கடமைப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலான, தலைநிமிரும் தொலைநோக்குத் திட்ட அறிக்கையில் உள்ள அம்சங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசுத் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

அரசின் நிதிநிலைமை சரிவை நிறுத்தி, அதனைச் சீர்படுத்துவது மக்களுக்கு நாங்கள் அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். ஒரே நேரத்திலோ அல்லது ஒரே ஆண்டிலோ செய்து முடிக்க இயலாத அளவிற்கு இப்பணி மிகக் கடினமாக உள்ளது. இதற்கு, குறைந்தபட்சம் இரண்டு, மூன்று ஆண்டுகள் வரையிலும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

வெளிப்படைத்தன்மை, சமூக ஈடுபாடு, வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறுதல் மற்றும் உறுதியான நடவடிக்கை ஆகிய நான்கு முக்கிய கூறுகளுடன் கூடிய இந்த அரசு செயல்படும் முறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக வகுத்துள்ளார்கள்.

அதே சமயத்தில், தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றைப் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற நாளிலேயே முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார்கள்.

தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று, தனியாக ஒரு வேளாண் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்வதாகும்.

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை நாளை தாக்கல் செய்வார்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

இந்தத் திட்டத்தின்கீழ், மொத்தம் 4,57,645 மனுக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. அனைத்து மனுக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உரியச் சரிபார்த்தலுக்குப் பின்னர் 2,29,216 குறைகளுக்கு நல்ல முறையில் தீர்வு காணப்பட்டுள்ளன.

ஒன்றிய – மாநில நிதி உறவுகள்

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரி விதிப்பு முறையில் ஒன்றிய அரசால் கூட்டாட்சி மனப்பான்மையை நீர்த்துப்போகுமாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பெட்ரோல் மீதான ஒட்டுமொத்த ஒன்றிய வரி 2014ஆம் ஆண்டு மே மாதத்தில் லிட்டருக்கு 10.39 ரூபாயிலிருந்து 32.90 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல், டீசல் மீதான வரி 2014ஆம் ஆண்டு மே மாதத்தில் 3.57 ரூபாயிலிருந்து 31.80 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றிய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள், முழுமையாக அக்குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை எனவும், குறிப்பிட்ட காலத்திற்கு விதிக்கப்படும் கூடுதல் வரிகள் காலவரையின்றித் தொடர்கின்றன எனவும் இந்தியக் கணக்குத் தணிக்கைத் துறைத்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்குவதற்காக வருவாய் மற்றும் வரிவிதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட ஆலோசனைக்குழு நிறுவப்படும்.

தரவுகளை மையமாகக் கொண்டுள்ள ஆளுகை

தரவுகளை மையமாகக் கொண்டுள்ள நிருவாகச் சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் முக்கிய முயற்சிகளைச் செயல்படுத்துதல்,

அனைத்து மக்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான பொருளாதார நிலையை நன்கு அறிய, அனைத்துத் துறைகளிலுள்ள தரவுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

மாநிலத்திலுள்ள அனைத்துப் பொதுச் சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

கொள்முதல் செய்யும் அனைத்துத் துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை (e-procurement) கண்டிப்பாகப் பின்பற்றப்படும். அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைத்தளம் ஒன்று உருவாக்கப்படும்.

திறனையும் வெளிப்படைத்தன்மையும் மேம்படுத்துவதற்காக, திட்டமிடுதல், விலை விவர அட்டவணையைப் புதுப்பித்தல்,

செந்தர விலைப் பட்டியலைப் புதுப்பித்தல், திட்ட வடிவமைப்பு, பணிகளின் மதிப்பீடுகள், ஒப்பந்தப் புள்ளிகள், பணிகளை அளவிடுதல் மற்றும் பணிப் பட்டியல்களுக்குப் பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்துத் தொழில்நுட்பத் துறைகளின் நடைமுறைகளும் முழுமையாகக் கணினிமயமாக்கப்படும்.

அரசுச் சொத்துகள் மற்றும் இடர் மேலாண்மை

பொது நிலங்கள் குறித்த சிறப்பான மேலாண்மைக்கு, மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும்.

அதில் அனைத்து அரசு நிலங்கள் வழக்கு இடர் மேலாண்மை அமைப்பு ஒன்று அமைக்கப்படும். அதன் மூலம், பொதுநலன் திறம்படப் பாதுகாக்கப்படுவதையும், அரசுக்கு வளங்கள் உடனுக்குடன் கிடைப்பதையும் உறுதி செய்யும் வகையில், வரிவிதிப்பு, நில விவகாரங்கள், பணியாளர் விவகாரங்கள் மற்றும் கொள்முதல் பிரச்சினைகள் தொடர்பான அனைத்து முக்கிய வழக்குகளும் முனைப்புடன் கண்காணிக்கப்படும்.

இடர் மேலாண்மை அமைப்பு வழக்கு மேலாண்மை அமைப்பு, ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் மூத்த சட்ட வல்லுநர்களைக் கொண்ட அனுபவமிக்க குழுவால் கண்காணிக்கப்படும்.

அதிக நம்பகத்தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்

அரசின் உட்தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். அனைத்து அரசுத் துறைகளிலும் முகமைகளிலும் உள் தணிக்கைச் செயல்பாடுகளைத் திறம்பட மேற்கொள்வதற்காக அரசில் செயல்படும் அனைத்துத் தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின்கீழ்க் கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

சட்டமன்றத்தின் பங்கினை வலுவூட்டுதல்

சட்டமன்றத்தின் நூற்றாண்டைக் குறிக்கும் வகையில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்தில் 1921ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படும். பேரவையின் நிதிக்குழுக்களின் (மதிப்பீடு, பொதுக் கணக்கு, பொதுத்துறை நிறுவனங்கள்) செயல்பாட்டை வலுப்படுத்துவதற்காக, உரிய அலுவலர்களுடன் கணினிமயமாக்கப்பட்ட சிறப்புச் செயலகம் அமைக்கப்படும்.

தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். 2010 முதல் வழங்கப்படாமலிருக்கும் கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது, இனி ஒவ்வோராண்டும் ஜூன் மாதம் 3ஆம் நாள், 10 இலட்சம் ரூபாயுடன் வழங்கப்படும்.

தலைமைச் செயலகம் முதல் மாநிலத்தின் அனைத்துத் துறை அலுவலகங்கள் வரையிலும், தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும்.

உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகள் வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படும். தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு தொழில்நுட்பப் புத்தகங்கள் தமிழில் வெளியிடப்படும்.

இந்த நிதியாண்டில், தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ள, நாட்டில் வேறு எந்த மாநிலத்தை விடவும் அதிக அளவாக, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

கீழடி, சிவகளை, கொடுமணல் ஆகிய பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்படும்.

தேசிய கடல்சார் நிறுவனம், தேசிய கடல் தொழில்நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, முதற்கட்டமாகச் சங்ககாலத் துறைமுகங்கள் அமைந்திருந்த கொற்கை மற்றும் அழகன்குளம் பகுதிகளில் ஆழ்கடல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்

முதியோர் ஓய்வூதியத் திட்டம் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு, அனைத்துத் தகுதி வாய்ந்த நபர்களும் விடுதலின்றிப் பயன்பெறுவதை இந்த அரசு உறுதி செய்யும். மாநிலத்திலுள்ள மக்களுக்குச் சமூகப் பாதுகாப்பிற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதில் முன்னணி நிலையைத் தமிழ்நாடு மீண்டும் பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு 4,807.56 கோடி ரூபாய் என உயர்த்தப்பட்டது.

நில மேலாண்மை

நிலம் தொடர்பான பிரச்சினைகளைக் குறைப்பதற்காக, துல்லியமான புவியிடங்காட்டி (D-GPS) மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் நவீன நில ஆய்வை இந்த அரசு மேற்கொள்ளும்.

இந்த நோக்கத்திற்காக, நில நிருவாக ஆணையாளரின் தலைமையின்கீழ்த் தமிழ்நாடு சிறப்புச் சமூகத் தாக்க மதிப்பீடு – மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வுப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

பேரிடர் மேலாண்மை

மாநிலப் பேரிடர் நிவாரண மற்றும் தணிப்பு நிதியை அதிகரிக்கவும், தேசியப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கூடுதல் தொகையை விடுவிக்கவும் வேண்டுமென ஒன்றிய அரசை நாம் வலியுறுத்துவோம்.

காவல்துறை

காவல்துறையில் ஒப்பளிக்கப்பட்ட 1,33,198 பணியிடங்களில், மீதமுள்ள 14,317 காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெரும் குற்றங்களில், குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையவழிக் குற்றங்கள், பொருளாதாரக் குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் பெற்றுத்தரும் வகையில் விரைவாக விசாரணைகள் மேற்கொள்வதில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை

தற்போதுள்ள 1985ஆம் ஆண்டு தீயணைப்புச் சேவைகள் சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படும். மீட்புப் படையினர் குறைவான நேரத்திற்குள் வந்து சேரும் வகையில், புதிய தீயணைப்பு நிலையங்களின்

அமைவிடங்கள் அறிவியல் பூர்வமாக வரைபடங்களின் உதவியுடன் தேர்வு செய்யப்படும்.

சாலைப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு இயக்கம் மாற்றியமைக்கப்படும். மேலும், போக்குவரத்து ஆணையரகம், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்படும்.

நீதித்துறை நிருவாகம்

அடுத்த ஐந்து ஆண்டுகளில், அனைத்து நீதிமன்றங்களுக்கும் போதிய கட்டடங்கள் இருப்பது உறுதி செய்யப்படும். உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் உள்ள அனைத்துக் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்குத் தேவையான ஆதரவை இந்த அரசு வழங்குவதுடன், நீதிமன்றங்களின் சிறப்பான செயல்பாட்டிற்கு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துவதற்கும் உதவி புரியும்.

பொது விநியோகத் திட்டம்

இந்தத் திட்டத்தினைப் பயன்படுத்தி 2021ஆம் ஆண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் இரு தவணைகளாக, 2.1 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் கொரோனா நிவாரண ரொக்க நிதியுதவியாக 4,000 ரூபாய், வழங்கப்பட்டுள்ளது மற்றும் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை பரவலின் உச்சத்தில் மளிகைப் பொருட்களின் சிறப்புத் தொகுப்பு ஒன்றும் வழங்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக, 9,370.11 கோடி ரூபாய் செலவில், இந்த கோவிட் நிவாரண தொகுப்புகள் வழங்கப்பட்டன.

தேவையுள்ள இடங்களில் புதிய நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மறு ஆய்வு செய்வதற்குக் குழு ஒன்று ஏற்படுத்தப்படும்.

நீர் வளங்கள்



இந்த அரசு மாநிலத்தின் குறைந்த நீர் ஆதாரங்களை முறைப்படிப் பயன்படுத்தி அவற்றைப் பாதுகாப்பதற்கு அதிகமான முக்கியத்துவத்தை அளிக்கும் விதமாக நீர்வளங்களுக்குத் தனியே ஒரு அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தைச் செயல்படுத்தும் விதமாக, அடுத்த 10 ஆண்டுகளில், 1,000 தடுப்பணைகளும், கதவணைகளும் கட்டப்படும்.

மேட்டூர், அமராவதி, வைகை, பேச்சிப்பாறை போன்ற முக்கிய அணைகளின் நீர்த்தேக்கக் கொள்ளளவை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்த, தேவையான திட்டங்களை இந்த அரசு வகுக்கும்.

பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ், நீர்நிலைப் பகுதிகளைப் பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளுக்காக 2021–2022ஆம் ஆண்டில் 111.24 கோடி ரூபாய் செலவில் 200 குளங்கள் தரம் உயர்த்தப்படும்.

2021–2022ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் 50 குறு நீர்ப்பாசனக் குளங்களைத் தரப்படுத்துதலுக்கான சிறப்புத் திட்டம் ஒன்று இந்த அரசால் தொடங்கப்படும்.

நீர்வளத் துறையின் பணிகள் நவீனமயமாக்கப்படும். நவீனத் தொழில்நுட்பங்களான ஆளில்லா விமானங்களின் மூலம் ஆய்வு, துல்லியமான புவியிடங்காட்டி மற்றும் புவியியல் தகவல் அமைப்பு போன்றவற்றின் உதவியுடன் பணிகள் மேம்படுத்தப்படும்.

நவீனத் தொழில்நுட்பங்களான ஆளில்லா விமானங்களின் மூலம் ஆய்வு, தமிழ்நாடு நீர்வளத் தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு, மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

கல்லணை கால்வாய்ப் புதுப்பித்தல் விரிவுபடுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிலிருந்து 2,639.15 கோடி ரூபாய் நிதி உதவி பெறப்பட்டுள்ளது.

இரண்டாவது அணை சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் திட்டமானது 610.26 கோடி ரூபாய் செலவில் உலக வங்கியின் நிதியுதவியுடன் துவங்கப்படவுள்ளது.

மீன்வளம்

சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்துடன் இணைந்து, சென்னையில் உள்ள காசிமேடு மீன்பிடித் துறைமுகம் மொத்தம் 150 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை அமைக்க மொத்தம் 433.97 கோடி ரூபாயும், மீன் இறங்கு தளங்களை மேம்படுத்த 143.46 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களின் நலனுக்காக ஒட்டுமொத்தமாக 1,149.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம்

தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33 சதவிகிதமாக உயர்த்துவதற்காக, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை அரசு ஏற்படுத்தவுள்ளது. தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் கீழ், பல்வேறு துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும், மக்களின் முழு அளவிலான பங்களிப்புடனும், பலதரப்பட்ட நம் மண்சார்ந்த மரங்களை நடுவதற்கு பெரும் மரம் நடும் திட்டம் ஒன்று அடுத்த 10 ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படும்.

பருவநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்காக, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ், இந்த அரசு மொத்தம் 500 கோடி ரூபாய் செலவில் பருவநிலை மாற்ற இயக்கம் ஒன்றினை அமைக்கும்.

ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் மேலாண்மை அமைப்புகள் (MIS), நவீன ஆயுதங்கள் மற்றும் வன நிலப்பரப்பிற்கேற்ற வாகனங்கள் உள்ளிட்ட நவீனக் கருவிகளுடன் அடுத்த 5 ஆண்டுகளில், சர்வதேச நீலக் கொடிச் சான்றிதழைப் (Blue Flag Certificate) பெறுவதற்காக, உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் 10 கடற்கரைகள் மேம்படுத்தப்படும்.

'நீலக்கொடி சான்றிதழ்' இந்தியாவின் முதல் "ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம்" ஒன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிறுவப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள ஈர நிலங்களின் சூழலியலை மேம்படுத்தவும், அதன் இயற்கைச் சூழலை மீளுருவாக்கவும், மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ், "தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம்" ஒன்றினை இந்த அரசு ஏற்படுத்தும். இந்த இயக்கம் ஐந்து ஆண்டுகளில் 100 ஈர நிலங்களைக் கண்டறிந்து, அவற்றின் இயற்கைச் சூழலை மீள உருவாக்கும் பணிகளை மேற்கொள்ளும். இதனால் அவற்றைச் சார்ந்தோரின் வாழ்வாதாரம் உயரும். இதற்கென 150 கோடி ரூபாய் நிதி ஐந்தாண்டுகளுக்குச் செலவிடப்படும்.

கட்டுமானத் தொழில்நுட்பங்கள்

சுற்றுச்சூழலுக்கும், காலநிலை மாற்றத்திற்கும், ஏற்ற கட்டுமானத் தொழில்நுட்பத்திற்கு மாறுவது மிகவும் அவசியமாகும். கட்டுமான சவால்களை எதிர்கொள்வதற்காகக் கட்டடத் தகவல் மாதிரியாக்கம், புதுமையான விரைவு கட்டுமானத் தொழில்நுட்பம், தானியங்கு தொழில்நுட்பம், நீடித்து நிலை நிற்கும் கட்டுமான பொருட்களைப் பயன்படுத்துவது, ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

திட்ட மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி, திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் பட்டியலிடும் நடைமுறைகள் இவையனைத்தும் ஓராண்டுக்குள்ளாக முழுமையாக மின்னணுமயமாக்கப்படும்.

ஊரக வளர்ச்சி

மாநிலத்திலுள்ள அனைத்து 79,395 குக்கிராமங்களுக்கும், ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் ஒரு நபருக்கு 55 லிட்டர் தரமான குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். கிராமப்புறங்களில் அமைந்துள்ள 1.27 கோடி குடும்பங்களுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்படும். தற்போது வீட்டிற்கான குடிநீர் இணைப்பு இல்லாத 83.92 இலட்சம் குடும்பங்களுக்கும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளாகக் குடிநீர் இணைப்பு வசதிகள் வழங்க வழிவகை செய்யப்படும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படும்.

முழுமையடையாத அனைத்து வீடுகளும் விரைந்து முடிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்வதுடன், 2021–2022ஆம் ஆண்டில் மொத்தம் 8,017.41 கோடி ரூபாய் செலவில், மேலும் 2,89,877 வீடுகள் கட்டப்படும். கிராமப்புறங்களில் தற்போது வீடு இல்லாத 8,03,924 குடும்பங்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் வீடு

வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். தற்போதுள்ள மேற்கூரைக்கான செலவான 50 ஆயிரம் ரூபாயுடன், கூடுதலாக மாநில அரசின் தரப்பிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதால், ஒரு வீட்டிற்கான அரசு மானியம் 2.76 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மிகவும் ஏழை, எளிய பயனாளர்களுக்கு விரைவாக, விலை குறைவாக வீடுகள் கட்டுவதற்காக, நவீன, விலை குறைவான கட்டுமானத் தொழில்நுட்பங்களை இந்த அரசு ஊக்குவிக்கும். 2021–2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில், 3,548 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி, நடப்பு ஆண்டிலிருந்து ஒரு தொகுதிக்கு 3 கோடி ரூபாயாக மீண்டும் அளிக்கப்படும்.

இந்த அரசு, 2021–2022ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது. இத்திட்டம், குக்கிராம அளவில் நிலவும் அடிப்படை உட்கட்டமைப்பிற்கான இடைவெளிகளை நிறைவு செய்வதை உறுதி செய்யும்.

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அறிமுகப்படுத்திய மிகப் புகழ்பெற்ற திட்டம் ‘நமக்கு நாமே’ திட்டம். இத்திட்டம், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து உள்ளூரின் முக்கியமான பணிகளை மேற்கொள்ள மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். 2021–2022ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 36,218 சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் 809.79 கோடி ரூபாய் செலவில் 2021–2022ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிகளின் உதவியுடன் 5,500 கோடி ரூபாய் சிறப்பு கோவிட் கடன் உட்பட 20,000 கோடி ரூபாய்க் கடன் உறுதிசெய்யப்படும்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட 27 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

குப்பைகள் உருவாகும் நிலையிலேயே 100 சதவிகிதப் பிரித்தலை உறுதி செய்வதன் வாயிலாகவும், வீடுகள்தோறும் குப்பைகள் சேகரித்தல் மற்றும்

100 சதவிகிதம் அகற்றுவதன் வாயிலாகவும் நாம் குப்பை இல்லா நகரங்களை உருவாக்குவோம். நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மண் சாலைகள் அனைத்தும் தரம் உயர்த்தப்படும். அனைத்து நகர்ப்புறங்களிலும் பாதசாரிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் பயன்படுத்தத்தக்க நடைபாதைகள் அமைக்கப்படும்.

நமக்கு நாமே திட்டப் பணிகளில் கணிசமாகப் பங்களிப்பவர்களுக்கு ஒவ்வோராண்டும் மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் சேவையில் மாநகராட்சி மற்றும் நமது சேவையில் நகராட்சித் திட்டங்கள் மூலமாக அனைவருக்கும் இணையவழி சேவைகளை வழங்குவது உறுதி செய்யப்படும்.

திருச்சிராப்பள்ளியில் புதியதாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் TUFIDCO நிதியுதவியுடன் ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் நோக்கத்தில், ‘கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம்’ என்ற புதிய திட்டத்தை ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் இந்த அரசு 2021–2022ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது.

2021–2022க்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய மேம்பாட்டு வங்கியின் உதவியுடன் கொசஸ்தலை ஆற்றுப் படுகையில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்கென 2021–2022ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னையின் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு அளிக்கப்பட்டு, சுத்தமான மற்றும் பசுமையான சென்னைக்கு முக்கியத்துவம் அளித்து சிங்காரச் சென்னை 2.0 தொடங்கப்படும். சென்னை நகரில் 3 இடங்களில், அதாவது கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல், கொன்னூர் நெடுஞ்சாலை – ஸ்ட்ராண்ஸ் சாலை மற்றும் தெற்கு உஸ்மான் சாலையில் 335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலங்கள் கட்டப்படும். இதற்கென 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் மொத்தம் 2,056 கோடி ரூபாய் செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தப்படும். சென்னையில் உள்ள நீர்வழிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டம் மொத்தம் 2,371 கோடி ரூபாய் செலவில் தீவிரமாகச் செயல்படுத்தப்படும். ஆந்திரப் பிரதேசத்திலிருந்து குழாய் வழியாகக் கிருஷ்ணா நீரைச் சென்னை நீர்த்தேக்கங்களுக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.

சென்னை நகரக் கூட்டாண்மை

சென்னை நகரக் கூட்டாண்மைத் திட்டம் விரைவில் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் தொடங்கப்படும்.

நகர்ப்புர ஊதிய வேலைவாய்ப்பு

பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், வெள்ள நீர் வடிகால்கள், சாலைகள், கட்டடங்கள் போன்ற பொதுச் சொத்துகளைக் கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளிலும் நீர்நிலைகளைப் புதுப்பித்தல் போன்றவற்றிலும் நகர்ப்புர ஏழைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பயன்தரும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய ஒரு முன்னோடி திட்டமாக இந்த அரசு ஒரு நகர்ப்புர ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை ஏற்படுத்தும். 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டம், தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடிசைப்பகுதி (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம், தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர்கள் சட்டம் உள்ளிட்ட வீட்டுவசதித் துறையின் பழைய சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும்.

பெருந்திட்டங்களின் கீழுள்ள நிலப்பரப்பு 22 சதவீதமாக உயர்த்தப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.

புதிய பெருநகர வளர்ச்சிக் குழுமங்கள், மதுரை, கோயம்புத்தூர் – திருப்பூர் பகுதி, வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் பகுதிகளுக்கு ஏற்படுத்தப்படும்.

10 ஆண்டுக் காலத்திற்குள், தமிழ்நாடு முற்றிலுமாகக் குடிசைகளற்ற மாநிலமாக விளங்க வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காக 3,954.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்நிலைகள் உட்பட ஆட்சேபனையுள்ள புறம்போக்கு நிலங்களிலிருந்து, குடிசையில் வாழும் மக்களை மனிதாபிமானத்துடன் நியாயமான முறையில் மறுகுடியமர்த்துவதற்காக, அனைத்து பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு புதிய குடிசை மறுகுடியமர்வு மற்றும் புணர்வாழ்வுக் கொள்கை வகுக்கப்படும்.

இரண்டாவது தமிழ்நாடு வீட்டுவசதித் துறை வலுவூட்டும் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் விரைவில் மேற்கொள்ளப்படும். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன், நகர்ப்புற ஏழை மக்களுக்குப் பேரிடர்களை எதிர்கொள்ளும் நிலைத்திருக்கக்கூடிய அனைவருக்குமான வீட்டுவசதித் திட்டத்தின் பேச்சுவார்த்தைகள் அண்மையில் நிறைவடைந்துள்ளன.

நெடுஞ்சாலைகள்

அடுத்த 10 ஆண்டுகளில் மாநில நெடுஞ்சாலைகளை

மாவட்டத் தலைமையகத்துடன் இணைக்கக்கூடிய 2,200 கி.மீ சாலைகளை 4 வழிச் சாலைகளாகவும், வட்டத் தலைமையகத்தை இணைக்கும் 6,700 கி.மீ. ஒற்றை மற்றும் இடைநிலை வழிச் சாலைகளை இரட்டை வழி நெடுஞ்சாலைகளாக மேம்படுத்துவதே இந்த அரசின் நோக்கம். தற்போது, புற வழிச் சாலைகள் இல்லாத 59 நகராட்சிகளுக்குப் புற வழிச் சாலைகள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

போக்குவரத்து

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் உள்ள வெண்பலகை கொண்ட நகரப் பேருந்துகளில் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர் ஆகியோர் இலவசமாகப் பயணிக்கலாம் என அறிவித்திருந்தார். இந்த நோக்கத்திற்காக, 703 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், 750 கோடி ரூபாய் டீசல் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 623.59 கோடி ரூபாய் ஜெர்மன் வளர்ச்சி வங்கி உதவியுடன் 1,000 புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசு, நிதி மேம்பாட்டில் கவனம் செலுத்தும் அதே வேளையில், பேருந்து சேவைகளின் இயக்கத் திறனை மேம்படுத்துவதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளும். போக்குவரத்து நிறுவனங்கள் சிக்கனமாகச் செயல்படுவதை உறுதி செய்வதற்கும், விதிமுறை அடிப்படையிலான செயல்திறன் குறியீடுகளின் இலக்கை அடைவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும். இலவச அல்லது மானியம் அளிக்கப்பட்ட பேருந்துப் பயணம் வேண்டுமென அரசு விரும்பும் இனங்களில், நெறி சார் செலவு அளவுருக்களின் அடிப்படையில் வெளிப்படையான மானியம் வழங்கப்படும். இந்தப் புதிய முறை நடப்பு நிதியாண்டில் அமல்படுத்தப்படும்.

மெட்ரோ இரயில்

மெட்ரோ இரயில் திட்டத்தில் கோடம்பாக்கம் முதல் பூந்தமல்லி புறவழித்தடத்திற்கான சேவைகள், 2025ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், அதாவது நான்கு ஆண்டுகளுக்குள் தொடங்கும். மெட்ரோ இரயில் திட்டத்தின் மொத்த இரண்டாம் கட்டமும் 2026ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். அதே நேரத்தில், மெட்ரோ இரயில் திட்டத்தை, தாம்பரம் வழியாக விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிக்கும் பணியை இந்த அரசு விரைவாகத் தொடங்கும். மதுரையில் மெட்ரோ இரயில் திட்டத்தை அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயார் செய்யப்படும்.

எரிசக்தி

ஏறத்தாழ 2,500 மெகாவாட் மின்சாரத்தை மின் சந்தைகளிலிருந்து வாங்கியே அரசு சமாளிக்கிறது. எனவே, கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக மாறியுள்ளது என்ற கூற்றுத் தவறானது.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் சந்திக்கும் பெரும் நிதி இழப்புகள் முற்றிலும் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துகின்றன. ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள சென்னை – கன்னியாகுமரி தொழில் பெரு வழித்தடம் மின்துறை முதலீட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய நிறுவனங்களின் நிதி மறுசீரமைப்பு விரிவாக ஆய்வு செய்யப்படும். அந்த அறிக்கையின் மீது அரசு விரைந்து செயல்பட்டு மின் வாரியத்தின் கழக நிறுவனங்கள் நொடிந்து போவதிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளில், சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் வாயிலாக, மாநிலத்தில் 17,980 மெகாவாட் மொத்த மின் உற்பத்தித் திறன் கூடுதலாகச் சேர்க்கப்படும்.

வேளாண்மைக்கான இலவச மின்சாரம் மற்றும் வீட்டிற்கான மின்சாரம் வழங்குவதற்கான மானியங்களுக்காகவும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்புகளுக்கு நிதி வழங்கவும் 19,872.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலக் கல்விக் கொள்கை

தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப, மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்கும்.

பள்ளிக்கல்வி

பள்ளிக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் விதமாக இந்த வரவு–செலவுத் திட்டத்தில் மொத்தமாக 32,599.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய அடைவு ஆய்வுக் கணக்கெடுப்பின்படி, கற்றல் விளைவுகளின் அடிப்படையில் முதல் மூன்று மாநிலங்களுக்குள் தமிழ்நாடு கொண்டுவரப்படுவதை அரசு உறுதி செய்யும்.

அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில்நுட்ப வசதியுடன் கண்காணிக்கக்கூடிய மற்றும் ஆதாரங்கள் அடிப்படையிலான பயிற்சி வழங்க ஏதுவாக 413 கல்வி ஒன்றியங்களுக்கும் தலா 40 தொடுதிரை கையடக்க கணினிகள் (Tablet) 13.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

2025ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் அந்தந்த வகுப்பு அளவில் படிக்கவும், எழுதவும், அடிப்படைக் கணக்குகளைச் செய்யவும் முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, அடிப்படைக் கல்வியறிவு மற்றும் கணித அறிவை உறுதி செய்ய ‘எண்ணும் எழுத்தும் இயக்கம்’, 66.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

அரசுப்பள்ளி மாணவர்கள் கணினித் திறன்களை இளம் வயதிலேயே பெறுவதை உறுதிசெய்ய 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 114.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், 865 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 20.76 கோடி ரூபாயில் ஸ்மார்ட் வகுப்பறைகள் துவக்கப்படும்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்குக் கல்வி, கவின்திறன் மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை அளிக்கும் நோக்கத்துடன், மாதிரிப் பள்ளிகள் அமைத்திடச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

கொரோனா பெருந்தொற்றின் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளைக் குறைப்பதே இந்த அரசின் உடனடி முன்னுரிமையாக இருக்கும். பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டு விரைவாகச் செயல்படும் வகையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தேவையான கொரோனா தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கற்றலில் ஏற்பட்ட இழப்புகளைச் சரிசெய்வதற்காகப் பள்ளி நேரங்களைத் தவிரப் பள்ளி வளாகங்களுக்கு வெளியே குறைதீர் கற்றல் வழங்குவதற்கான விரிவான திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

உயர்கல்வி

இந்த ஆண்டு புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும்.

மேலும், தரத்தை மேம்படுத்தி, அதிகளவிலான கல்வி நிறுவனங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்றுக் குழுவின் தரநிலையை அடைவதற்கு அரசு முன்னெடுப்புகளை மேற்கொள்ளும். அதிக

எண்ணிக்கையிலான காலிப் பணியிடங்கள், குறிப்பாக, ஆசிரியர் பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்படும். கற்றல் மேலாண்மை அமைப்பு மற்றும் நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருளானது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் அமைந்திட விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.

25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்படும். மேலும், 4 அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதலாக மாணவர் விடுதிகள் கட்டப்படும்.

ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியைக் கடலூர் மாவட்டத்திற்கான அரசு மருத்துவக் கல்லூரியாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தைக் கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மாவட்டங்களுக்கான இணைவு வழங்கும் பல்கலைக்கழகமாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சந்தித்து வரும் நிதி நெருக்கடியைச் சமாளிக்க ஏதுவாக இருக்கும்.

மற்றுமொரு புதிய முன்மாதிரி முயற்சியாக, ஆளில்லா விமானங்களுக்கென தமிழ்நாடு ஆளில்லா விமானக் கழகம் அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து துவக்கப்படும்.

நோய்த் தொற்றைத் தடுக்க தடுப்பூசி போடுவது மிகவும் அவசியமாகும். நாள்தோறும் 8 இலட்சம் பேருக்குத் தடுப்பூசி போடும் திறன் பெற்றிருந்தும், 2.4 இலட்சம் அளவில் மட்டுமே தடுப்பூசி வரப்பெறுகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு போதுமான அளவில் தடுப்பூசி வழங்கவேண்டிய தேவையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களின் கவனத்திற்கு அடிக்கடி எடுத்துச் சென்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ எனும் மகத்தான முன்மாதிரித் திட்டம் உருவாக்கப்பட்டு மொத்தம் 257.16 கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அனைவரின் பாராட்டையும் பெற்ற 108 இலவச ஆம்புலன்ஸ் சேவைகள் திட்டத்தை 15.09.2008 அன்று தொடங்கி வைத்தார். இலவச ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையானது 1,303ஆக உயர்த்தப்பட்டு, சேவைகளின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

23.07.2009 அன்று தொடங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம், தொடர்ந்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவ நிறுவனங்களிலுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் ஏழை மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வண்ணம், கோவிட் பெருந்தொற்று காலத்தின்போது இத்திட்டத்தின் கீழ் சிகிச்சைக்கான நோய்களும், சிகிச்சை முறைகளும் இந்த அரசால் விரிவுபடுத்தப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை அமைத்திடத் திட்டமிட்டார். அதற்கென, உரிய நிலமும் கண்டறியப்பட்டது. அதற்குப் பின், இத்திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. மற்ற உள்நாட்டு மருத்துவ முறைகளைப் போல் சித்தாவிற்கும் உரிய அங்கீகாரம் அளிக்கும் விதமாக, தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை இந்த அரசு அமைத்திடும். இதற்கென, முதல்கட்ட நிதியுதவியாக 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு

அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியத்திற்கு மானியங்களை வழங்குவதற்காக, 215.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 4.0 எனும் நவீன தரத்திற்கு உயர் உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப்

பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கப்படும். இதனால், மேலும், சிறந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று நெய்வேலியில் அமைக்கப்படும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் தொழிற்சாலைகளில் திறம்பட வேலை செய்வதை உறுதி செய்வதற்காக, எதிர்கால வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சியினை, தெரிவு செய்யப்பட்ட 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்க 60 கோடி ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

தொழில்கள்

ஒற்றைச் சாளர அமைப்புமுறை திறம்படச் செயல்படுத்தப்பட்டு, அதன்கீழ், 2021ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மேலும் 100 சேவைகள் கொண்டுவரப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேலும் 110 சேவைகளும் ஒற்றைச் சாளர வலைவாசலின் கீழ் கொண்டு வரப்படும்.

வளர்ந்து வரும் துறைகளில் தமிழ்நாட்டின் பங்கை வலுப்படுத்துவதற்காக உயிரியல் அறிவியல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி ஆகியவற்றிற்கான புதிய தொழில் கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும். அதிக அளவிலான முதலீடுகளை ஊக்குவிக்கப் புலம்பெயர் தமிழர்களுடனான உறவு வலுப்படுத்தப்படும். முதலீட்டாளர்களின் முதலீடு சார்ந்த முடிவுகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும், சிறப்பாகத் திட்டமிடுவதற்கும், மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளைப் பற்றி விவரமான, துல்லியமான தரவுத்தளம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு, அடுத்த 5 ஆண்டுகளில் மொத்தம் 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கித் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 4,500 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் விதமாகவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறும் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் 1,000 கோடி ரூபாய் செலவில் அறைகலன்களுக்கான சர்வதேசப் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டத்தின் மாநல்லூரில் ஒரு மின்–வாகனப் பூங்கா, காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் மருத்துவ சாதனங்கள் பூங்கா, இராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில் தோல் பொருட்கள் உற்பத்திப் பூங்கா, மணப்பாறை, தேனி மற்றும் திண்டிவனம், ஆகிய இடங்களில் மூன்று உணவுப் பூங்காக்களும் நிறுவப்படும். தொழில்துறை அலகுகளுக்காகத் தூத்துக்குடியில் 60 MLD அளவு கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் ஓசூரில் உள்ள தொழிலகங்களுக்கான 10 MLD TTRO கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவப்படும்.

நிதிநுட்பத் துறை வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டில் மாபெரும் வாய்ப்புகள் உள்ளன. அதனை முன்னெடுக்கும் வகையில் “நிதிநுட்பக் கொள்கை” ஒன்று வெளியிடப்படும். மேலும், வழிகாட்டி நிறுவனத்தில் இதற்கென பிரத்தியேகமான “நிதிநுட்பப் பிரிவு” ஒன்று அமைக்கப்பட்டு, நிதிநுட்ப நிறுவனங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும். சென்னையில் இரண்டு கட்டங்களாக நந்தம்பாக்கம் மற்றும் காவனூரில் நிதிநுட்ப நகரம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக, நந்தம்பாக்கத்தில் இந்த நிதிநுட்ப நகரம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

பழைய மாமல்லபுரம் சாலை தகவல் தொழில்நுட்பத் துறை பெருவழியாக வளர்ச்சியடைவதற்கு, 2000ஆம் ஆண்டில் சென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது முக்கிய காரணமாகும். இப்போது தமிழ்நாட்டிலுள்ள நிலை II மற்றும் நிலை III நகரங்களிலும் டைடல் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முதற்கட்டமாக, விழுப்புரம் மாவட்டத்தின் திருச்சிற்றம்பலம், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

ஓசூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரை இணைக்கும் பாதுகாப்பு தொழில்துறை பெருவழிகளை நிறுவுவதாக ஒன்றிய அரசு அறிவித்த போதிலும், அதற்கான ஒன்றிய அரசின் உதவி குறைவாகவே உள்ளது. கோயம்புத்தூரில், 500 ஏக்கர் பரப்பளவில், 225 கோடி ரூபாய் மதிப்பில், பாதுகாப்புக் கருவிகள் உற்பத்திப் பூங்காவை மாநில அரசு அமைத்துச் செயல்படுத்தும். இதன்மூலம், 3,500 கோடி

ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள திருவண்ணாமலை, தருமபுரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிய சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும். இப்பூங்காக்களில், தயார்நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் (Play & Play facilities) உட்பட உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இதற்கென இப்பூங்காக்களில், முதற்கட்டமாக, 1,500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4,000 ஏக்கர் நிலங்கள் மேம்படுத்தப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தமிழ்நாட்டில் உள்ள இந்த நிறுவனங்கள் எதிர்கொள்ளும் நிதி, கட்டமைப்பு, இதர சிக்கல்களை ஆய்வு செய்வதற்கும், இந்நிறுவனங்கள் வளர்ச்சி அடையத் தேவைப்படும் நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கவும், டாக்டர்.ந.சுந்தரதேவன் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில அளவிலான கடன் உத்தரவாதத் திட்டத்தை, குறிப்பாக குறு தொழில் நிறுவனங்கள். இந்நிறுவனங்கள் வணிகத் திறனின் அடிப்படையில் நிதி நிறுவனங்களும் நவீன நிதி தொழில்நுட்ப நிறுவனங்களும் கடன் வழங்கிட ஏதுவாக, மின்னணு தகவல் தரவுகள் அடிப்படையிலான கடன் மதிப்பீட்டு முறை ஏற்படுத்தப்படும். இந்நிறுவனங்களுக்குக் கடன் வழங்கத் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பங்குச் சந்தைகள் மூலம் முதலீட்டைப் பெற முயலும் இந்நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்து, 30 இலட்சம் ரூபாய் வரை பட்டியல் இடும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்குக் கடன் அளித்தவர்கள் தங்களது கடன்களை மறு கட்டமைப்பு செய்ய முன்வந்தால், அரசு கடன் உத்தரவாதத்துடன் நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடன் வழங்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களின் நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிப்பதற்கான வழிவகைகளை உறுதி செய்வதற்கான வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளங்களின்கீழ், (TReDS), அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் கொண்டுவரப்படும்.

ஐந்து பெரிய தொழிற் தொகுப்புகளை மருந்து மற்றும் பெட்ரோ இரசாயனங்கள் துறையிலும், துல்லியமான உற்பத்தி, பாதுகாப்பு, விண்வெளி மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்து (Smart mobility) ஆகிய துறைகளிலும் 100 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ளன.

265 ஏக்கர் மொத்தப் பரப்பளவில் 5 இடங்களில் நில வங்கிகளை சிட்கோ நிறுவ உள்ளது. சிட்கோ தொழில்துறை பூங்காக்களில், விற்கப்படாத மனைகளை விரைவாகப் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படுவதை உறுதி செய்வதற்காக விலைக் கொள்கை சீரமைக்கப்படும்.

கனிமங்களும், சுரங்கங்களும்

சுற்றுப்புறம் மற்றும் சூழலுக்குப் பாதிப்பின்றி சுரங்கப் பணிகளைச் செயல்படுத்திட இந்த அரசு நீடித்த நிலையான சுரங்க கொள்கையை உருவாக்கும்.

இது தவிர, பசுமை சுங்க மேல்வரி விதிக்கப்பட்டு ஒரு பசுமை நிதியம் உருவாக்கப்படும். இதன்மூலம், கைவிடப்பட்ட குவாரிப் பகுதிகள் முறைப்படி மூடப்பட்டுப் பாதுகாக்கப்படும். ஆறு கோடி வருடங்களுக்கு முந்தைய உள்நாட்டுப் புதை வடிவங்கள் கண்டறியப்பட்டுள்ள அரியலூர்–பெரம்பலூர் மாவட்டங்களில், புவியியல் புதைப் படிவ பூங்கா ஒன்று 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

துணிநூல் துறையில் கவனம் செலுத்துவதற்காக, ஒரு தனி இயக்குநரகம் உருவாக்கப்படும்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை

தற்போது 131 சேவைகள் இ–சேவை மையங்கள் வாயிலாகவும், 55 சேவைகள் இணையதளம் வாயிலாகவும் மக்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. டிசம்பர் மாதத்திற்குள், 29 துறைகள் மூலமாக வழங்கப்படக்கூடிய 600க்கும் மேற்பட்ட சேவைகளும் மின்னணு முறையில் வழங்கப்படும்.

இந்து சமய அறநிலையத்துறை

போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தைச் செயல்படுத்த உதவும் வகையில் 130 கோடி ரூபாயில் நிலை நிதி ஏற்படுத்தப்படும்.

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு சித்தர்களின் அறிவாற்றலுடைய தொன்மைவாய்ந்த மருத்துவ முறையான சித்த மருத்துவம் மேம்படுத்தப்படும்.

பக்தர்களின் அனுபவத்தை அதிகரிப்பதற்கும் 539 திருக்கோயில்களுக்கான பெருந்திட்டங்கள் அரசால் வகுக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலா

கன்னியாகுமரி மற்றும் பூம்புகாரில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அவற்றின் பழம்பெருமை மீட்டெடுக்கப்படும்.

சமூக நலம்

திருநங்கைகளின் நலனில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. 1,071 கைவிடப்பட்ட திருநங்கையர்

பயன்பெறும் வகையில், மூன்றாம் பாலினத்தவருக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக 1.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு சிறப்பு முயற்சிகளை எடுத்துள்ளது.

இதுவரை 5,963 குழந்தைகள் அடையாளம் கண்டறியப்பட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 95.96 கோடி ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டது.

அங்கன்வாடி மையங்களின் தரத்தை உயர்த்துவதற்காகச் சிறப்பு ஒதுக்கீடாக 48.48 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி சார்ந்த பொருட்களை வழங்குவதற்கு 23.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதிய உணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு முட்டைகள் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்யும் முறை சீரமைக்கப்படுவதன் மூலம் செலவினங்கள் குறைக்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 123.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லறைச் செலவினக் கட்டண உதவித்தொகை

இரண்டு மடங்காக உயர்த்தப்படும். தற்போதுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளை மேம்படுத்தச் சிறப்பு மூலதன ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணத்தினாலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடரச் செய்ததினாலும், இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீட்டினை இந்தக் கல்வியாண்டிலிருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம், சமூகநீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலன்

காத்திருப்புப் பட்டியலில் உள்ள 9,173 தகுதியுள்ள நபர்களுக்கும் மாதத்திற்கு 1,500 ரூபாய் பராமரிப்புத் தொகையை உடனடியாக வழங்குவதற்காகத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் பராமரிப்புத் தொகைக்கான ஒதுக்கீடு 404.64 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

2021–2022ஆம் ஆண்டில் காத்திருப்புப் பட்டியலில் உள்ள 9,185 நபர்களுக்கு அவர்கள் விரும்பும் கருவி வழங்கப்படுவதை உறுதி செய்ய வரவு செலவுத் திட்டத்தில் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்காக 50.66 கோடி ரூபாயென உயர்த்தப்பட்டுள்ளது.

தகுதி வாய்ந்த நபர்களுக்கு அவர்கள் பயன்படுத்த விரும்பும் சாதனங்களின் வகை மற்றும் மாதிரியில் தெரிவினை வழங்கும் வகையில், நேரடி மானியம் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தும்.

உலக வங்கியின் உதவியுடன் Rights திட்டத்தை இந்த அரசு தொடங்கவுள்ளது. குறைபாடுகளைத் தொடக்க நிலையில் கண்டறிதல், தடுத்தல், பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் கல்விச் சேவைகளைப் பெருமளவில் அணுகுதல், மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் மேம்பாடு மற்றும் அவர்களால் அமைக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவித்தல், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவலாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயல்பாடுகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

விளையாட்டு வசதிகள் இல்லாத அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 கோடி ரூபாய் செலவில் சிறு விளையாட்டரங்கங்கள் நிறுவப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகளைப் பராமரிக்க ஒரு சிறப்பு நிதியளிக்கும் நடைமுறை செயல்படுத்தப்படும்.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் (IFHRMS)

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டத்தின் அடுத்த கட்டமாக, கருவூலங்கள் விரிவுபடுத்தப்பட்டு முன் தணிக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டு, அவை அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணம் செலுத்தும் வங்கியாக (Payments Bank) மாற்றப்படும்.

அரசு ஊழியர் நலன்

இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியை, 01.07.2021 முதல் செயல்படுத்தப்படும்.

பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவி மானியம் 3 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

அரசு ஊழியர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.04.2022 முதல் வழங்கப்படும்.

பொது நிதி மேலாண்மை

வரும் 2022–2023ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட அறிக்கையுடன், எளிய மொழியில் பொதுமக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்படும். இதனால் அரசின் நிதிநிலையைப் பற்றி ஆரோக்கியமான புரிதலுடன் கூடிய விவாதங்கள் ஊக்குவிக்கப்படும்.

உரிமைத்தொகை வழங்கல்

இத்திட்டத்தின் நோக்கம், நிதியுதவியை இல்லத்தரசிகளுக்கு வழங்குவதே ஆகும், என உறுதியளிக்கிறேன். எனவே, குடும்பத் தலைவரின் பெயரை மாற்றத் தேவையில்லை.

இத்திட்டம் மிகவும் ஏழ்மையானவர்களுக்கான திட்டமாகும். கோவிட் பெருந்தொற்றின்போது, மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கும் 4,000 ரூபாய் வழங்கப்பட்டது.

கூட்டுறவுக் கடன் தள்ளுபடி

கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வழங்கப்பட்ட நகைக்கடன்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களைத் தள்ளுபடி செய்வது இந்த அரசின் முன்னுரிமையாகும். முந்தைய அரசு, தேர்தலுக்கு முன்பாக பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்வதாக அறிவித்தது. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 12,110.74 கோடி ரூபாய்

என மதிப்பிடப்பட்டது. முந்தைய அரசால் இந்த அரசின் மீது சுமத்தப்பட்ட மிகப் பெரிய நிதிச்சுமையாக இது அமைந்தது. இதற்காக, 4,803.95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதுபோன்ற இதர நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்யும்போதும் இதே நிகழ்வு பொருந்தும் என்பதால் அதுகுறித்து உரிய விசாரணைக்குப் பிறகு, தள்ளுபடி குறித்து இந்த முடிவு எடுக்கப்படும். அப்போதுதான் தவறு செய்பவர்கள் தவிர்க்கப்பட்டு, உண்மையான பயனாளிகள் பலன் அடைவர்.

கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 2,756 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும். கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்குவதற்கு ஏதுவாக, இச்சங்கங்களுக்கு பல்வேறு கட்டங்களில் நிதி வழங்குவதற்கான நடைமுறையை அரசு வகுக்கும். இதற்காக, 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெட்ரோல்

பெட்ரோல் விலை உயர்வால் பாதிக்கப்படும் ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தின் வலியை உணர்ந்து, பெட்ரோல் மீது விதிக்கப்படும் வரியை 3 ரூபாய் அளவிற்குக் குறைக்கப்படும். இது, மாநிலத்தில் உள்ள உழைக்கும் வர்க்கத்திற்கும், நடுத்தரக் குடும்பங்களுக்கும் பெரிய நிவாரணமாக அமையும். இதனால் ஆண்டுக்கு 1,160 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும்.

வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,18,991.96 கோடி ரூபாயாக உள்ள ஒட்டுமொத்த வரி வருவாய் மதிப்பீடுகளை, 2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,02,495.89 கோடி ரூபாயாகக் குறைக்கும் கட்டாயத்தில் இருக்கிறது.

மொத்த வருவாய் வரவுகளில், மாநில அரசின் சொந்த வரி வருவாய் பெரும்பகுதியாக உள்ளது. இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,35,641.78 கோடி ரூபாயாக இருந்த மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மதிப்பீடுகள், 2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,26,644.15 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 14,139.01 கோடி ரூபாயாக நிருணயிக்கப்பட்டுள்ள வரி அல்லாத வருவாய், கோவிட்–19 பெருந்தொற்றின் காரணமாக, 2021–2022ஆம் ஆண்டு இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் சற்றுக் குறைவாக உள்ளது.

2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஒட்டுமொத்த வருவாய் செலவினங்கள் 2,61,188.57 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட்–19 பெருந்தொற்றின் அடுத்தடுத்த அலைகளின் தாக்கத்திலிருந்து மாநிலத்தின் பொருளாதாரம் இன்னும் முழுமையாக மீண்டு வராத காரணத்தால், நிதிச் சீரமைப்பு செய்வதற்கான காலம் இன்னும் வரவில்லை. எனவே, 2021–2022ஆம் ஆண்டில் இடைக்கால வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 41,417.30 கோடி ரூபாயாக இருக்கும் எனத் தவறாகக் கணிக்கப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறை, 2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், உண்மையில் 58,692.68 கோடி ரூபாயாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற அசாதாரணமான காலத்தின் காரணமாக, வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது எனவும், இனிவரும் காலங்களில், நிதி ஒழுக்கம் மற்றும் நிதி ஒருங்கிணைப்பில், இந்த அரசின் உறுதியை எள்ளளவும் பாதிக்காது என்பதையும் உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்.

மூலதனச் செலவினங்களுக்காக இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 43,170.61 கோடி ரூபாய் திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் 42,180.97 எனக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில், 2021–2022ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 92,529.43 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

2021–2022ஆம் ஆண்டிற்கு நிதிப் பற்றாக்குறை, மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.33 சதவிகிதம் என, பதினைந்தாவது நிதிக் குழுவால் வரையறுக்கப்பட்ட ஒட்டுமொத்த விதிகளுக்குள் நிதிப்பற்றாக்குறை கட்டுப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரி விகிதத்தை அதிகரிப்பதே நாம் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான சீர்திருத்தம் ஆகும். வெள்ளை அறிக்கையின் மிக முக்கியமான கண்டுபிடிப்பு, 2006–2007ஆம் ஆண்டில் 8.48 சதவிகிதமாக இருந்த தமிழ்நாட்டின் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி வரி விகிதம் 2020–2021ஆம் ஆண்டில் வெறும் 5.46 சதவிகிதம் என 3.02 சதவிகிதம் வீழ்ச்சியடைந்துள்ளது. தற்போதுள்ள மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில், இது சுமார் 65,000 கோடி ரூபாய்க்கும் மேலான வருவாய் இழப்பைக் குறிக்கிறது. இது இந்த மாநிலத்தால் சரி செய்ய வேண்டிய இழப்பாகும்.

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள 28,000 கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசிற்குப் பலனளிக்கக்கூடிய விதமாக "சமாதான் திட்டம்" அறிவிக்கப்படும்.

மோசடியான ஆவணங்கள் மூலம் ஏமாற்றப்பட்ட உண்மையான உரிமையாளர்களின் துயரத்தை நீக்க 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தைத் திருத்தி, அத்தகைய ஆவணங்களின் பதிவை இரத்து செய்ய பதிவுத்துறைத் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படும்.

உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு பதிவு மற்றும் வாடகை ஒப்பந்த ஆவணங்களை இணைய வாயிலாகவே பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும். 01.01.1975 முதல் மட்டுமே வில்லங்கச் சான்றினை இணையவழியில் பார்க்க முடியும். இந்த வசதி, 01.01.1950 முதல் பதியப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் விரிவு செய்யப்படும். அதற்கு முந்தைய ஆவணங்களும் பட்டியலிடப்பட்டு கணினிமயமாக்கப்படும்.

தமிழ்நாட்டில் முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனியாக நிதிநிலை அறிக்கை

மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** அவர்கள் வேளாண்மை நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்தார்

14.08.2021

தமிழ்நாட்டு வரலாற்றில் முதன்முறையாக, 2021–2022ஆம் ஆண்டில் வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை 14.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. இதில் இடம்பெற்ற முக்கியத் திட்டங்கள் மற்றும் முக்கியக் கொள்கை முடிவுகள் பின்வருமாறு.

★ 2021–2022ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் சார்புத்துறைகளுக்கு என்று ரூ.34,220.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், சர்க்கரைத்துறை, விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, மீன்வளம், கூட்டுறவுத்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வனத்துறை, நீர்வள ஆதாரத்துறை, கூட்டுறவுத்துறை, பால்வளத்துறை போன்ற உழவர் நலன் சார்ந்த துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் பலன்கள் ஒட்டுமொத்த கிராம வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஒருங்கிணைக்கப்படும். இதற்காக ஒட்டுமொத்தமாக ரூ.34,220.65 கோடி நிதி ஒதுக்கீடு.

★ ஐந்து ஆண்டுகளில் அனைத்துக் கிராமங்களிலும் ''கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்'' அறிமுகம். நடப்பாண்டில், 2,500 கிராமங்களில் நீர் ஆதாரங்களை உருவாக்கி, சாகுபடிப் பரப்பினை உயர்த்தி, விவசாயிகளின் வருமானம் உயர்வதற்கான திட்டப்பணிகளுக்காக ரூ.250 கோடி மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு. ஒன்றிய, மாநில அரசுத் திட்டங்களை ஒன்றிணைத்து, ரூ.995.45 கோடி, ஆக மொத்தம் ரூ.1,245.45 கோடியில் திட்டம் செயல்படுத்தப்படும்.

- ★ நெல் விவசாயிகளின் நலனுக்காக, நெல்லிற்கான கொள்முதல் விலை சாதாரண இரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.2,015, சன்ன இரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ.2,060 என உயர்த்தி நிருணயம். இதற்காகும் கூடுதல் செலவினத் தொகை ரூ.99.38 கோடி, ஆக மொத்தம் ரூ.319.38 கோடி ஒதுக்கீடு.
- ★ சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், பயிர் சாகுபடி மட்டுமல்லாது இதர தொழில்களையும் மேற்கொண்டு, ஆண்டு முழுவதும் வருமானம் ஈட்ட வல்ல ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையத்திற்காக ரூ.119.402 கோடி ஒதுக்கீடு
- ★ விவசாயிகளின் பம்ப்செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்காகத் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ரூ. 4,508.23 கோடி நிதி ஒதுக்கீடு.
- ★ பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளின் சார்பாக, காப்பீட்டுக் கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.2,327 கோடி நிதி ஒதுக்கீடு.
- ★ முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் மாடித்தோட்ட தளைகள் விநியோகம், காய்கறி விதைத் தளைகள் விநியோகத்திற்காக ரூ.95 கோடி நிதி ஒதுக்கீடு.
- ★ நுண்ணீர் பாசனத் திட்டத்தின்கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் தொடர்ந்து மானியம் வழங்கி, 1,50,000 எக்டரில் செயல்படுத்திட ரூ.982.48 கோடி நிதி ஒதுக்கீடு.
- ★ முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின்கீழ், நடப்பாண்டில், தொகுப்பு அணுகுமுறையில் 7.5 இலட்சம் ஏக்கர் மானாவாரி நிலங்களில் 3 இலட்சம் விவசாயிகள் பலன்பெறும் வகையில், ரூ.146.64 கோடி நிதி ஒதுக்கீடு.
- ★ ரூ.140 கோடி மானியத்தில் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம்.
- ★ முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டத்தின்கீழ், 70 சதவிகித மானியத்தில் 5,000 விவசாயிகள் பயன்பெறுவதற்கு ரூ.114.68 கோடி ஒதுக்கீடு.
- ★ தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் ஆராய்ச்சி மற்றும் வேளாண் கல்வியை வலுப்படுத்துவதற்கு ரூ.573.24 கோடி.
- ★ கோயம்புத்தூரில் உள்ள வளங்குன்றா வேளாண்மைக்கான துறை ‘நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்’ எனப் பெயர் மாற்றம் செய்து, நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மையம் உருவாக்கி இயற்கை வேளாண்மை தொடர்பான ஆராய்ச்சிப் பணிகளை வலுப்படுத்த ரூ.3 கோடி.
- ★ மண் வளத்தைப் பாதுகாத்து, ஆரோக்கியமான உணவை மக்களுக்கு வழங்குவதற்காக இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ரூ.33.03 கோடியில் செயல்படுத்தப்படும்.
- ★ பாரம்பரிய நெல் வகைகளைத் திரட்டி, பாதுகாத்து, விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் வகையில், நெல் ஜெயராமன் அவர்களின் மரபுசார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்.
- ★ வேளாண்மை பட்டதாரிகள் மற்றும் இதர இளைஞர்கள் வேளாண்மை பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.7.68 கோடியில் செயல்படுத்தப்படும். திறன் மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்படும்.
- ★ நமது மாநில மரமான பனை மரத்தை நம்பி உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, பனை தொடர்பான பல்வேறு தொழில்களை ஊக்குவிக்க, ரூ.3 கோடியில் பனை மேம்பாட்டுத் திட்டம். தேவையில்லாமல் பனை மரத்தினை வெட்டும் நடைமுறை நெறிமுறைப்படுத்தப்படும்.
- ★ நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், தென்னை, பருத்தி,

பழங்கள் போன்ற பயிர்களின் சாகுபடிப் பரப்பினை அதிகரிக்கவும், உற்பத்தியை உயர்த்தவும் மொத்தமாக ரூ.300.56 கோடி ஒதுக்கீடு.

★ கரும்பு விவசாயிகளின் நலனுக்காக, கரும்பு உற்பத்திக்கான ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.42.50, கூடுதல் "சிறப்பு ஊக்கத் தொகையாக" டன் ஒன்றுக்கு ரூ.150 வழங்குவதற்கு ரூ.178.83 கோடி நிதி, கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டத்திற்கு ரூ.2 கோடி நிதி.

★ வேளாண்மையின் மகத்துவத்தை இளைஞர்கள் அறிந்துகொள்ளும் வகையில், சென்னையில் மரபுசார் வேளாண்மைக்கான அருங்காட்சியகம்.

★ மண்வெட்டி, களைக்கொத்து, இரும்புச்சட்டி, கடப்பாரை, கதிர் அரிவாள் அடங்கிய "வேளாண் உபகரணங்கள் தொகுப்பு" அரை இலட்சம் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ.15 கோடி ஒதுக்கீடு.

★ இயற்கை வேளாண்மை, ஏற்றுமதி, புதிய கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான பரிசு.

★ வேளாண் தொடர்பான பல்வேறு முக்கியப் பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து, தீர்வு காண மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் உயர்நிலைக்குழு.

★ நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, கற்பூரவல்லி, திப்பிலி, கற்றாழை, புதினா போன்ற மருத்துவ குணம் கொண்ட மூலிகைச் செடிகள் அடங்கிய இரண்டு இலட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டத்திற்காக ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கீடு.

★ திருவள்ளூர், கடலூர், நாமக்கல், தென்காசி மாவட்டங்களில் தோட்டக்கலைப் பயிர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்த ரூ.12.50 கோடி.

★ கடலூர் மாவட்டத்தில் பலாவிற்கான சிறப்பு மையம் துவக்கம்.

★ கடலூர் மாவட்டம், வடலூரில் புதியதாக அரசு தோட்டக்கலை பூங்கா அமைக்க ரூ.1 கோடி.

★ குறைந்த வாடகையில் இயந்திரங்களை வழங்கும் திட்டத்தினை, வலுப்படுத்துவதற்காக, ரூ.23.29 கோடியில் நவீன வேளாண் இயந்திரங்கள் கொள்முதல்.

★ மழை நீரினைச் சேமித்து, பயிர் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளின் வயல்களிலேயே 500 பண்ணைக்குட்டைகள் அமைக்க ரூ.5 கோடி ஒதுக்கீடு.

★ மூன்று ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்க, ரூ.10,000 வீதம் 1,000 விவசாயிகளுக்கு மானியம் வழங்க ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.

★ தற்போதுள்ள 50 உழவர் சந்தைகளைப் புனரமைக்க ரூ.12.50 கோடி, புதிதாக 10 உழவர் சந்தைகளை உருவாக்க ரூ. 6 கோடி ஒதுக்கீடு.

★ 2007–2008ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 40 வேளாண் விளைபொருட்களுக்கு ஒரே சீராக உறுதி அறிவிக்கை.

★ ஈரோடு, திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், கடலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருளைச் சேமிக்கவும், பரிவர்த்தனை செய்வதற்கான வசதிகள் செய்து தருவதற்காக ரூ.10 கோடி.

★ ஒட்டன்சத்திரம், பண்ருட்டி ஆகிய இரண்டு இடங்களில் ரூ.10 கோடி செலவில் குளிர்பதனக் கிடங்குகள்.

★ நாமக்கல் மாவட்டம், கொல்லிமலைப் பகுதியில் பழங்குடி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மிளகினைப் பதப்படுத்திச் சேமித்து வைக்கப் பரிவர்த்தனைக் கூடம், உலர்களத்துடன் கூடிய பதப்படுத்தும் மையம் அமைக்க ரூ.50 இலட்சம்.

★ நீலகிரி, எடப்பள்ளி கிராமத்தில் ரூ.2 கோடி மதிப்பில் ‘ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்’.

★ கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருப்பூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.3.5 கோடி மதிப்பில் 28 உலர்கலங்கள்.

★ விவசாயிகளுக்கு ஏற்றுமதி குறித்த விவரங்கள், விற்பனை வாய்ப்புகள், தரச் சான்றுகள் பெறும் முறைகள் போன்றவற்றை ஒருங்கிணைத்து வழங்கிடச் சென்னை, கிண்டியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் ஏற்றுமதி சேவை மையம்.

★ முதன்முறையாக ஏற்றுமதியாளராகப் பதிவு செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் APEDA தரச்சான்று ஆய்வுக்கு 50 சதவிகித மானியம்.

★ ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனைக் கூடம், கூட்டரங்குடன் கூடிய அலுவலகக் கட்டடம், மின்னணு எடை மேடை ஆகிய கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தர ரூ.5 கோடி ஒதுக்கீடு.

★ முருங்கை அதிகளவில் விளையும் தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர், மதுரை மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிகள் ‘முருங்கைக்கான ஏற்றுமதி மண்டலமாக’ அறிவிப்பு.

★ மதுரையில் முருங்கைக்கென சிறப்பு ஏற்றுமதி சேவை மையம் அமைத்து, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரித்திட உலர்த்திகள் (Driers), இலைகளைப் பொடியாக்கும் இயந்திரங்கள் (Pulveriser), தானியங்கி சிப்பம் கட்டும் இயந்திரம் போன்ற கட்டமைப்பு வசதிகள் அமைத்துத் தர ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு.

★ சென்னை மாநகராட்சியில் கொளத்தூர் பகுதியில் விளைபொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கான நவீன விற்பனை மையம் துவங்க ரூ.1 கோடி.

★ மின்னணு ஏலம் மூலம் விவசாயிகள் தங்களின் விளைபொருளுக்கு உரிய விலை பெற இணையதளம் மற்றும் சிறப்பு மென்பொருளுக்காக ரூ.10 கோடி.

★ கொல்லிமலை மிளகு, பண்ருட்டி பலா, மண்ணச்ச நல்லூர் பொன்னி அரிசிக்குப் புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை.

★ உணவுப் பதப்படுத்துதலுக்குத் தனிக்கவனம் செலுத்தி முன்னேற்றுவதற்காக, உணவுப் பதப்படுத்துதலுக்கெனத் தனி அமைப்பு.

★ மீன் பதப்படுத்துதலுக்கு நாகப்பட்டினம், தேங்காய்க்குக் கோயம்புத்தூர், வாழைக்குத் திருச்சி, மஞ்சளுக்கு ஈரோடு, சிறு தானியங்களுக்கு விருதுநகர் என ஐந்து தொழில் கற்கும் மையங்கள் தொடங்க நடவடிக்கை.

★ ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் மஞ்சள் பயிருக்கான ஆராய்ச்சி மையம் அமைக்க ரூ.2 கோடி.

★ கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைக் கல்லூரி புதியதாகத் துவங்குவதற்கு முதற்கட்ட நிதியாக ரூ.10 கோடி ஒதுக்கீடு.

★ தமிழ் வழி பயிலும் மாணவர்களின் வசதிக்காகத் தமிழில் வேளாண் மற்றும் தோட்டக்கலைக் கல்வி அறிமுகம்.

★ வேளாண்மையில், தொழில் முனைவோர்களை ஈர்க்க, வேளாண் தொழில் முனைப்பு மையம் (Agri incubation Centre) வலுப்படுத்தப்படுவதுடன் தேவையான இடங்களில் தொழில் முனைப்பு மையம் (Agri incubation Centre).

★ காவேரி டெல்டா வேளாண் பெருமக்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வு வளமாக, திருச்சி–நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையேயான பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக (Agro Industrial Corridor) அறிவிக்கை.

மக்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு காண உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் பரப்புரையின்போது தமிழக மக்களின் குறைகளுக்குத் தீர்வு காண அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற தனித்துறை 07.05.2021 அன்று உருவாக்கப்பட்டது.

- மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அடங்கிய பெட்டிகளின் சாவிகளை 08.05.2021 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலரிடம் ஒப்படைத்தார்.

- பெட்டிகளிலிருந்த சுமார் 4.57 இலட்சம் மனுக்கள் மின்னணு முறையில் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, தீர்வு காண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டது.

- மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன், ஒரு குறுஞ்செய்தி மனுதாரரின் தொலைபேசி எண்ணுக்கு ஒப்புகை எண்ணுடன் அனுப்பப்பட்டது.

- “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறையின் நடவடிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பின்கீழ் நடைபெற்று வருகின்றன.

- “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற துறை உருவாக்கப்பட்ட பத்து நாட்களில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், நிலப் பதிவுகள் (பட்டா), சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள், சமூக நலத்துறையின்கீழ் கிடைக்கும் சலுகைகள், ஓய்வூதியம், அடிப்படை வசதிகள் மற்றும்

கிராம உள்கட்டமைப்புத் தொடர்பான மனுக்கள் உடனடியாகத் தீர்வு காணப்பட்டு, 18.05.2021 அன்று, முதல் சுற்று நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

- நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட 549 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன. அதன்பிறகு, ஒவ்வொரு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.
- இத்துறையின் மூலம் 4,57,000 மனுக்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2.29 இலட்சம் மனுக்களுக்கு முழுமையாகத் தீர்வு காணப்பட்டன. இது, முதலமைச்சரின் தனிப்பிரிவில் இரு ஆண்டுகளில் தீர்வு காணப்படும் மனுக்களின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாகும்.
- தகுதியற்ற காரணங்களால் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இயலாத மனுதாரர்களுக்கு மேல்முறையீடு செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- சரியான முகவரி இல்லாத மனுக்களின் மனுதாரரைக் கண்டுபிடித்து அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆக்கப்பூர்வமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை

- **32,283 நபர்களுக்குப் பட்டா.**
- **30,455 நபர்களுக்கு உதவித்தொகை.**
- **19,664 பொதுக்கட்டமைப்புப் பணிகளுக்கான ஆணை.**
- **36,141 வீடுகள் வேண்டிய மனுதாரர்களுக்கு ஆணை உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள்.**

❖ ❖ ❖

“மக்களைத் தேடி மருத்துவம்”

“மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்” மற்றும் ‘‘ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம்’’ ஆகிய திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரியில் தொடங்கி வைத்தார் – 05.08.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சாமனப்பள்ளி கிராமத்தில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளைச் செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், இயன்முறைச் சிகிச்சை, இயலா நோயாளிகளுக்கு வழங்கக்கூடிய வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கிய மருத்துவச் சேவைகள் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தில் தொற்றா நோய்களின் சுமையை எதிர்கொள்ளும் விதமாக நோயாளிகளின் இல்லங்களுக்கேச் சென்று சில அத்தியாவசியமான சுகாதாரச் சேவைகள் வழங்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தினைச் செயல்படுத்தும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் ''மக்களைத் தேடி மருத்துவம்'' என்ற புதிய திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரண்டு பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று, மருத்துவச் சேவை அளிப்பதைப் பார்வையிட்டு அவர்களுக்கு மருந்துகளை வழங்கினார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம், பரிசோதனை செய்து பட்டியலிடப்பட்ட நோயாளிகளில் 45 வயதும், அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு நோய்க்கான மருந்துகளைக் களப்பணியாளர்கள் இல்லங்களுக்கேச் சென்று வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை மருத்துவச் சேவைகள், சிறுநீரக நோயாளிகளைப் பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவச் சேவைகளுக்கான பரிந்துரை, குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளைக் கண்டறிந்து தெரிவித்தல் போன்ற ஒரு குடும்பத்திற்குத் தேவையான அனைத்து சுகாதாரத் தேவைகளையும் வழங்குவதுடன் தொடர்ந்து கண்காணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சமுதாய நலப் பதிவேட்டில் ஒவ்வொரு நோயாளியையும் பதிவு செய்து தொடர்ந்து கண்காணித்து வகைப்படுத்துவது இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சமாகும்.

இத்திட்டத்தில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி பெற்ற பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், இடைநிலை சுகாதாரச் சேவையாளர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோய் ஆதரவுச் செவிலியர் ஆகியோர் பங்கு பெறுவர். பொதுச் சுகாதாரத் துறையின் களப்பணியாளர்கள் இக்குழுவினரின் செயல்பாடுகளைக் கண்காணித்து வழி நடத்துவார்கள். ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்டத்திற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் பயனாளிகளின் சேவைக்காக ஈடுபடுத்தப்படும்.

இத்திட்டத்தின் முதற்கட்ட இலக்கான 30 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஒரு கோடி மக்கள் பயன்பெறுவதன் மூலம், ஆண்டு இறுதியில் மாநில அளவில்

‘அனைவருக்கும் நலவாழ்வு’ என்ற உயரிய இலக்கை அடைய இந்தத் திட்டம் வழிவகுக்கும்.

இத்திட்டம் சூளகிரியில் தொடங்கி வைக்கப்பட்ட அதே நேரத்தில் மதுரை, கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மற்றும் சென்னை ஆகிய 7 மாவட்டங்களிலும் காணொலிக்காட்சி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மேலும், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் சிகிச்சை வழங்கவிருக்கும் செவிலியர் மற்றும் இயன்முறைச் சிகிச்சையாளர்களின் பயன்பாட்டிற்காக 3 புதிய வாகனங்களின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கால்களை இழந்த 2 நபர்களுக்கு 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான செயற்கைக் கால்கள், சிறுநீரகங்கள் செயலிழந்த ஒரு நபருக்கு வயிற்றினுள் டயாலிசிஸ் செய்யப்படும் முறைக்கான மருத்துவ உபகரணங்கள், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், உனிசெட்டி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட பெட்டமுகுளாலம் பகுதி மலைவாழ் மக்கள் பயனடையும் வகையில் ஒரு 108 அவசரக் கால ஆம்புலன்ஸ் ஊர்தி ஆகியவற்றை வழங்கியதோடு, கர்ப்பிணித் தாய்மார்க்கு “HBs Ag” என்ற மஞ்சள் காமாலை நோய்க்கான விரைவுப் பரிசோதனைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கேட்டர்பில்லர் நிறுவனம், டாடா நிறுவனம், ஓலா நிறுவனம், பைவிலி நிறுவனம், மிண்டா நிறுவனம், லுமினியஸ் பவர் டெக்னாலஜிஸ் நிறுவனம், டிவிஎஸ் நிறுவனம், செய்யார் சீஸ் நிறுவனம், மைலான் நிறுவனம், எக்சைடு நிறுவனம், பஸ்ட் ஸ்டெப் பேபிவியர் நிறுவனம், நீல் கமல் நிறுவனம் மற்றும் செப்லர் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்குப் பெரு நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு நிதியின் கீழ் தனியார் மருத்துவமனைகள் மூலம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

❖ ❖ ❖

முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையில் தொழில்துறை சார்பில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை – 20.07.2021

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

ASSOCHAM–இன் தலைவர்,

டைம்லர் நிறுவனத்தின் இந்தியப் பிரிவுத் தலைமைச் செயல் அலுவலர் திரு. கார்ல் அலெக்சாண்டர் செய்டல் அவர்களே!

CII–இன் தலைவர், திரு.சி.கே.ரங்கநாதன் அவர்களே!

TCS–இன் முதன்மைச் செயல் அலுவலர், திரு. என்.கணபதி சுப்பிரமணியம் அவர்களே!

தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம் அவர்களே!

அயல்நாட்டுத் தூதரக அதிகாரிகளே!

அனுபவம் மிகுந்த தொழில் தலைவர்களே!

தமிழ்நாடு அரசின் மூத்த அதிகாரிகளே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்!

கடந்த சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. ஆட்சி அமைத்த இரண்டு மாத காலத்தில் ஏராளமான திட்டங்களைக் கழக அரசு நிறைவேற்றி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்த வரிசையில் பன்னாட்டு முன்னணித் தொழில் நிறுவனங்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு அரசின் அழைப்பை ஏற்று வருகை புரிந்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

தொழில்துறையின் சார்பில் நடத்தப்படும் “முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு” என்ற இந்த மாபெரும் விழாவில் கலந்துகொள்வதில் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். தமிழ்நாடு என்பது பண்பாட்டின் முகவரியாக இருந்தது. அத்தகைய தமிழ்நாடு, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக மாறவேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்டு வருகிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலம் என்பது மிகத் துயரமான கொரோனா காலம் ஆகும். தமிழ்நாடு அரசின் துணிச்சலான, துரிதமான நடவடிக்கைகளின் காரணமாகக் கொரோனாவை வென்ற காலமாக இதனை மாற்றினோம். கொரோனா தமிழ்நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து எதையும் எதிர்கொள்ளும் வல்லமை கொண்டதாக இந்த மாநிலத்தை மாற்றி இருக்கிறோம்.

கொரோனா தாக்கத்தின்போது மருத்துவ நெருக்கடியை மட்டுமல்ல, நிதி நெருக்கடியையும் நாங்கள் எதிர்கொண்டோம். அப்போது, அரசின் சார்பில் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதிக்குத் தாராளமாக நிதி வழங்குங்கள் என்று நான் கோரிக்கை வைத்தேன். அதனை ஏற்று இந்த இரண்டு மாத காலத்தில் ரூ.489.78 கோடி நிதி திரண்டுள்ளது. அரசின் மீது மக்கள் வைத்துள்ள பெருநம்பிக்கையை இது காட்டுகிறது. இந்நிதியை வழங்கிய தொழிலதிபர்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள், மூத்த அதிகாரிகள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், எனது தனிப்பட்ட முறையிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலை வர்த்தகமாக மட்டுமில்லாமல் சேவையாக நினைத்து நீங்கள் தொண்டாற்றி வருவதற்கு நான் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் இத்தகைய எண்ணம் கொண்டவர்களாகத் தமிழ்நாட்டுத் தொழில்துறையினர் இருக்கும்போது எனக்கு இன்னும் கூடுதலான நம்பிக்கை பிறக்கிறது. முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் தமிழ்நாடு நிச்சயம் மாறப் போகிறது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வாருங்கள் என்று தமிழ்நாடு அரசு அழைப்பதைத் தாண்டி, தமிழ்நாட்டுத் தொழிலதிபர்கள், மற்ற நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கவேண்டும் என்று இக்கூட்டத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்தையே அச்சுறுத்திய இந்தக் கொரோனா காலத்திலும், கணிசமான முதலீடுகளைத் தமிழ்நாடு ஈர்த்துள்ளது. முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் – என்கிறார் அய்யன் வள்ளுவர். தமிழ்நாடு அரசின் அயராத முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே இதனை நான் பார்க்கிறேன். சவால்களை எதிர்கொள்ளும் எங்களது அரசின் திறன் என்றென்றும் நிலைத்து நீடித்து இருக்கும் என நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

உலகளவில் உற்பத்தித்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இருந்தாலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துணர்வு பெற்று இயங்க ஆரம்பித்துள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசில் தொழில்துறை அமைச்சராக நான் இருந்தபோது, உலக அளவில் மிகப்பெரும் தொழில் நிறுவனங்களான டைம்லர், ரெனால்ட் நிஸ்ஸான், சாம்சங், கேடர்பில்லர், தோஷிபா, மிஷலின் டயர் போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் முதலீடுகளை மேற்கொண்டன. அன்றைக்கு, முதலீடுகள்

மேற்கொள்ள இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கியது.

தற்போது, தெற்காசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டினை உயர்த்துவதே எங்களது அரசின் லட்சியம்.

2030ஆம் ஆண்டிற்குள் ஒரு இலட்சம் கோடி அமெரிக்க டாலர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட பொருளாதாரமாகத் (GDP Economy) தமிழ்நாட்டினை உருவாக்குவதே, எங்கள் அரசின் குறிக்கோள். அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க, உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நான் கோருகிறேன்.

தொழில் புரிவதை மிகவும் எளிதாக்கிடவும், அதற்கு உகந்த சூழ்நிலையினையை உருவாக்கிடவும், நான் உறுதி பூண்டுள்ளேன். முதலீட்டாளர்கள் தொழில் துவங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக்குடன் பெற்று, தங்களது திட்டத்தினை விரைவாகவும், எளிதாகவும் நிறுவுவதற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட ஒற்றைச்சாளர இணையதளம் 2.0வினை நான் இன்று துவங்கி வைத்துள்ளேன்.

தற்போதுள்ள முதலீட்டாளர்களுக்கு மட்டுமின்றி, புதிய முதலீட்டாளர்களுக்கும் உதவிடும் வகையில், 24 துறைகளின் 100 சேவைகள் கொண்ட, ஒரு மேம்படுத்தப்பட்ட ஒற்றைச்சாளர இணையதளமாக இது விளங்கும்.

இணைய முறையில் உங்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். உரிய துறைகளுக்கு அவை உடனடியாக அனுப்பி வைக்கப்படும். உரிய துறைகளுடன் காணொளி மூலமாகச் சந்திப்புகள் நடத்தப்படும். செயற்கை நுண்ணறிவு உதவியுடன், வாடிக்கையாளர்களுடன் உடனடி உரையாடல்கள் நடத்தப்படும். இந்த வசதிகள் அனைத்தும் இந்த ஒற்றைச்சாளர இணையதளம் 2.0 மூலமாக உங்களுக்குக் கிடைக்கும். கூடுதலாக 210 சேவைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

அதாவது, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கத் திட்டமிட்டதுடன் உங்களது சிந்தனை செயல்பாட்டுக்கு வரும். அத்தகைய சூழலை நாங்கள் உருவாக்கி வைத்துள்ளோம்.

தட்டுங்கள் திறக்கப்படும் என்பார்கள். தட்டாமலேயே தமிழ்நாடு அரசின் கதவுகள் திறக்கும் என்ற உறுதியை உங்களுக்கு நான் வழங்குகிறேன்.

பெயரளவிலும், காகித அளவிலும் என்று இல்லாமல், திறம்படச் செயல்படும் ஓர் அமைப்பாக இந்த ஒற்றைச் சாளர இணையதளம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதன் செயல்பாட்டினை நானே நேரடியாகக் கண்காணிப்பேன். புதிய முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்க வேண்டும் என்பதுதான் எங்களது முதல் இலக்கு! அதற்கு உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்!

சிப்காட் நிறுவனம் மூலமாக, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகிலுள்ள கெலவரப்பள்ளியில் 10 MLD நீர் சுத்திகரிப்பு நிலையம் (TTRO Plant) அமைக்கத் திட்டமிடப்பட்டு, அது ஓராண்டிற்குள் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டம் பயன்பாட்டிற்கு வந்த பின்னர், ஒசூரில் அமையப்பெற்றுள்ள தொழிற்சாலைகளுக்குத் தடையின்றித் தாராளமாகத் தண்ணீர் வசதி கிடைத்திடும்.

தொழிற்சாலைகள் அதிகம் உள்ள, வல்லம் வடகால், கிருஷ்ணகிரி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில், தொழிலாளர்கள் தாங்கள் பணிபுரியும் இடத்தின் அருகிலேயே வசிக்கும் வகையில், குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கான ஆயத்தப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ.500 கோடி அளவிலான தொழில் மேம்பாட்டு நிதி (Industrial Eco-System Fund) ஒன்றை உருவாக்க நான் ஆணையிட்டுள்ளேன். இதன்மூலம், தொழில்பூங்காக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், புதிய கண்டுபிடிப்புகளுக்கான புத்தாக்க மையங்கள் (Innovation Centres), ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள், பொதுவான வசதிகள் போன்றவற்றை மேற்கொள்ள இயலும். இதற்கென, முதற்கட்டமாக, ரூ.95.84 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் பொது உற்பத்தி, ஆட்டோமொபைல் உற்பத்தி, ஜவுளி உற்பத்தி, தோல் பொருட்கள் உற்பத்தி ஆகியவை தொடர்ந்து நடந்துவரும் தொழில்களாக இருக்கின்றன. இந்த நிலையில் வளர்ந்து வரும் துறைகளான மின் வாகனங்கள் உற்பத்தி, சூரிய மின்சக்திக் கலன்கள் மற்றும் காற்றாலைக் கலன்கள் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், தகவல் தரவு மையங்கள், மின்னணு வன்பொருட்கள் உற்பத்தி போன்ற துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

49 திட்டங்கள்
ரூ.28,508 கோடி முதலீடு
83,482 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

- தொழில்துறைப் புரட்சி 4.0 (Industry 4.0) என்று அழைக்கப்படும் நான்காவது தொழில்துறைப் புரட்சி, நம் மாநிலத்திற்குக் கிடைத்துள்ள ஓர் அரிய வாய்ப்பாகும். நமது மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இருப்பதால், I.O.T. 3D பிரிண்டிங் போன்ற பல நுண்ணிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, பணியாளர் திறன்களை மேம்படுத்துதல், உலக வினியோகச் சங்கிலிகளுக்கான மதிப்புக் கூட்டல் போன்ற பல நுட்பமான, சிறப்பான பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

- இப்போது கூட, General Electric கம்பெனி TIDCO உடன், ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) அமைக்கப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது. இதன்மூலம், விமான இயந்திரங்களுக்குத் தேவைப்படும் மேம்படுத்தப்பட்ட உபகரணங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பம் உருவாக்கப்படும்.

- தமிழ்நாட்டில் முதலீடு செய்பவர்களின் அனுபவங்களை எளிதாக்கவும், மேலும் இனிமையாக்கவும், ஏற்றுமதிக்கொள்கை, மருந்துப் பொருட்கள் மற்றும் உயிரி நுட்பக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களை ஊக்குவிக்க ஒரு கொள்கை எனப் பல கொள்கைகளை வெளியிடவும் இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

- அனைத்துத் தொழிற்சாலைகளை உள்ளடக்கிய தரவுத்தளம் (Industrial Database), தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தில் ஏற்றுமதிக்கான பிரத்தியேக ஏற்றுமதிப்பிரிவு (Export Cell) மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளுடன் தொழில் உறவுகளைப் பலப்படுத்துதல் போன்ற பல முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. இதன்மூலம், தமிழ்நாட்டில் தொழில்கள் மிகப் பெரிய அளவில் பயனடையும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரசில், நான் தொழில்துறை அமைச்சராக இருந்த வேளையில்தான் திருவண்ணாமலை மாவட்டத்தில், செய்யார் SEZ நிறுவனத்தின் தொழிற்சாலையைத் திறந்து வைத்தேன். தற்போது, அந்நிறுவனத்தில் 32 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வேலை செய்து வருகிறார்கள். அதில் பெரும்பாலும் மகளிர் பணியாற்றி வருகிறார்கள். இதைவிட மகிழ்ச்சியான செய்தி எனக்கு இருக்க முடியாது. இந்த நிறுவனம், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திண்டிவனத்திலும் சுமார் 6,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் வகையில், ஒரு தொழில் திட்டம் துவங்கிட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டுள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.

மாநிலத்தில் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, ஒரு சிறந்த ஊக்கச் சலுகைத் தொகுப்பைத் தமிழ்நாடு அரசு வழங்கியது. இதன் பயனாக, இன்றைய தினம் ஐநாக்ஸ் நிறுவனம், 200 MT உற்பத்தித் திறனுள்ள திரவ ஆக்சிஜன் உற்பத்தித் திட்டத்தினை, கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஓசூரில் நிறுவ உள்ளது. இந்தத் திட்டத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதை எண்ணி மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

கையடக்க CPUவை உருவாக்கிய இளம் விஞ்ஞானி செல்வன் எஸ்.எஸ்.மாதவன்-ஐ நேரில் அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு!

- இன்றைய தினம் புதிய தொழில்கள் துவங்க, 35 நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. இதன் மூலமாக, ரூ.17,141 கோடி முதலீடு கிடைக்கிறது. 55 ஆயிரத்து 54 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.
- 9 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்மூலமாக ரூ.4,250 கோடி முதலீடு கிடைத்துள்ளது. 21,630 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
- 5 நிறுவனங்களின் வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதன்மூலமாக ரூ.7,117 கோடி முதலீடு கிடைக்கும். 6,798 பேருக்கு வேலை கிடைக்கும்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் இன்று உறுதி செய்யப்பட்டுள்ள 49 திட்டங்களின் மூலமாக ரூ.28,508 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக 83,482 பேருக்கு வேலை கிடைக்கும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், தொழிற் பூங்காக்கள், தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவைகள், ஜவுளி, மருந்துப்பொருட்கள் ஆகிய பல்வேறு துறைகளில் இந்த முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், திருப்பூர், கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, திருவள்ளூர், செங்கல்பட்டு, கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை என்று தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில், இந்தத் திட்டங்கள் பரவலாக அமைய உள்ளன.

இந்தப் பரவலான தொழில் வளர்ச்சியினால் அனைத்து மாவட்டங்களும் வளர்ச்சி காண்பதுடன், இளைய சமுதாயத்தினர் தங்கள் இல்லத்திற்கு அருகிலேயே வேலைவாய்ப்புகளைப் பெற்றிட முடியும். தமிழ்நாட்டில் உள்ள மனிதவளமானது மேலும், மேலும் மேம்பாடு அடைய இந்த 49 நிறுவனங்களும் அடித்தளம் அமைத்துள்ளன.

அனைவருக்கும் உயர்கல்வி, சமூக மேம்பாடு, தொழில் வளர்ச்சி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் சீராக வளரவேண்டும் என்பதே எமது அரசின் இலக்கு ஆகும். மூன்றும் ஒன்றாக வளர்வதுதான் சீரான வளர்ச்சி. இம்மூன்றும் தனித்தனியாக வளர்ந்துவிட முடியாது. ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றொன்று துணை செய்வதாக அமையவேண்டும். அந்த வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டுத் தொழில் நிறுவனங்கள் தங்களது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகப்படியான முதலீடுகளைத் தாருங்கள். அதன் மூலமாகத் தமிழ்நாட்டு இளைஞர்களின் மனிதவளத்துக்கு அதிக அளவிலான வேலைவாய்ப்பை உறுதி செய்யுங்கள். இதன்மூலமாகத் தமிழ்ச் சமூகத்தின் மேன்மைக்கு உங்களது பங்களிப்பைச் செய்யுங்கள் என்று இக்கூட்டத்தின் வாயிலாகத் தமிழ்நாட்டின் தொழில் துறையினருக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு எல்லையைத் தாண்டிய தொழில் நிறுவனங்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் தமிழ்நாட்டை மாற்றத் திட்டமிட்டு உறுதியாகவும், திறனுடனும் செயல்படும் தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர், தொழில்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன். உங்கள் காலம் தமிழ்நாட்டுத் தொழில்துறையின் பொற்காலமாக விளங்கியது என்ற பெயரைப் பெற்றுத் தருவீர்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. அத்தகைய சூழலை உருவாக்குவதற்கு இந்த அரசு அனைத்து ஏற்பாடுகளையும் திறந்த மனதுடன் செய்துதரத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி – விழாவில் பங்கேற்ற 49 நிறுவனங்களின் உரிமையாளர்கள், பொறுப்பாளர்கள், உயர் அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

வேளாண்மையில் அதிநவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி லாபகரமான தொழிலாக உருவாக்கிட அரசு உறுதி

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் 32ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற "காலநிலை மாற்றம் மற்றும் கொரோனா தொற்றுநோயின் பின்னணியில், உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உறுதி செய்தல்" குறித்த பன்னாட்டு மாநாட்டை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்து ஆற்றிய உரை–06.08.2021.

அனைவருக்கும் வணக்கம்.

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களது பெயரால் அமைந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் 32ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு நடைபெறக் கூடிய பன்னாட்டு அறிவியல் மாநாட்டின் தலைவர் – வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களே!

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இருக்கக்கூடிய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களே!

மதிப்பிற்குரிய பத்திரிகைத் துறையினுடைய ஜாம்பவான் என்னுடைய இனிய நண்பர் இந்து திரு. என். ராம் அவர்களே!

இந்த நிறுவனத்தின் பொறுப்பாளர்களாக இருந்து திறம்பட நடத்தி வரும் டாக்டர் மதுரா சுவாமிநாதன் அவர்களே, டாக்டர் கே.எஸ். முரளி அவர்களே, டாக்டர் சவுமியா சுவாமிநாதன் அவர்களே, டாக்டர் ரெங்கலட்சுமி உள்ளிட்ட இந்த அவையில் அமர்ந்திருக்கக் கூடிய அன்பிற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே!

தொடர்ந்து இங்கு உரையாற்றுவதற்காக இருக்கக் கூடிய திரு. ஜென்னாட் லகாண்டா அவர்களே, முனைவர் ஜாக்குலின் டி. அரோஸ் ஹியூஸ் அவர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விழாவில் கலந்துகொள்ள எனக்குக் கிடைத்த வாய்ப்பை, எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அளவில் புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் என்னை இவ்விழாவுக்கு அழைத்ததை நினைத்துப் பெருமிதம் கொள்கிறேன்.

நாளைய தினம் அவரது 96ஆவது பிறந்தநாள் தினம். 96ஆவது பிறந்தநாளைக் காணவிருக்கக்கூடிய அவருக்கு என்னுடைய சார்பிலும், தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும் எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருக்கு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள்தான் இருக்கின்றன. அந்த நூற்றாண்டு விழாவுக்கும் நிச்சயம் நான் வருகை தந்து வாழ்த்துவேன்! தமிழ்நாடே உங்களை வாழ்த்தும்! உங்களைப் போன்ற பெருமக்கள்தான் தமிழ்நாட்டின் பெருமை!

எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களது அறிவையும், ஆற்றலையும், சிந்தனையையும், செயல்பாட்டையும் போற்றும் அரசாக தி.மு.க. அரசு எப்போதும் இருந்துள்ளது என்பதை இந்நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள், இந்து ராம் அவர்கள், 1989ஆம் ஆண்டு எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களை அழைத்துக்கொண்டு தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்க வந்தார்கள். அப்போது, சென்னையில் ஒரு ஆராய்ச்சி மையத்தை உருவாக்க இருப்பதாகச் சுவாமிநாதன் அவர்கள் தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் சொன்னார்கள். வேறு எந்த மறுப்பேதும் சொல்லாமல், உடனடியாக அடுத்த வினாடியே அது வழங்கப்படும் என்ற உறுதியைத் தந்து, அந்த இடத்தை வழங்கியவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள். அந்த இடத்தில், நிலத்தில்தான் இந்த ஆராய்ச்சி நிறுவனம் சீரும் சிறப்புமாகத் தனது 32ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டு இருக்கிறது. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு உதவி செய்தால், அது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படும் என்ற தொலைநோக்கோடு, சிந்தனையோடு எண்ணிப்பார்த்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு இந்த நிறுவனம் உருவாக உதவி செய்தார்கள்.

1989–1991 மற்றும் 1996–2000 ஆண்டுகளில் மாநிலத் திட்டக் குழுவில் திரு. சுவாமிநாதன் அவர்களை நியமித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவரது ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, ஆட்சியிலே பல திட்டங்களை நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார். இங்கு நடந்த பல்வேறு விழாக்களில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். சுவாமிநாதன் அவர்களின் 85ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், “100 ஆண்டுக்காலம் வாழ்க” என்று வாழ்த்தினார்கள். அந்த வாக்குப் பலித்து, நூற்றாண்டு விழாவை நம்முடைய சுவாமிநாதன் அவர்கள் நெருங்கி வருகிறார்கள். தலைவர் கலைஞரின் வழித்தடத்தில் நானும் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துள்ளேன்.

எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் வேளாண் விஞ்ஞானியாக மட்டுமல்ல, தமிழ் வேளாண் விஞ்ஞானி என்பதற்கும் எடுத்துக்காட்டாக இந்த நிறுவனத்தையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என அமைத்தார்கள். 2010ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டைக் கழக அரசு நடத்தியபோது சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைப்படி, தமிழ்நாட்டில் ஐந்து நகரங்களில் மரபுவழிப் பூங்காக்களை அமைத்தோம். தமிழ்ப் பண்பாட்டையும், தமிழ் நிலத்தையும் மதிக்கும் அரசாகத்தான் கழக அரசு எப்போதும் இருக்கும்.

வருகிற 13ஆம் தேதி தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய இருக்கிறோம். இந்த ஆண்டு வரலாற்றில் முதல்முறையாக வேளாண்துறைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கையை வருகிற 14ஆம் தேதி தாக்கல் செய்யப்போகிறோம். வேளாண்மைதான் உயிராக, உடலாக நம் நாட்டுக்கு இருக்கிறது. அந்த வேளாண்மைக்குச் சிறப்புக் கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறோம்.

- விவசாயத்திற்கெனத் தனியான நிதிநிலை அறிக்கை
- இயற்கை வேளாண்மைக்குத் தனிக் கவனம்
- உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளித்தல்
- கிராமச் சந்தைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள்
- நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை முறைப்படுத்துவதற்கான புதிய சட்டம்
- சென்னைப் பெருநகரத்தை “வெள்ள நீர்” சூழாமல் தவிர்க்க “பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு” அமைக்கப்படும் என்ற அறிவிப்பு

ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க இருக்கிறோம்.

அனைத்துக்கும் மேலாக இந்த அமைச்சரவையில் தான் நீர்வளத்தைப் பாதுகாப்பதற்காகத் தனியாக நீர்வளத்துறை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேளாண்துறை அமைச்சரை, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சராக உருவாக்கி உள்ளோம். சுற்றுச்சூழல் அமைச்சரை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சராக நாங்கள் நியமித்திருக்கிறோம். அதாவது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், நீர் நிலைகள், வேளாண்மை, உழவர் நலன் ஆகிய துறைகளைத் தமிழ்நாடு அரசு எந்தளவு உன்னிப்பாகக் கவனிக்கிறது என்பதை இதன்மூலம் நீங்கள் தெளிவாக உணரலாம்.

“வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்”

என்ற தமிழ் நெறியை முழுமையாக உணர்ந்த அரசாகத் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது.

பசிப்பிணி ஒழிப்பும், உணவுப் பாதுகாப்பும், இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராது இருப்பது நாடு என்கிறார் வள்ளுவர். அத்தகைய பசிப்பிணிப் போக்குவதை இலக்காகக் கொண்டு சிந்திக்கவும், ஆராய்ச்சிகள் செய்யவும், தங்கள் வாழ்நாளை ஒப்படைத்துக் கொண்டுள்ள இந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

கடந்த முக்கால் நூற்றாண்டு காலமாகத் தனது சிந்தனையை இத்தகைய திட்டங்களுக்காக ஒதுக்கி உழைத்து வருகிறார் நம்முடைய மரியாதைக்குரிய சுவாமிநாதன் அவர்கள். உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, இதுவரை அவரது வழிகாட்டலில் 86 மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள் என்பதையும்; மாநகராட்சிப் பள்ளிப் பிள்ளைகளுக்கு அறிவியல் மனப்பான்மையை அவர் வளர்த்து வருவதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இதைவிட முக்கியமாக, பார்வைக் குறைபாடு உடைய மாற்றுத்திறனாளிகளுக்காகத் தொடுதல், நுகர்தல் பூங்கா அமைத்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக்கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து சொன்ன அறிஞர்தான் நம்முடைய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள். காலநிலை மாற்றம் குறித்து 1969ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பம் ஆவதால் கடல் மட்டம் உயரும் என்பதையும் 1989ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்து இருக்கிறார்.

இன்று காலநிலை மாறுபாடு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறிவருகிறது. அதனால் ஏற்படும் பாதிப்புகள் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. வெப்பச் சலனம் அதிகமாகி வருகிறது. வடமாநிலங்கள் சிலவற்றில், பல நேரங்களில் வெப்ப அலை அடிக்கத் தொடங்கி இருக்கிறது. உலகின் ஒரு சில பகுதிகள் ‘வெட் பல்ப் டெம்பரேச்சர்’ (wet-bulb temperature) தன்மையை எட்டிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உடல் தன்னைத்தானே குளிர்விக்கும் தன்மையை இதனால் இழக்கும். இது மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். சீரான பருவம் என்பது குறைந்து வருகிறது. பருவ மழைக்காலம் என்பது கூட வரையறுக்க முடியாததாக இருக்கிறது. காலநிலை மாற்றம் என்பதை மானுடத்தின் மிக முக்கியமான பிரச்சினையாகத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆராய்ந்து மேற்கொள்வோம். இயற்கையைச் சீரழித்து விடாமல், சீர் செய்யும் கடமை நமக்கு உள்ளது. இதற்கான ஆலோசனைகளைச் சூழலியல் அறிஞர்கள் அனைவரும் அரசுக்குத் தாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திறந்த மனத்தோடு அதனை எதிர்கொள்ளத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதையும், விவசாயம் செய்யும் பரப்பை அதிகப்படுத்துவதிலும் இந்த அரசு உறுதியாக இருக்கிறது. வேளாண்மையை இலாபகரமான தொழிலாக உழவர்கள் கருதும் சூழலை உருவாக்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்பங்களை வேளாண்மையில் புகுத்த வேண்டும். அதே நேரத்தில், உரிய விலை அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். அந்த விலை எப்படிக் கணக்கிடப்பட வேண்டும் என்பதையும் ஒன்றிய அரசுக்கு உணர்த்தியவர் நம்முடைய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்தான். உணவுப் பாதுகாப்பு என்பதில் விவசாய மக்களின் பாதுகாப்பும் உள்ளடங்கும். மண்ணைக் காக்க வேண்டுமானால், மண்ணைக் காக்கும் மக்களைக் காக்க வேண்டும், அதை நோக்கியதாக உங்களது சிந்தனைகள் அமையட்டும்.

இந்த மாநாடு, நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை செய்யும் மாநாடாக அமையட்டும். இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் இந்த மண்ணையும் மக்களையும் காக்கும் செயல்பாடுகளாக அமையட்டும். மரியாதைக்குரிய எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் நூறாண்டுகளைக் கடந்து நாட்டுக்கும், வேளாண்மைக்கும், சுற்றுச்சூழலுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டு, இந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடிய வாய்ப்பைத் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

தமிழ்நாட்டில் கோவிட்–19 நோய்ப் பரவல் தடுப்பிற்கான கட்டுப்பாடுகள் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீட்டிப்பு

- அனைத்துக் கடைகளும் 23.08.2021 முதல் இரவு 10 மணி வரை செயல்படலாம்.
- தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் 100 சதவிகிதப் பணியாளர்களுடன் செயல்படலாம்.
- ஆந்திரா, கருநாடகா மாநிலங்களுக்குப் பொதுப் பேருந்து இயக்க அனுமதி.
- விளையாட்டுப் பயிற்சிகளுக்காக மட்டும் நீச்சல் குளங்கள் 50 சதவிகிதப் பயிற்சியாளர்களுடன் செயல்பட அனுமதி.
- செப்டம்பர் 1ஆம் தேதி முதல் பள்ளிகளில் 9,10,11 மற்றும் 12ஆம் வகுப்புகள் சுழற்சி முறையில், நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றிச் செயல்படும்.
- 01.09.2021 முதல் அனைத்துக் கல்லூரிகளும் சுழற்சி முறையில் வகுப்புகள் நடத்த அனுமதிக்கப்படும்.
- 50 சதவிகிதம் இருக்கைகளுடன் 23.08.2021 முதல் திரையரங்குகளை திறக்க அனுமதி.
- உயிரியல் பூங்காக்கள், தாவரவியல் பூங்காக்கள், படகு இல்லங்கள் ஆகியவை வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றிச் செயல்படலாம்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
அறிவிப்பு – 21.08.2021

படமும் / செய்தியும்

தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்
திரு. பழனிவேல் தியாகராஜன் அவர்கள் 09.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில்,
தமிழ்நாடு அரசின் உண்மையான நிதிநிலையை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில்
வெள்ளை அறிக்கையை வெளியிட்டார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற தமிழக வீரர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் சந்திப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 04.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட, தமிழ்நாட்டைச் சேர்ந்த வாள்வீச்சு வீராங்கனை செல்வி பவானிதேவி அவர்கள் சந்தித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 09.08.2021 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட, தமிழ்நாட்டைச் சேர்ந்த பாய்மரப் படகுப்போட்டி வீரர்கள் திரு. வருண் ஏ.தாக்கர், செல்வி நேத்ரா குமணன் மற்றும் கே.சி. கணபதி ஆகியோர் சந்தித்தார்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிக்கை–29.07.2021

ஒன்றிய அரசுப் பணிகளிலும், கல்வி நிலையங்களிலும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கான இட ஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகள் அமலுக்கு வந்து கால் நூற்றாண்டு ஆனபிறகும் முழுமையாகச் செயல்வடிவம் பெறவில்லை. இந்த நிலையில் இன்றைய தினம் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பு ஆறுதல் தருவதாக உள்ளது. சமூகநீதி வரலாற்றில் முக்கிய நகர்வாக உள்ளது.

மாநிலங்கள் அகில இந்தியத் தொகுப்பிற்கு வழங்கும் மத்திய தொகுப்பிற்கு அளிக்கும் 15 விழுக்காடு மருத்துவம் மற்றும் பல் மருத்துவ இளங்கலை இடங்களிலும், 50 விழுக்காடு முதுநிலை மருத்துவ இடங்களிலும் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் ஒன்றிய அரசின் முடிவு தமிழ்நாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகும். குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமூகநீதிப் போராட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரிடமும், பிரதமரிடமும் தொடர்ந்து வலியுறுத்தியும், போராடியும் வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் இந்த முறை ஆட்சி அமைந்தவுடன் முதன்முதலில் மாண்புமிகு பிரதமர் அவர்களை நான் நேரில் சந்தித்த போதும் இக்கோரிக்கையை வலியுறுத்தினேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்த வழக்கில்தான் சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 27.07.2020 அன்று அகில இந்தியத் தொகுப்பிற்கு அளிக்கப்படும் மருத்துவக் கல்வி இடங்களில் இதர பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டு உரிமை இருக்கிறது என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை வழங்கியது.

ஏற்கெனவே பல ஆண்டுகளாக இந்த இட ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசு பின்பற்றாத காரணத்தால் ஏறக்குறைய 10 ஆயிரம் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மருத்துவக் கல்வி வாய்ப்பை அகில இந்திய அளவில் இழந்தார்கள். அதில் தமிழ்நாடு மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இப்போது ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பிலேயே இந்த இட ஒதுக்கீட்டின்படி நாடு முழுவதும் 1,500 எம்.பி.பி.எஸ் இடங்களும், 2,500 பேருக்கு முதுநிலை மருத்துவ இடங்களும் கிடைக்கும் என்று அறிவித்துள்ள நிலையில், 2021–2022ஆம் கல்வியாண்டிலிருந்து, ஆக மொத்தம் 4,000 இதர பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்களுக்கு மருத்துவக் கல்வி கிடைக்கப் போவதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட ரீதியான சமூகநீதிப் போராட்டம் மூலம் உறுதி செய்து சாதனை படைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தவுடன் கிடைத்துள்ள சமூகநீதிப் போராட்டத்தின் இந்த முதல் வெற்றியில் தமிழ்நாட்டில் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கல்வி அகில இந்தியத் தொகுப்பில் 27 விழுக்காடு இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றாலும், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டின்படி பிற்படுத்தப்பட்டோருக்கான 50 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களது அழுத்தமான உறுதியான கோரிக்கையாகும். அத்தகைய முழுமையான சமூகநீதியை அடையும் வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநீதியைக் காக்கும் உறுதியான போராட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த அரசும் தொடர்ந்து நடத்தும். சமூகநீதியே மக்கள் நீதியாகும்!

"அன்னைத் தமிழில் அர்ச்சனை"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" செய்யவிருக்கும் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகையை 03.08.2021 அன்று வெளியிட்டார். முதற்கட்டமாக, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 47 முதுநிலை கோயில்களில் அர்ச்சகர்களின் விவரங்கள் அடங்கிய பதாகைகள் வெளியிடப்பட்டு, தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம், தமிழில் வழிபட வேண்டும் என்ற பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" எனும் கொள்கையில் திளைத்தத் தமிழ் அறிந்த பெருமக்கள் மற்றும் பக்தர்களின் விருப்பத்திற்கிணங்க, தமிழில் அர்ச்சனை மற்றும் வழிபாடு செய்ய ஏதுவாக 12 இறைவன் போற்றிப் பாடல் நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2021 அன்று வெளியிட்டார். இறைவனின் பெருமைகளையும் பதிகம் மற்றும் பாடல்களால் உயர்வாக 'ஒப்புமை செய்து' போற்றுவதற்குப் போற்றி நூல்கள் வழிவகுக்கும்.

அன்னைத் தமிழில் அர்ச்சனைக்கான போற்றிப் பாடல் நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டார்–12.08.2021

இந்த முயற்சியின் மூலம், கோயில்களில் தமிழ் வழிபாடு ஊக்குவிக்கப்படுவதுடன், பொதுமக்களும் தாம் அறிந்த தமிழ் மொழி மூலம் அர்ச்சனை என்பதால் அகமகிழ்வார்கள். அறிந்த மொழியில் அர்ச்சனை செய்வதை ஊக்குவிக்கவும், அர்ச்சகர் சொல்வதைப் பக்தர்கள் புரிந்து கொள்வதற்காகவும் இந்தப் போற்றி நூல்கள் உறுதுணையாக இருக்கும்.

இந்தியா–பாகிஸ்தான் போரின் 50ஆவது ஆண்டு பொன்விழா - 2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை – 30.07.2021

அனைவருக்கும் வணக்கம்,

நாட்டுப் பற்றும், உணர்ச்சியும் கலந்த இந்த வரலாற்று நினைவு நாளில் கலந்து கொண்டிருக்கும் போர் வீரர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இராணுவத்தில் பணியாற்றுவது என்பதைப் பணியாற்றுவது என்று சொல்ல முடியாது. மக்களைக் காப்பதும் அதன் மூலமாக நாட்டைக் காப்பதுமான மாபெரும் தியாக வாழ்க்கைக்கு ஒப்படைத்துக் கொண்டவர்கள்தான் இராணுவ வீரர்களாக இருக்க முடியும். அத்தகைய தியாகத்தின் திருவுருவங்களாய் உங்களை நான் பார்க்கிறேன். அத்தகைய தியாகத் திருவுருவங்களை நான் வணங்குகிறேன். வங்கதேசத்து மக்களின் உரிமைக்காக 1971ஆம் ஆண்டு இந்தியா ஒரு மாபெரும் போரை நடத்தியது. அந்தப் போரில் பாகிஸ்தானை இந்தியா வென்றது. அதன் காரணமாகத்தான் வங்கதேசம் உருவானது. அந்த வரலாற்று வெற்றியை நினைவுகூரும் பொன் விழாவை இப்பொழுது நாம் கொண்டாடி வருகிறோம். இந்தப் பொன் விழாவில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன், பெருமையடைகிறேன், பூரிப்படைகிறேன், இரட்டிப்பு மகிழ்ச்சியை நான் அடைந்து கொண்டிருக்கிறேன்.

1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போர் நடந்தபோதும் தமிழ்நாட்டில் தி.மு.க. தான் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தது, தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தார்கள். போர் தொடங்கியபோது, அமெரிக்காவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்காக அன்றைய முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சென்றிருந்தார்கள். போர் தொடங்கிவிட்டது என்று கேள்விப்பட்டவுடனே உடனடியாக கலைஞர் அவர்கள் தமிழ்நாடு திரும்பினார்கள். கலைவாணர் அரங்கிலே அவருக்கு ஒரு வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வரவேற்பு விழாவை இரத்து செய்து அதனுடைய பெயரை மாற்றி பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டம் என்று அந்த நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். பாகிஸ்தானுடைய நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவித்து தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.

அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அம்மையாருடைய அரசுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கினார் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். போரில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களின் குடும்பங்களுக்கு நிதியும், விவசாய நிலமும் கொடுத்தார் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். தமிழ்நாடு முழுவதும் போர் நிதியை வசூலித்து பிரதமர் இந்திராகாந்தி அவர்களைச் சென்னைக்கே வரவழைத்து 6 கோடி ரூபாயை நிதியாக 1972ஆம் ஆண்டு வழங்கியவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். அன்றைய சூழலில் ஒட்டுமொத்த இந்தியா முழுக்க வசூலான தொகை 25 கோடி ரூபாய், அதில் தமிழ்நாடு கொடுத்தது மட்டும் 6 கோடி ரூபாய். தமிழ்நாடு மட்டுமே நான்கில் ஒரு பங்கு நிதியை அன்றைக்கு வழங்கி பெருமைப்படுத்தியிருக்கிறது என்பது மறக்க முடியாத ஒன்று.

புதியதாக உருவான வங்கதேச அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்துத் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டுக்குள் போர் வராவிட்டாலும், தமிழ்நாடும் போர்முனையில்தான் இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலேயே அன்றைக்குச் சொன்னார்கள். அத்தகைய போரின் பொன்விழாவைத்தான் இன்றைக்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் இந்த விழா கொண்டாடுகிற நேரத்தில், தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது என்பது உள்ளபடியே ஒரு வரலாற்றுப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 'இமயச் சாரலில் ஒருவன் இருமினான், குமரி வாழ்வான் மருந்து கொண்டோடினான்' என்று எழுதினார். அதைப்போல, இந்தப் போரில் தமிழ்நாட்டைச் சார்ந்த ஏராளமான வீரர்கள் பங்கெடுத்தார்கள். அதில் பலரும் உயிரிழந்தார்கள், காயமடைந்தவர்களும் அதிகம். அந்த மாவீரர்களுக்கு மட்டுமல்ல, அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருவர் இராணுவத்தில் இருக்கிறார் என்றால், அவர் மட்டுமல்ல, அவருடைய குடும்பமே இராணுவத்தில் இருக்கிறது என்றுதான் அர்த்தம். இராணுவ வீரரின் குடும்பமானது, அந்த வீரரை வேலைக்கு அனுப்பவில்லை, தியாகத்திற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று அனுப்பிவைக்கிறது. இந்த மன தைரியம் எல்லோரது குடும்பங்களுக்கும் வருவதில்லை. அத்தகைய மன உறுதி, தேசப்பற்று, நாட்டுக்காக அர்ப்பணிப்பு ஆகியவற்றைக் கொண்ட குடும்பங்களுக்கு நாம் முதலில் மரியாதை செலுத்தியாக வேண்டும். இத்தகைய போர்வீரர்களுடன் சேர்ந்து நான் நிற்பதிலே உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன். இப்போரில் உயிர்நீத்த வீரர்களின் துணைவியருக்கு எனது வீர வணக்கங்கள். அவர்தம் குழந்தைகளுக்கு, அவர்களுடைய வாரிசுகளுக்கு எனது வணக்கங்கள். இதில் பங்கெடுத்துள்ள பரம் விசிஷிட் சேவா மெடல், உத்தம் யுத் சேவா மெடல் போன்ற பதக்கங்களைப் பெற்றுள்ள தென்மண்டல இராணுவத் தளபதி Lieutenant General திரு.ஏ.அருண் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து, நாட்டைக் காப்பதிலும், முன்னேற்றுவதிலும் தங்களை ஒப்படைத்து வரும் இராணுவ வீரர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். நாட்டைப் பாதுகாத்தல், உள்நாட்டுக் கலகங்களை அடக்குதல், தேசியப் பேரிடர்களிடமிருந்து மக்களைக் காத்தல் ஆகிய இப்பணிகளில் இராணுவ வீரர்கள் திறம்படச் செயலாற்றி வருகின்றனர். எல்லைக்குள் மக்கள் அமைதியாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு அடித்தளமே இராணுவ வீரர்கள்தான். நாட்டைக் காக்கும் இராணுவ வீரர்கள் அனைவருக்கும் எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகாகவி பாரதியார் மொழியில் சொல்வதாக இருந்தால், ''ஞானத்திலே, உயர் மானத்திலே, அன்னதானத்திலே, கானத்திலே, கவிதையிலே, உயர்ந்த இந்த நாட்டுத் தீரத்திலே, படை வீரத்திலே, நெஞ்சில் ஈரத்திலே, உடல் வலிமையிலே, மறத்தன்மையிலே காக்கும் அனைத்து இராணுவ வீரர்களுக்கும் எனது தலைதாழ்ந்த வணக்கம்.

நன்றி, வணக்கம்.

வீர மரணமடைந்த இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்குத் தலா ரூ.20 இலட்சம் நிவாரண நிதியுதவி

அனைவருக்கும் பொதுவான வானமாக இருங்கள்! தீயவையைப் பொசுக்கும் தீயாக இருங்கள்!

தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தில் நடைபெற்ற பயிற்சித் துணைக் கண்காணிப்பாளர்கள் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை–29.07.2021.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

தமிழ்நாடு காவல்துறையின் தலைமை இயக்குநர் திரு. சைலேந்திர பாபு அவர்களே!

உள்துறைச் செயலாளர் அவர்களே!

தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக இயக்குநர் அவர்களே!

சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே!

காவல்துறையின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கும் அதிகாரிகளே!

காவல்துறையைச் சேர்ந்த வீரர்களே!

உங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம்!

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் சார்பில் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொல்வதை விட உற்சாகம் அடைகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

உங்களது அணிவகுப்பு மரியாதையைக் கண்டபோது எனக்கே ஒரு கம்பீரம் தோன்றுகிறது, உற்சாகம் பிறக்கிறது. இன்னும் சொன்னால் மிடுக்கு

ஏற்படுகிறது. அந்தளவுக்கு இந்த அணிவகுப்பானது கம்பீரமாக இருந்தது. உங்களது பயிற்சியையும், உடல் திறத்தையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

"மறமானம் மாண்ட வழிச்செலவும் தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு"

– என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது வீரம், மானம், நல்ல வழி நடத்தல், அரசின் நம்பிக்கைக்கு உரியதாக ஆகுதல் ஆகிய நான்கும்தான் படைக்குக் காவல் அரண் ஆகும் என்கிறார் அய்யன் வள்ளுவர்.

அதற்கு இலக்கணமாகத் தமிழ்நாடு காவல்படை உருவாக்கி இருக்கிறது. இந்த நான்கு திறமையையும் மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற 86 புதிய துணைக் கண்காணிப்பாளர்கள் பயிற்சி முடித்துள்ளீர்கள். புதியதாக மக்கள் சேவையாற்றச் செல்லும் இந்தப் புதிய துணைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- துப்பாக்கிச் சுடுதல்,
- சைபர் குற்றங்கள் தொடர்பான கணினிப் பயிற்சி,
- தடயவியல் பயிற்சி,
- உடற்பயிற்சி உள்ளிட்ட அடிப்படைப் பயிற்சி
- போக்குவரத்தைத் திட்டமிட்டு நிருவகித்தல், நடைமுறைப்படுத்துதல்,
- போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்,
- பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைக் கையாளுதல் உள்ளிட்ட பயிற்சிகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்திறமைகளைப் பெற்ற நீங்கள், இத்திறமைகளின் மூலமாக மக்களைக் காக்கும் மகத்தான பணிக்கு உங்களை ஒப்படைத்துக்கொள்ள வேண்டும்.

புதியதாகக் காவல் களத்தில் இறங்கி உள்ள துணைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாகச் சொல்லத்தக்க மனிதராக உங்கள் காவல்துறைத் தலைமை இயக்குநரே இருக்கிறார். 1987ஆம் ஆண்டு கோபிச்செட்டிபாளையத்தில் உதவிக் கண்காணிப்பாளராகப் பணிக்குச் சேர்ந்த திரு. சைலேந்திர பாபு அவர்கள் இன்று தமிழ்நாட்டின் காவல்துறையின் தலைமைப் பொறுப்புக்கு வளர்ந்துள்ளார் என்றால் அதற்கு அவருடைய உழைப்பும் முயற்சிகளும் மிக, மிக முக்கியமானதாக அமைந்திருக்கிறது. அவரைப் போலவே, பல்வேறு திறமைகளையும் நீங்கள் அனைவரும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தில் இருக்கும் எத்தனையோ துறைகளைப் போலக் காவல்துறையும் ஒரு துறைதான் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. ஒரு அரசிடம் இருந்து மக்கள் முதலில் எதிர்பார்ப்பது, அமைதியைத்தான். அந்த அமைதியை ஏற்படுத்தித்

தர வேண்டிய பெரும் பொறுப்பு காவல்துறைக்குத்தான் உண்டு. எந்த ஒரு நாட்டிலும் சட்டம், ஒழுங்கு சிறப்பாக அமைந்துவிட்டால், பொதுமக்கள் பாதுகாப்பான சூழலை உணர்ந்துவிட்டால் அந்த நாட்டில் மற்ற செயல்களைச் சரியாகச் செய்யலாம்.

சட்டம், ஒழுங்கு சிறப்பாக அமைந்தால்தான் தொழில் சிறக்கும். முதலீடுகள் பெருகும். அச்சமற்று மனிதர்கள் தங்களது உழைப்பைச் செலுத்துவார்கள். கல்வி மேன்மை அடையும். வேலைவாய்ப்புகள் பெருகும். அத்தகைய அமைதியை உருவாக்கும் பணியை நீங்கள் செய்கிறீர்கள்.

குற்றங்களுக்குத் தண்டனை வாங்கித் தரும் துறையாக இல்லாமல், குற்றங்கள் நடக்காமல் தடுக்கின்ற துறையாகக் காவல்துறை மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. அந்த ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு அதிகம் இருக்கிறது.

ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகத்துக்கு இன்று நான் அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இன்றைக்கு இது மிக, மிக முக்கியமான தேவையாக இருக்கிறது. கொலை, ஆதாயக் கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, பாலியல் வன்முறைகள் ஆகியவை தான் மிகப்பெரிய குற்றங்களாக அடையாளம் காட்டப்பட்டன. ஆனால் இவை அனைத்தையும் விஞ்சியதாக சைபர் குற்றங்கள் பெருகிவிட்டன. தொழில்நுட்பம் வளர வளர அதனைக் குற்றம் செய்வோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

லுங்கி கட்டிக் கொண்டு கழுத்தில் கைக்குட்டை கட்டி இருந்தால் வழிப்பறி செய்பவர் என்பதைப் போல ஒரு காலத்தில் பத்திரிகைகளில் கேலிச்சித்திரம் போடுவார்கள். ஆனால் இன்று இணைய வசதி வந்ததற்குப் பிறகு அடையாளம் அற்ற, முகம் அற்ற குற்றவாளிகள் பெருகிவிட்டார்கள். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் குற்றங்கள் பெருகிவிட்டன. இணையவழிப் பொருளாதாரக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன.

தொழில்நுட்பச் சேவைகளைத் திருடுவது, தகவல்களை அழிப்பது, முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, இணையதளங்கள் மூலமாக மிரட்டுவது, போலிக் கணக்குகள், போலிப் பெயர்கள் ஆகியவை பெருகி வருகின்றன. இந்த இணையதளங்கள் மூலமாகப் பாலியல் குற்றங்களும் அதிகமாகி வருகின்றன. நிதிக் குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நவீனத் தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கான நவீன வழிமுறைகள் நமக்கும் வந்தாக வேண்டும்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் சைபர் குற்றங்களைத் தடுப்பதற்கான மிக நவீன வழிமுறைகளைப் பின்பற்றி வருகின்றன. அத்தகைய நவீன வழிமுறைகளை நாம் முழுமையாக அறியவேண்டும்.

2030க்குள் சைபர் குற்றங்கள் நடக்காத நாடாக மாற்றிக் காட்டப் போகிறோம் என்று ஐக்கிய அரபு நாடுகள் அறிவித்துள்ளது. எத்தகைய தொழில்நுட்பத்தை அவர்கள் உருவாக்கப் போகிறார்கள் என்பதைத் தமிழ்நாடு காவல்துறை தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கு நமது காவல்துறை நவீனமயமாக வேண்டும்.

காவல்துறையை நவீனமயமாக்கியதில் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. 1971ஆம் ஆண்டு காவல்துறையில் கணினிப் பிரிவு தொடங்கப்பட்டது. காவல்துறையில் கணினிமயமாக்கல் தொடங்கிய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடுதான் பெற்றது. தீவிரவாதிகளை ஒடுக்கச் சிறப்புப் பிரிவு தொடங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் முதன்முதலாகப் பெண் காவலர்களை நியமித்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பெண் துணை ஆய்வாளர்களையும் நியமித்தார். போலீஸ் பயிற்சிப் பள்ளியைத் திறந்து வைத்தவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். விரைவு அதிரடிப்படையை உருவாக்கியதும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக 1969ஆம் ஆண்டு ஆர்.ஏ.கோபாலசாமி தலைமையில் போலீஸ் கமிஷன் அமைத்ததும், முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் தலைமையில் 1989ஆம் ஆண்டு போலீஸ் ஆணையம் அமைத்ததும் கலைஞர் அவர்கள்தான். 2006இல் பூர்ணலிங்கம் இ.ஆ.ப., தலைமையில் மூன்றாம் போலீஸ் கமிஷன் அமைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இன்றைக்கு வீரதீரச் செயல்கள் புரியும் காவலர்களுக்கு அண்ணா பெயரால் விருது வழங்குவதைத் தொடங்கி வைத்ததும் கலைஞர் அவர்கள்தான்.

ஆட்சியில் இருக்கும்போது மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடிப்பதற்கு முன்பும் கலைஞர் அவர்கள் 'உதயசூரியன்' என்கிற நாடகத்தை எழுதினார். அது அன்றைய காங்கிரசு அரசால் தடை செய்யப்பட்டது. காவல்துறையைச் சேர்ந்த நண்பர்களின் துயரங்களைத்தான் அந்த நாடகத்தில் எழுதினார். எனவே, அவற்றை நாங்கள் தெளிவாக உணர்ந்துள்ளோம். காவல் துறையைச் சேர்ந்தவர்களது விருப்பங்கள், கோரிக்கைகள் அனைத்தையும் விரைவில் நிறைவேற்றித் தருவோம் என்ற உறுதிமொழியை இந்த விழாவில் அளிக்கிறேன்.

அனைவரையும் தாங்கிப் பிடிக்கும் நிலமாக இருங்கள்,

தாகம் தணிக்கும் நீராக இருங்கள்,

உயிரூட்டும் காற்றாக இருங்கள்,

அனைவருக்கும் பொதுவான வானமாக இருங்கள்,

தீயவையைப் பொசுக்கும் தீயாக இருங்கள்,

எப்போதும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருங்கள்,

மொத்தத்தில் மக்களின் காவல் அரணாக இருங்கள்,

அனைவருக்கும் எனது நல்வாழ்த்துகள்!

நன்றி வணக்கம்!

இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உள்ளரங்கு, வெளியரங்க மற்றும் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சிகளில் சிறந்து விளங்கிய பயிற்சித் துணைக் கண்காணிப்பாளர்களுக்குப் பதக்கங்களையும், ஒட்டுமொத்த பயிற்சியில் சிறந்து விளங்கிய பயிற்சி துணைக் கண்காணிப்பாளருக்கு டி.ஜி.பி. சிறப்பு வாளையும் வழங்கினார். மேலும், ரூ.10.28 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகக் கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

தியாகிகள் தினம்
17.07.2021

தியாகிகள் தினத்தையொட்டி மலர்தூவி மரியாதை

படமும்/செய்தியும்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் ஆகியோர் வெள்ளக்கோவில் நகராட்சி அலுவலக வளாகத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் செண்பகராமன், ஆர்யா (எ) பாஷ்யம், சங்கரலிங்கனார் ஆகியோர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் செண்பகராமன், ஆர்யா (எ) பாஷ்யம், சங்கரலிங்கனார் ஆகியோர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளையொட்டி மலர் தூவி மரியாதை

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.08.2021 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

மாமனிதர் தீரன் சின்னமலை

ஈரோடு மாவட்டம், காங்கேயம் அருகில் மேளப்பாளையம் என்ற சிற்றூரில் 1756ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி தீரன் சின்னமலை பிறந்தார். அவரின் தந்தையார் பெயர் இரத்தனசாமி கவுண்டர். தாயார் பெயர் பெரியாத்தா. இவரின் இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர்.

இவர் பழையக் கோட்டை பட்டக்காரர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதால் இளம் வயதிலேயே தீர்த்தகிரி சர்க்கரை எனப் பெயர் பெற்றார். தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே மல்யுத்தம், வில் பயிற்சி, வாள் பயிற்சி, சிலம்பாட்டம், தடிவரிசை போன்ற பயிற்சியைப் பெற்றுப் போர்ப் பயிற்சியில் சிறந்தவராக விளங்கினார்.

அப்போது கொங்கு நாட்டை மைசூர் மன்னர் ஆட்சி செய்ததால் கொங்குநாட்டு வரிப்பணம் சங்ககிரி வழியாக மைசூர் அரசிற்குச் சென்றது. ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற தீரன்சின்னமலை மைசூர் அரசுக்குச் செல்லும் வரிப்பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்கு விநியோகித்தார். அப்பொழுது வரி கொண்டு சென்ற வரி தண்டல்காரரிடம் சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையே ஒரு சின்னமலை பறித்ததாகச் சொல் என்று சொல்லி அனுப்பினார். அன்று முதல் சின்னமலை என்ற பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது.

1782இல் திப்புசுல்தான் மைசூர் சீரங்கப்பட்டணத்தில் ஆட்சிக்கு வந்து கிழக்கிந்திய கம்பெனியரை எதிர்த்து கடும்போர் செய்திருந்தார். அப்போது மாவீரன் சின்னமலை ஆயிரக்கணக்கான கொங்கு இளைஞர்களைத் திரட்டி மைசூர் சென்றார்.

எப்படியாவது சின்னமலையை ஒழிக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் முடிவு செய்தனர். அதன் விளைவாக 1801இல் ஈரோடு காவேரி கரையிலும், 1802இல் ஓடாநிலையிலும், 1804இல்

அரச்சநல்லூரிலும் ஆங்கிலேயருடன் நடைபெற்ற போர்களில் சின்னமலை பெரும் வெற்றி பெற்றார்.

போரில் சின்னமலையை வெல்ல முடியாது என்பதை உணர்ந்த ஆங்கிலேயர் சூழ்ச்சிமூலம் சின்னமலையைக் கைது செய்து சங்ககிரிக் கோட்டைக்குக் கொண்டு சென்று போலி விசாரணை நடத்தி 1805ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று தூக்கிலிட்டனர். அவர் தம்பியும், கருப்ப சேர்வையும் உடன் வீரமரணம் எய்தினர்.

மாமன்னன் ராஜேந்திர சோழன் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு

- மாமன்னன் ராஜேந்திர சோழனின் பிறந்த தினமான ஆடி திருவாதிரை விழாவினை சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையத்துறை சார்பில் அரசு விழாவாகக் கொண்டாட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.
- நடப்பாண்டில் தற்போது நிலவி வரும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக வரும் ஆண்டு முதல் இந்த விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

- **மாவீரன் பூலித்தேவனின் படைத்தளபதியாய் விளங்கி, ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்த மாவீரன் ஒண்டிவீரன்.**
- **வீரம் செறிந்த தமிழர் மரபில் ஒண்டிவீரன் அவர்களின் பெயர் என்றும் நினைவு கூரப்படும்.**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.08.2021 அன்று தலைமைச் செயலகத்தில், ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்களை வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களில் விற்பனை செய்ய மொத்த விற்பனையாளர்களுக்கு வணிக ஒப்பந்த ஆணை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் மற்றும் பேரறிஞர் அண்ணா பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின்கீழ், ரூ.1.04 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை நாள் வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் சென்னை நாள் வாழ்த்து

- சீர்மிகு, சிங்கார, வந்தாரை வாழவைக்கும் தருமமிகு சென்னை, பல அடையாளங்களுக்கும், சிறப்புகளுக்கும் சொந்தமானது.
- தொலைநோக்குப் பார்வையுடன் சென்னையின் வளர்ச்சிக்குப் பங்களித்தது திமுக அரசு; இனியும் தொடரும்.
- சென்னை மாநகர மக்களுக்குச் சென்னை நாள் (Madras Day) வாழ்த்துகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.08.2021 அன்று 75ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூறும் வகையில் சென்னை, காமராஜர் சாலை மற்றும் சிவானந்தா சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திர தின வைரவிழா நினைவுத் தூணைத் திறந்து வைத்தார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள் 14.08.2021 அன்று இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருக்கோயில்களில் பணிபுரிவதற்காக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின்கீழ், பயிற்சிபெற்ற 24 அர்ச்சகர்கள் உட்பட 208 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,